விலை – ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 209 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 08, செவ்வாய்க்கிழமை 23.06.2015



## சீன-இலங்கை கொமாண்டோ கூட்டுப் பயிற்சிகள் புத்தளவில்

கொழும்பு, ஜூன் 23

இலங்கை– சீன இராணுவத்தினரின் சிறப்புப் படைப் பிரிவுகள் மற்றும் கொமாண்டோப் படைப்பிரிவுகள் பங்கேற்கும் கூட்டுப் பயிற்சி நேற்று இலங்கையில் ஆரம்பமாகியுள்ளது.

பட்டுப்பாதைப் பயிற்சி 2015 போர்ப்பயிற்சியின் இரண்டாவது கட்டமே நேற்றுக் காலை புத்தளவில் உள்ள அதிகாரிகள் திறன் விருத்தி நிலைய மைதானத்தில் நடந்த ஆரம்ப நிகழ்வை அடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், பிரதம விருந்தினராகப் பங்கேற்றிருந்தார்.

இந்தக் கூட்டுப் போர்ப்பயிற்சி மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளது.

நேற்றுத் தொடக்கம் 2 8ஆம் திகதி [illegible]ரை முதற்கட்டப் பயிற்சி, கொமாண்டோ படைப்பிரிவின் ஊவா குடாஓயா பயிற்சிப் பாடசாலையிலும், இரண்டாம் கட்டப் பயிற்சி ஜூன் 28ஆம் திகதி தொடக்கம் ஜூலை 5ஆம் திகதி வரை கணேமுல்லவில் உள்ள பக்.24

# 20இன் பின்னணியில் இனவாத நிகழ்ச்சி நிரல்

## மக்களை எச்சரிக்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, ஜூன் 23

தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கான 20ஆவது திருத்தச் சட்டவரைவின் பின்னணியில் இனவாத நிகழ்ச்சிநிரல் இருக்கிறது. அது மீண்டும் ஒரு போராட்டத்துக்கு வித்திடும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் ஜே.வி.பி. நேற்று எச்சரித்தது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பத்தரமுல்லையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அங்கு கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே, அவற்றைத் திருத்தி அமைத்து ஜனநாயகத்தை பலப்படுத்தும் நோக்கில் புதியதொரு தேர்தல் சட்டம் அவசியம். இதை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம். எனினும், தற்போது வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமாகியுள்ள 20ஆவது திருத்தச் சட்டவரைவானது பல கட்சி ஜனநாயகத்தை அழித்து பிரதான இரு அரசியல் கட்சிகளுக்கு வழிகாட்டும் வகையிலேயே பக்.24

## நடேசன், புலித்தேவன் சரணடைவு தொடர்பிலான சாட்சியம் இன்று

### ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பக்க அமர்வுகளில் உறவினர்கள் விளக்குவர்

கொழும்பு, ஜூன் 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களான நடேசன் மற்றும் புலித்தேவன் உட்படப் பல [illegible]ராளிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் கொல்லப்பட்டனர் அல்லது காணாமற்போயினர் என்ற விவரங்களை அவர்களது உறவினர்கள் நாளை ஜெனீவாவில் நடைபெற்று பக்.24

## புதிய தேர்தல் முறைமையால் ஜே.வி.பி. மீள ஆயுதமெடுக்கும்

### எச்சரிக்கின்றார் அமைச்சர் ஹக்கீம்



யாழ்ப்பாணம், ஜூன் 23

ஜே.வி.பியினரை மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டத்துக்குத் தள்ளும் நிலைமைதான் புதிய தேர்தல் முறைமையால் ஏற்படப் போகின்றது என்று எச்சரித்தார் அமைச்சர் ஹக்கீம். நாங்கள் கொண்டு வந்த அரசு எங்கள் காலை வாரிவிடாமல் 20 ஆவது திருத்தச் சட்டத்தின் தற் போதைய வடிவத்தை மாற்றி வெற்றி பெறுவோம் என்றும் தெரிவித்தார்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளர் அலுவலகம் யாழ்.பண்ணைப் பகுதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அலுவலகத்தை திறந்து வைத்த அமைச்சர் சிறப்புரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இரணைமடுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்த அலுவலகம் அமைக்க திட்டமிடப்பட்டது. இனியும் அவ்வாறே செயற்படும். தற்போது 40 ஆயிரம் ஏக்கருக்கு நீர்வழங்கக்கூடிய வகையில் இரணைமடுக் குளத்தின் நீர் கொள்ளளவு காணப்படுகிறது. இந்த நிலையிலேயே விவசாயிகள் மேலதிக நீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவதற்கு தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்கின்றனர்.

எனவே எதிர்காலத்தில் அந்தக் குளத்தின் நீர் கொள்ளளவை 80 ஆயிரம் ஏக்கருக்கு ஏற்றதாக விஸ்தரித்து அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் திட்டத்தை நடை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு இங்குள்ள அரசியல்வாதிகள் எமக்கு பக்.24

## 20 பற்றிய இரு நாள் விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று

### நாளையும் தொடரும்; அரசின் நிலைப்பாட்டை ரணில் தெளிவுபடுத்துவார்

கொழும்பு, ஜூன் 23

20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இன்றும், நாளையும் விவாதம் நடத்துவதற்கு நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான அரசின் நிலைப்பாட்டை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விவாதத்தின் இறுதியில் பக்.24

# 90ஆம் ஆண்டு 264 பொலிஸாரே புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்

### 600 பேர் அல்லர் என ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுச் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

1990ஆம் ஆண்டு கல்முனையில் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர் எனக் கூறப்படும் 264 பொலிஸாரே கொல்லப்பட்டனர் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் 600 பொலிஸார் கொல்லப்பட்டனர் என்று இதுவரையில் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், பொலிஸ் திணைக்களத்தின் தகவல் தடீர்க் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அவதானிகள் தெரிவித்தனர்.

போரின்போது காணாமற்போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகிறது. இதன் ஓர் அமர்வாக பொலிஸார் கொல்லப்பட்டமை தொடர்பான சாட்சியப் பதிவு நேற்று இடம்பெற்றது. சாட்சியமளிப்பதற்காக பொலிஸ் மா அதிபர் அழைக்கப்பட்டிருந்தார். எனினும் அவருக்குப் பதிலாக அவரது பிரதிநிதி சாட்சியமளித்தார்.

கல்முனையில் 1990ஆம் ஆண்டு, 600 பொலிஸார் தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர் எனவும் இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் எனவும் கோரி, ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் சங்கத்தினால் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையிலேயே பொலிஸ் மா அதிபரின் சாட்சியம் கோரப்பட்டிருந்தது.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸ் திணைக்களம் கடந்த காலத்தில் நடத்திய விசாரணை அறிக்கையை, விசேட பிரதிநிதி ஆணைக்குழுவினரிடம் சமர்ப் பித்தார். அதில், 1990 ஆம் ஆண்டு குறித்த சம்பவம் இடம்பெற்றபோது, கல்முனை – பொத்துவில் – அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் 305 பொலிஸாரே பக்.24

## கொக்குவிலில் 200 ரவைகள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

வீடு கட்ட அத்திபாரம் வெட்டிய போது அதிலிருந்து வெளிப்பட்டன 200 துப்பாக்கி ரவைகள். அவற்றைப் பொலிஸார் மீட்டனர்.

கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் நேற்று முற்பகல் இவை கண்டறியப்பட்டன. இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

குறித்த காணியில் முன்னர் புலிகள் தங்கியிருந்தனர் என்று கூறப்படுகிறது. அது தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை நடத்துகின்றனர். (உ–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டர் ஆசிரியர்கள் ஒன்றுகூடுக

கிளிநொச்சி, ஜூன் 23
கிளிநொச்சி வலயத்தில் தொண்டராசிரியராகக் கடமையாற்றும் அனைவரும் தமது தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகளுடன் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்குக் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள எடிசன் கல்லூரிக்குச் சமுகம் தருமாறு கிளிநொச்சி மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.
ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் ஆசிரியர்களின் நியமனங்கள் தொடர்பில் சங்கம் எவ்வித பொறுப்பும் கூறமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## பேஸ்புக்கால் வந்த வினை

பேஸ்புக் தளத்திற்கு நீண்டகாலமாக அடிமையான மாணவி ஒருவர் தனது பெற்றோரை பொலிஸ் நிலையம் வரை அழைத்துச் சென்ற சம்பவம் வெள்ளவத்தையில் இடம்பெற்றுள்ளது.
கொழும்பு வெள்ளவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த சர்வதேசப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி ஒருவர், பேஸ்புக் மூலம் நண்பர்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி வந்துள்ளார்.
குறித்த மாணவியின் நடவடிக்கைகளை அவதானித்த அவரது பெற்றோர், மாணவியை அடித்துக் கண்டித்துள்ளனர்.
இதனையடுத்து, குறித்த மாணவி பெற்றோருக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்தப் பிரச்சினைக் குத்தீர்வு காண எதிர்வரும் 30ஆம் திகதி மாணவியின் பெற்றோரை நீதி மன்றத்துக்கு வருமாறு பொலி ஸார் அழைப்பு விடுத்துள்ளனர். (த)

# போர் முடிந்த பின்னரும் விமானக் கொள்வனவை நிறுத்தாத இலங்கை அரசு

கொழும்பு, ஜூன் 23
போர் முடிவடைந்து 6 ஆண்டுகள் கடந்தும்– விடுதலைப்புலிகள் தோற் கடிக்கப்பட்டுவிட்டதாக அரசு கூறி வரும் நிலையிலும் வெளிநாட்டில் இருந்து போர் விமானங்களை இலங்கை விமானப் படை கொள்வனவு செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
சீன– பாகிஸ்தான் கூட்டுத் தயாரிப்பான ஜே.எவ்–17 பலநோக்கு போர் விமானங்களை இலங்கை விமானப்படை கொள்வனவு செய்யவுள்ளதாகத் தாய்வானில் இருந்து வெளியாகும் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
பாகிஸ்தான் ஏரோநொட்டிக்கல் கொம்பிளக்ஸ் மற்றும், செங்டு எயார்கிராப்ட் கோப்பரேசன் ஆகியன இணைந்து தயாரித்துள்ள இந்த போர் விமானத்தைக் கொள்வனவு செய்யும் முதல்நாடு இலங்கையே என்று தாய்வான் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.
51ஆவது பரிஸ் விமானக் கண்காட்சியை அடுத்து ஆசிய நாடு ஒன்றுடன் இந்த விமானத்தை விற்பனை செய்வதற்கான உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளதாக, பாகிஸ்தான் விமானப்படையின் விற்பனை மற்றும் சந்தைப் படுத்தல் தலைவர், எயர் கொமடோர் காலித் மொகமட் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, 18 தொடக்கம் 24 விமானங்களுக்குக் கொள்வனவுக் கட்டளை கிடைத்துள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.
அதேவேளை, இலங்கை விமானப் படைத் தளபதியின் பணியகத்தில், ஜே எவ் –17 போர் விமானத்தின் மாதிரி வைக்கப்பட்டுள்ளதைக் காட் டும் ஒளிப்படம் ஒன்று வெளியான நிலையில், இலங்கையே இந்த விமானத்தைக் கொள்வனவு செய்யும் முதல்நாடாக இருக்கலாம் என்று ஊகங்கள் வெளியாகியுள்ளன.
அதேவேளை, 2017ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கு ஜே எவ்–17 விமானங்களை விநியோகிக்கவுள்ளதாக, பாகிஸ்தான் விமானப்படை தெரிவித்துள்ளதாகவும், தாய்வான் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.
அதேவேளை, தாய்வான் ஊடகத்தின் இந்தச் செய்தியை இலங்கை விமானப்படை மறுத்துள்ளது.
போர் விமானத்தைக் கொள்வனவு செய்வது குறித்து இன்னமும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று இலங்கை விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் கிகன் செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.
பாகிஸ்தானும், சீனாவும், இந்த விமானங்கள் கிடைக்கும் என்று தெரிவித்துள்ள நிலையில், இதற்கான பத்திரங்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. ஆனால், கொள்வனவு குறித்து இன்னமும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
ஜே எவ்–17 போர் விமானங்கள் இலகு ரகத்தைச் சேர்ந்தவையாகும். ஒற்றை இயந்திரம் பொருத்தப்பட்ட இந்தப் போர் விமானம், வான்வழிக் கண்காணிப்பு, தரைத் தாக்குதல், விமானங்களை இடைமறித்தல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்த முடியும். (த)

# மஹிந்தவை சந்திக்கிறது ஆறு பேர் கொண்ட குழு

கொழும்பு, ஜூன் 23
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆறு பேரைக் கொண்ட குழுவினர், முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவைச் சந்திக்கவுள்ளனர். நாளை 24 ஆம் திகதி இந்தச் சந்திப்பு நடத்தப்படவுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் ஆறு பேரைக் கொண்ட இந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் குழு நிறுவப்பட்டது.
ஏற்கனவே இந்தக் குழுவினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்திருந்தனர்.
கடந்த வெள்ளிக்கிழமையும் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியுடன் விசேட சந்திப்பு ஒன்று நடத்தப் பட்டிருந்தது.
இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப் பட்ட விடயங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் 24ஆம் திகதி விரிவாக ஆறு பேர் அடங்கிய குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோன் செனவிரட்ன தலைமையில் இந்தக் குழு நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது . (த)

# தேசியக் கொள்கை நாட்டுக்கு தேவை

### கூறுகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 23
நாட்டுக்கு தேசியக் கொள்கை அவசியம் எனவும் இந்தியாவில் அரசுகள் மாறினாலும் அதன் தேசிய கொள்கைகள் மாறுவதில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.
நாட்டின் தேவைக்கு அமைய இந்தியாவில் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.
இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.
இப்படியான தேசியக் கொள்கையின் முக்கியத்துவம் பற்றி அரசியல்வாதிகளுக்கு கற்றுக்கொடுப்பது புத்திஜீவிகளின் பொறுப்பாகும். இன்னும் கொஞ்ச நாள்களில் புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்படும். புதிய அமைச்சரவையில் 30 பேர் மாத்திரமே அங்கம் வகிப்பர்.
30 அமைச்சுக்களை வர்த்தமானியில் அறிவித்த பின்னர், தேசி[illegible] கொள்கைக்கான கட்சிகளின் இணக்கப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு புத்திஜீவிகளிடம் கேட்டுக் கொள்கிறேன்.
நாட்டின் எதிர்காலத்துக்கு தேவையான யுக மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகிறோம். 50 ஆம் 60 ஆம் ஆண்டுகளில் நாட்டில் ஓரளவு தேசியக் கொள்கை இருந்தது.
எனினும் கடந்த சில தசாப்தங்களாக அப்படியான தேசியக் கொள்கைக்குத் தடையேற்பட்டது. அரசுகள் மாறியபோது சில நல்ல கொள்கைகளைக் கூட ஏற்றுக்கொள்ளாத நடவடிக்கைகள் இடம்பெற்றன எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (த)

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஐந்து மாடிப் புதிய கட்டடம் நேற்று திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 23
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டத்தின் கீழ் யாழ். நகரில் நிர்மாணிக்கப்பட்ட ஐந்து மாடி புதிய கட்டடம் நேற்று வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.
282 மில்லியன் ரூபா செலவில் வடக்குக்கான உதவிப் பொது முகாமையாளர் மற்றும் யாழ். பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களுக்காக கட்டப்பட்ட இக்கட்டடத்தில் புதிய தொழில்நுட்ப தொழில் நுணுக்கத்தின் அடிப்படையில் உட்கட்டு மானம் அமைக்கப்பட்டுள்ளது.
இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய நீர்வழங்கல் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டார். மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ். பளிஹக்கார, வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நீர்வழங்கல் சபையின் பிரதி அமைச்சர் துனேஷ் கங்கந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
இதுவரை காலமும் தேசிய நீர் வழங் கல் வடிகாலமைப்புச் சபைக்கு என வடக்கில் நிரந்தரக் கட்டடம் இருக்கவில்லை. இந்நிலையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ் – கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டம் 164.4 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக யாழ். பிராந்திய ரெலிக்கொம் நிறுவனத்துக்கும் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவல கத்துக்கும் இடைப்பட்டதான இடத்தில் நவீன பொறிமுறை வசதிகளுடன் உட்கட்டுமானத்துக்கென 282 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு கட்டப்பட்டுள்ளது.
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சேவைகள் 1965 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு 1970 இல் முழு அளவில் விஸ்தரிக்கப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாடாளுமன்ற சட்டத்தின் முன் ஒரு தனி அமைச்சாக பதிவு பெற்றது.
2010 முதல் 2015 வரை நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் இயங்கிய இந்த நிறுவனம் இன்று நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது.



அரசானது 2015 ஆம் ஆண்டு இறுதியில் மொத்த சனத்தொகையில் 94 வீதமானவர்களுக்கும் 2020 ஆம் ஆண்டு 100 வீதமானவர்களுக்கும் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குவதற்கும் திட்டத்தை செயற்படுத்துகிறது.
மேலும் தேசிய நீர் வழங்கல் சபையின் மூலம் 13 ஆயிரத்து 296 இணைப்புக்களையும், 66 ஆயிரத்து 480 பயனாளிகளுக்கு 33 வீதமான நீர்வழங்கல் சேவைகளை வழங்கியுள்ளது.
இந்தச் சேவை நிலையானது, எதிர் வரும் காலங்களில் பாவனையாளர் சேவை நிலையாகவும், குழாய் மூலம் சுத்தமான குடிதண் ணீரை வழங்கவும், குழாய் மூலம் பாதுகாப்பான கழிவகற்றல் சேவை, குடிதண்ணீர் வழங்கல் நிலைகளை பரிபாலித்தல், புதிய மூலங்களில்இருந்து நீர் வழங்கு தல், நீர் பகுப்பாய்வு, நீர் தரப்பரி சோதனை, நிலக்கீழ் நீர் பரிசோ தனை, குழாய் கிணறு அமைத்தல் ஆலோசனை, கிராமிய நீர்வழங்கல் திட்டம், ஆலோசனை தொழில் நுட்ப உதவிகளை வழங்கல், பாவ னையாளர் முறைப்பாட்டு தீர்வு, பவுசர் மூலம் நீர்சேவை வழங்கல், நிலத்தடி நீர் பராமரிப்பு மற்றும் மழை நீர் சேமிப்புத் திட்டம், புதிய நீர் மூலங்களை அடையாளப் படுத் தல், பாவனையல்லாத நீர் மூலங் களை மீள் புனரமைத்தல், நீர் வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலகவங்கி நிதி நிறுவனங்களிடமிருந்து இலங்கை அரசு ஊடாக நிதி மூலங்களை பெற்றுகொள்வதற்கான திட்டவரைபுகளை உருவாக்குதல் போன்ற முன்னோக்கு திட்டங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.
மேலும் வடக்கில் உள்ள 5 மாவட்டங்களிலும் 2020 இல் 100 வீதமான பாதுகாப்பானதும் சுத்தமானதுமான குழாய் வழி நீரை வழங்குவதுடன் 85 வீதமான பாதுகாப்பான கழிவகற்றல் சேவைகளையும் முன்னிறுத்தி செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (ற–4,101)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளை ஒழிக்க ராணுவம் தேவை வடக்குக்கு

## இப்படிக் கூறுகின்றார் விமல் எம்.பி.

கொழும்பு, ஜூன் 23
வடக்கில் போதைப்பொருள்களின் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் இராணு வத்தினர் அங்கிருந்து அகற்றப்படக் கூடாது என்று கூறியுள்ளார் முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.



வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து விட்டதாக கூச்சலிடுபவர்கள், இராணுவத்தினரை வெளியேற்றுமாறு கோருவது முறையா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாரஹென்பிட்டிய அபயராமையில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

100 நாள்களுக்குள் புதிய நாட்டிற்கு பதிலாக குழப்பமான நாடு உருவாகியுள்ளது. சிலருக்கு முன்னாள் ஜனாதிபதி தற்போது வரையில் அச்சுறுத்தலாக உள்ளார். மஹிந்த ஜனாதிபதியாக இருந்த போது நாட்டில் வாழும் மக்களின் வறுமை ஒழிக்கப்பட்டது. கல்வி உட்பட அனைத்துத் துறைகளும் அபிவிருத்தி அடைந்து காணப்பட்டன. தற்போதைய ஆட்சியில் அப்படியல்ல. அவை அனைத்தும் பின்னோக்கியே செல்கின்றன என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தினரை வெளியேற்றுமாறு பலர் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். அதேவேளை யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து விட்டதாக கூச்சலிடுகின்றனர்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதில் இராணுவத்தினரும் பெரும் பங்காற்றியிருந்தனர். இவ்வாறான நிலையில், வடக்கிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றினால் போதைப்பொருள் பாலனைக் கட்டுப்படுத்தப்படுமா? இராணுவத்தினரின் வெளியேற்றம் நியாயமாகுமா?. என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

இந்த அரசு முன்னாள் போராளிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது இந்த நாட்டிற்கான ஓர் அச்சுறுத்தலாகும் என்று குறிப்பிட்ட வீரவன்ஸ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. அதற்காக பலதடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது சாத்தியப்படவில்லை என்றும் கூறினார்.

எமது தலைவரை நாம் கைது செய்யவிடமாட்டோம். அவரை எவ்வாறான வழியில் கைது செய்ய முயற்சித்தாலும் நாம் அதனைத் தடுத்து நிறுத்துவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

### பிரபாகரன் சிலையின் துப்பாக்கியாலும் ஆபத்து!

சென்னை, ஜூன் 23
தமிழ் நாட்டில் மீளவும் அமைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சிலையிலிருந்த துப்பாக்கி, தமிழகப் பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விழுப்புரம் மாவட்டத்தின் கண்டமங்கலம் அருகே உள்ள ஐயனாரப்பன் கோவிலில், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் வீரப்பன் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை கடந்த 5 வருடங்களுக்கு முன்னரே அமைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் பொலிஸாருக்கு தற்போது தகவல் கிடைத்து அதனை நேரில் சென்று பார்வையிட்டனர். இதன் போது சிலையிலிருந்து சிலவற்றை அகற்றுமாறு பொலி ஸார் அந்த ஊர் மக்களுக்கு உத்தரவிட்டனர். அதற்கமைய தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உருவச் சிலையில் இருந்த தொப்பி, பெல்ட், துப்பாக்கி மற்றும் வீரப்பன் சிலையில் இருந்த மீசை ஆகியவற்றை கிராம மக்கள் அகற் றினர்.

இதேவேளை தமிழ கத்தின் நெய்வேலியில், அமைக்கப்பட்டி ருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் பிரபாகரனின்சிலை அண்மையில் அகற் றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

### மாடுகள் கடத்திய மூவர் கைது

தென்மராட்சி, ஜூன் 23
அனுமதிப்பத்திரமின்றி பாரவூர்தியொன்றில் 5 மாடுகளைக் கொண்டு சென்ற மூன்று சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.கிளாலிப் பகுதியிலிருந்து சாவகச் சேரிக்கு மாடுக ளைக் கொண்டு செல்லும் போது, பொலிஸாரின் சோதனையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. பளை மற்றும் சாவ கச்சேரி பகுதியை சேர்ந்த இரு வரும் – பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையைக் கண்காணித்து மாடு கடத் துவதற்கு உதவிய மேலும் ஒருவரும் கைது செய்யப் பட்டுள்ளனர். மூவரையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக் கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(ற)

# வன்னி தொண்டர் ஆசிரியர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சு முன்பாக

யாழ்ப்பாணம், ஜூன் 23
வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரி யர்கள் நேற்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு முன்பாக கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். தமக்கான நிரந்தர நியம னங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோரி அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



தமது விவரங்கள் அனைத்தும் மத்திய கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் நியமனம் பற்றிய நடவடிக்கைகளை இனி மேல் மத்திய கல்வி அமைச்சே தீர்மானிக்க வேண்டும் என்று தமக்கு பதிலளிக்கப்பட்டது என்று தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் இ.ஜெயராஜ் கூறினார். இந்தப் பதிலால் தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து சேவையாற்றும் ஆசிரியர்கள், 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இருந்து சேவையாற்றும் ஆசிரியர்கள் என்று இருவகைப்பட்ட பட்டியல் அமைச்சின் செயலாளரிடம் கையளிக் கப்பட்டது என்றும் அவர் கூறினார். (ற-4)

### இரசாயன சோதன்னயில் நூடில்ஸ் வகைகள்

கொழும்பு, ஜூன் 23
இந்தியாவில் 'மகி' நூடில்ஸ்தடை செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இலங்கையில் சகல வகையான நூடில்ஸ் களையும் இரசாயன பரிசோத னைக்கு உட்படுத் துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மகி நூடில்ஸில் தேவைக்கு அதிகமான அளவு இரசாயனப் பொருள்கள் கலப்பதாக குற்றச் சாட்டு எழுந்தது. இதன்னயடுத்து, இந்தியா முழுவதும் 'மகி' நூடில்ஸ் விற்பனைக்கு தடை விதிக்கப் பட்டதுடன், விற்பனைக்கு இருந்த சகல நூடில்ஸ் பக்கெட்டுக்களும் திரும்பப் பெறப்பட்டன.

இவ்வாறானதொரு நிலையிலேயே இலங்கையிலும் நூடில்ஸை சோதனை செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன நாடளாவிய ரீதியிலிருந்து சேகரிக்கப்படும் நூடில்ஸ்களின் மாதிரிகள் கைத்தொழில் தொழிற் நுட்ப நிறுவகத்துக்கு பரிசோத னைக்கு அனுப்பிவைக்கப்படும். அதன் மூலம் பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டு பெறப்படும் முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படும் என்று தெரி விக்கப்படுகின்றது. (ற-5)

### பல்கலை மாணவருக்கு வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட 2013/2014 ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கான கலை மாணி மற்றும் கலைமாணி (மொழி பெயர்ப்பு) கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவை மேற்கொண்ட மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

கைலாசபதி கலையரங்கில் முற்பகல் 9 மணிக்கு குறித்த மாணவர்களைச் சமூகமளிக்குமாறு கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் கேட்டுள்ளார். விடுதி வசதி தேவைப்படும் வெளிமாவட்ட மாணவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னர் விடுதிக்கு வருகை தருமாறும் நிகழ்ச்சி நிரலை கலைப்பீடாதிபதி அலுவலக அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ற-4)

# வளலாயில் மீளக்குடியமர்ந்தோருக்கான முதற்கட்ட அரை நிரந்த வீடுகள் தயார்

## விரைவில் அவை பயனாளிகளுக்கு வழங்கப்படும்

அச்சுவேலி, ஜூன் 23
வளலாயில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்காக அமைக்கப்பட்டு வரும் அரை நிரந்தர வீடுகளில் 21 வீடுகள் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தில் 70 அரை நிரந்தர வீடுகள் நிர்மானிக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீடும் 200 சதுர அடி விஸ்தீரணத்துடன், ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படுகின்றது. ஆறு தூண்கள், அரைச்சுவர், சிமெந்து நிலம், தகட் டாலான கூரை [illegible] இந்த வீடுகள் அமையும். இதற்கான நிதி அனுரணையை யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனம் வழங்க, ஜெசாக் நிறுவ னம் நிர்மாணிக்கின்றது.

வளலாய் மீளக்குடியேற்றப் பகுதியில் அமர்ந்திருந்து காணிகளை திருத்தி அமைக்க, வேலைக்குச் செல்வதற்கு மற்றும் வேலை உபகரணங்களைப் பாதுகாத்து பயன்படுத்துவதற்கு வசதியாக இந்த வீடுகள் வழங்கப்படுகின்றன. முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 21 [illegible] கையளிக்கப்படவுள்ளன. 2ஆம் கட்டமாக 24 பயனாளிகளுக்கான வீடு கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. மிகுதி 25 வீடுகளும் மூன்றாம் கட்டமாக நிர்மாணிக்கப்பட வுள்ளன.

அதேவேளை, இவ்வாறான அரை நிரந்தர வீடுகளை பெற்றுக் கொண்டால் மீளக்குடியேற்றம் தொடர்பாக கிடைக்கக்கூடிய நிரந்தர வீட்டுக்கான தெரிவில் தாங்கள் புறந்தள்ளப்பட்டு விடுவோம் என்ற குழப்பம் மீளக்குடிய மர்ந்தவர்களி டையே காணப் படுகின்றது. ஆயினும் நிரந்தர வீட்டுத் திட்ட நன்மை களுக்கும் அரை நிரந்தர வீடுகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அதிகாரி

### ரயில் மோதி யானை படுகாயம்

மட்டக்களப்பு, ஜூன் 23
கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதி யானை ஒன்று படுகாய மடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

ரயில் மோதியதில் தூக்கி வீசப்பட்ட குறித்த யானையின் பின் கால்கள் செயலிழந்துள்ளன என்றும் யானைக்குச் சிகிச்சை வழங்கப் படுகின்றது என்றும் வனவிலங்குத் திணைக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் களப்புகளின் எல்லைகள் வரையறை

யாழ்ப்பாணம், ஜூன் 23

நாடாளாவிய ரீதியில் சுமார் 74 பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ் உள்ள களப்புகளை எல்லைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் களப்புகளின் எல்லைகள் வரையறுக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக நந்திக் கடல் களப்பு எல்லைகள் வரையறுக்கப்படவுள்ளன என்று கரையோர பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களப்புகளை பாதுகாக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார்.

களப்புகளை எல்லைப் படுத்துவதன் ஊடாக அதனை அண்மித்து வாழும் மீனவர்களின் பொருளாதார நிலை மேம்படுத்தப்படுவதோடு மீன்பிடியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் சுமார் 74 பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள களப்புகளை எல்லைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தின் கரையோர பாதுகாப்புத் திணைக்களம் குறிப்பிடுகையில் – தமது பிரதேசங்களிலும் களப்புகளின் எல்லை வரையறை செய்யப்படவுள் ளதாக தெரிவித் தனர்.

இந்த நடவடிக்கையானது நாடு பூராகவும் உள்ள அனைத்து களப்புகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார். (ற-4)

# 3 வயது சிறுமியை கிளிநொச்சியில் காணவில்லை என்று முறைப்பாடு

## 15 வயதுச் சிறுவன் ஒருவன் கைது பொலிஸார் தீவிர விசாரணை

கிளிநொச்சி, ஜூன் 23

கிளிநொச்சி – உருத்திரபுரம் எள்ளுக்காடு பகுதியில் 3 வயதுச் சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளார். இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. தயா விதுஷா என்ற சிறுமியையே காணவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தான் மகளை தனியே விட்டு விட்டு நீராடச் சென்றதாகவும், திரும்பி வந்து பார்த்த போது மகளைக் காணவில்லை என்றும் சிறுமியின் தாயார் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டை அடுத்து இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். நேற்று இது தொடர்பில் 15 வயதுச்சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின்போது தான் சிறுமியை துஷ்பிரயோகம் செய்து கொலை செய்ததாகவும் – உடலை மரத்தில் கட்டித் தொங்கவிட்டதாகவும் சிறுவன் கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் சிறுவன் இந்தச் சம்பவம் நடந்த இடத்தைக் கூறவில்லை என்று பொலிஸார் கூறினர்.

சிறுமியின் நிலை மர்மமாகக் காணப்படும் நிலையில் இந்தச் சம்பவம் அந்தப் பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் – அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

# கட்டிலின் கீழ் ஒளித்திருந்த இளைஞருக்கு மறியல்



தென்மராட்சி, ஜூன் 23

கொடிகாமம், மீசாலை பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்து கட்டிலுக்கு கீழ் ஒளிந்திருந்த 23 வயதுடைய இளைஞனை, எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

மாடிவீடான மேற்படி வீட்டில் வீட்டிலுள்ளவர்கள் கொழும்புக்குச் சென்றமையால் பெண் ஒருவர் தனிமையில் இருந்துள்ளார். கடந்த சனிக்கிழமை இரவு வீட்டுக்கு அருகில் ஒருவர் நடமாடியதுடன் நாய் கடுமையாக 'குரைப்பதை அவதானித்த பெண், கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

வீட்டுக்குச் சென்ற பொலிஸார் வீட்டுக்குள் கட்டிலொன்றுக்கு கீழ் பதுங்கியிருந்த 23 வயதுடைய இளைஞனைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து குறடு, கத்தி உள்ளிட்ட பொருட்களையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.(ற)

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன



யாழ்ப்பாணம், ஜூன் 23

சர்வதேச கணவரற்ற பெண்கள் தினம் நேற்று உலகம் பூராவும் கடைப் பிடிக்கப்பட்டது. அதையொட்டி பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாகத் தென்னங்கன்றுகளை வழங்கும் திட்டமொன்றை வடமாகாண சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் முன்னெடுத்துள்ளது.

இதன் தொடக்க நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தென்னங்கன்றுகளை வழங்கினார்.

தென்னை ஆராய்ச்சி நிலையத்தால் உருவாக்கப்பட்ட கலப்பு இனமான சீ.ஆர்.ஐ60 என்ற தென்னை ரகமே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களிலும், அம்மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இவ்வாறு தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட உள்ளன.

நெதர்லாந்து மனித நேயச் செயற்பாடுகளுக்கான கூட்டுறவு அமைப்பின் நிதி உதவியுடனேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சிக்க னக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் செ.இரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமா காண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.கணேசு, தென்னை அபிவிருத்திச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் ஆகியோரோடு சிக்கனக்கடன் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் மாவட்டத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (ற)

# இந்திய வியாபாரிகளை நாடு கடத்த உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 23

சுற்றுலா நுழைவிசைவில் இலங்கைக்கு வந்து புடவை வியாபாரம் மற்றும் போதைப்பாக்கு விற்ற இரண்டு இந்திய வியாபாரிகளுக்கு 10 ஆயிரம் அபராதம் விதித்தும், 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 1 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் தீர்ப்பளித் தார்.

அத்துடன், இருவரையும் யாழ். சிறைச்சாலையூடாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து நாடு கடத்துமாறு நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

தமிழ்நாடு கிருஸ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த முருகானந்தன் தினேஸ்குமார் (வயது 25), தமிழகம், திருப்பூரைச் சேர்ந்த சுப்பிரமணியம் செந்தில்குமார் (வயது 32) ஆகிய இரண்டு வியாபாரிகளை கடந்த 18ஆம் திகதி புலோலி தெற்குப் பகுதியில் வைத்து பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து ஒரு தொகை சல்வார்கள் மற்றும் 239 பாக்குகள் என்பன கைப்பற்றப்பட்டன. நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட இருவரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். தொடர்ந்து நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டதுடன் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சல்வார்களை அரசுடமையாக்குமாறும் உத்தரவிட்டார். (ற)

# மதிதயான் கொலை தொடர்பில் இருவர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, ஜூன் 23

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தராக கடமையாற்றிவந்த சச்சிதானந்தம் மதிதயான் கடந்த 26ஆம் திகதி மட்டக்களப்பு,மண்டூரில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மூன்று பேரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்ததாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

முன்னதாக பட்டிப்பளை பிரதேசத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டு, கொழும்பு புலனாய்வு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து மற்றைய இருவரும் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்து ள்ளனர். (ற)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 23

தென்மராட்சி மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலையின் செல்லமுத்து கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் வி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் ஹரிசயந்தன் கலந்துகொள்வார். (ஐ)

இளைஞர் யுவதிகளை சமூக சீர்கேடுகளில் இருந்து பாதுகாத்து அவர்களை வலுப்படுத்தும் வகையிலான விசேட விழிர்ப்புணர்வு நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் இரவு மன்னார் பேசாலையில் இடம் பெற்றது.

திருமறைக் கலாமன்றமும், கெயார் நிறுவனமும் இணைந்து குறித்த விழிப் புணர்வு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

மன்னார், மாந்தை மேற்கு, நானாட்டான் ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள இளைஞர் யுவதிகளை உள்ளடக்கி கலைப்பொழுது எனும் தொனிப் பொருளில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த நிகழ்வானது சமூக சீர்கேடுகளில் இருந்து இளைஞர் யுவதிகளை பாதுகாத்து வலுவூட்டும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாக இடம் பெற்றது. (ற)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த அரசால் நாட்டு மக்கள் கடனாளிகள்

## வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 23

கடந்த அரசின் காலத்தில் இந்த நாட்டில் இடம் பெற்ற பெரும் வீண் விரயங்கள் காரணமாக நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபா வெளிநாடுகளுக்கு கடனாளியாகியுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இவ்வாறான வீண்விரயங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுமே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி நிவித்திகல பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

100 நாள்களுக்குள் நாங்கள் மேற்கொண்ட வேலைத்திட்டங்கள் குறித்து மக்களுக்கு போதுமான தெளிவூட்டல்கள் வழங்கப்படுவதில்லை. இது எங்களது தவறா அல்லது எமது செயற்பாட்டின் தவறா என தெரியவில்லை. என்றாலும் நாங்கள் செய்யும் வேலைகள் குறித்து பிரபல்யம் போதாது.

கடந்த காலங்களில் வேலைகள் செய்ததை விட பெயர்ப்பலகைகள் காட்சிப் படுத்தியதுதான் அதிகம். ஒருசில பாதைகளுக்குத் தேவையான பணம் ஒதுக்குவதற்கு முன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில பாதைகளை அமைப்பதற்கு தேவையான பணத்தையும் விட பன்மடங்கு செலவிட்டுள்ளனர். இது பெரும் வீண்விரயமாகும். இந்த பணம் அனைத்தும் ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்களுக்கே சென்றடைந்தன.

அதன் காரணமாக நாங்கள் அரசை உருவாக்கி வீண் விரயங்களை குறைப்பதற்காக தற்காலிகமாக பாதைகள் அமைப்பதை நிறுத்தினோம். வீண் விரயங்களை நிறுத்திவிட்டு மீண்டும் அந்த வேலைகளை ஆரம்பிப்போம். அவ்வாறில்லாமல் நாங்கள் ஒருபோதும் அபிவிருத்திகளை நிறுத்தவில்லை. எனவே கடந்த அரசில் இடம்பெற்ற வீண்விரயங்களால் நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபா வெளிநாடுகளுக்கு கடனாளியாகியுள்ளனர். இதற்கு முன்னாள் ஜனாதிபதியும் அந்த அரசின் அமைச்சர்களுமே பொறுப்புக் கூறவேண்டும்.- என்றார். (ற)

# தேர்தலின் பின்னர் பிரதமர் மஹிந்தவே

## அடித்துக் கூறுகின்றார் வாசுதேவ



கொழும்பு, ஜூன் 23

பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சி உருவாவது நிச்சயம். அதனை எவராலும் தடுக்க முடியாது எனத் தெரிவித்த முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார, சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட் டியிட வேண்டிய நிலைமை மஹிந் தவுக்கு கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுதந்திரக் கட்சியில் அல்லாது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலேயே பிரதமர் வேட்பாளராக மஹிந்த களமிறங்க வேண்டிய அவசியம் கிடையாது. அந்தக் கட்சிகளில் வேட்பு மனு வழங்கப்படாவிட்டால் எத்தனையோ அரசியல் கட்சிகள் தங்களது அரசியல் சின்னங்களின் கீழ் மஹிந்தவை போட்டியிடச் செய்வதற்கு தயாராகவே உள்ளன.

இவ்வாறு ஒரு கட்சியில் கூட்டணியாக இணைந்து மஹிந்தவை தலைமைத்துவ வேட்பாளராக களமிறக்கி பொதுத் தேர்தலில் போட்டியிடுவோம். நிச்சயம் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவார்.

அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் இந்நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே. இதனை எவராலும் தடுக்க முடியாது. பொதுத் தேர்தலில் எமது பிரதான எதிரி ஐ.தே கட்சியாகும். அதற்கு எதிராகவே எமது தேர்தல் பரப்புரை வியூகம் அமைக்கப்படும். அதேவேளை ஐ.தே. கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து கூட்டரசை அமைக்க முயற்சிக்கும்.

அவ்வாறானதோர் நிலையில் நாம் ஏனைய கட்சியினரோடு இணைந்து கூட்டரசை அமைக்க முயற்சிப்போம்.- என்றார்.

அதேவேளை மஹிந்த ராஜபக்ஷவை தேர்தலில் பிரதமர் வேட்பாளராக களமிறக்குவதற்கான அணி தயார்படுத்தப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் தேர்தல் விஞ்ஞாபனமும் தயாரிக்கப் பட்டுள்ளது என்றும் அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. (ற)

# தமிழ், முஸ்லிம் வாக்குகள் அரசமைக்க தேவை- மைத்திரி

கொழும்பு, ஜூன் 23

அரசை நிறுவுவதற்கு தமிழ் - முஸ்லிம் வாக்குகள் தேவை. தனித்து சிங்கள - பௌத்த வாக்குகளை மாத்திரம் வைத்துக் கொண்டு அரசு அமைக்க முடியாது. இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தெரிவித்துள்ளார்.

நுவரெலிய மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதிகளுடனான சந்திப்பில், உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசு அமைக்க வேண்டுமாயின், சிங்கள - பௌத்த - தமிழ் - முஸ்லிம் ஆகிய அனைத்து இன மக்களினதும் வாக்குகள் அவசியம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினாலோ அல்லது வேறு எந்த கட்சியினாலோ, சிங்கள - பௌத்த வாக்குகளால் மட்டும் அரசை அமைத்துவிட முடியாது.

கட்சிக்குள் எவரையும் வெட்டி விடுவதற்கோ, வேரறுக்கவோ வேண்டிய தேவை எனக்கு இல்லை. எனது தேவை எல்லாம் நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக சகோதரத்துவத்துடன் இணைந்து செயலாற்றி அரசைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதேயாகும், என்றும் அவர் கூறினார். (ற-5)

# 20ஐ நிறைவேற்றுவதற்கு உகந்த காலம் இதுவல்ல

## தயான் சுட்டிக்காட்டுகின்றார்



கொழும்பு, ஜூன் 23

தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ள 20ஆவது திருத்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு பொருத்தமற்ற காலப்பகுதியே தற்போது காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

பொதுத்தேர்தல் ஒன்றை அனைவரும் எதிர்பார்த்துள்ள நிலையில் தமது பிரதிநிதித்துவங்களை மட்டுமே கருத்தில் கொள்வதால் பொது உடன்பாட்டுக்கு அரசியல் கட்சிகள் வரமுடியாத நிலையில் இருப்பதே யதார்த்தமாக உள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

20ஆவது திருத்தச் சட்டமூலம் சிறுபான்மை, சிறு அரசியல் கட்சிகளின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அமைச்சரவையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புதிய அரசு ஆட்சியில் அமர்ந்து ஆறுமாதங்கள் கடந்துவிட்டன. 100 நாள் வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பல்வேறு வாக்குறுதிகளை அவர்களால் அந்தக் கால வரையறைக்குள் நிறைவேற்ற முடியாது போயுள்ளது. இவ்வாறான நிலையில் 100 நாள் வேலைத்திட்டம் நிறைவடைந்தும் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றே உறுதியளித்திருந்தார்கள். ஆனால் தற்போது வரை அவ்விடயம் தொடர்பில் உறுதியான நிலைப்பாடொன்றை எடுக்க முடியாது இருக்கின்றார்கள். நாடாளுமன்றத்தில் சிறு பான்மையாகக் காணப்படும் ஐக்கிய தேசிய கட்சி தலைமையில் தொடர்ந்தும் அரசை முன்னெடுக்க முடியாது ஆகவே பொதுத்தேர்தல் ஒன்றுக்கு உடனடியாக செல்ல வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறான நிலையில் தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்தும் 20ஆவது திருத்த சட்ட மூலத்தை நிறைவேற்றியபின் தேர்தலை நடத்தலாம் என கூறுவது பொருத்தமற்றதாகும். காரணம் அடுத்து பொதுத்தேர்தல் இடம் பெறவிருப்பதால் பிரதான கட்சிகள் உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் தமது பிரதநிதித்துவங்களை நாடாளுமன்றத்தில் அதிகரிப்பதற்குரிய வகையிலான யோசனைகளையே முன்வைப்பார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு தரப்பினரும் தமக்கு சாதகமான யோசனைகளை முன்மொழிவதால் பொது இணக்கப்பாடொன்றுக்கு வர முடியாத நிலை நீடிக்கின்றது.

இதுவே யதார்த்தமாக இருக்கையில் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலுக்கு சென்ற பின்னர் தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்தும் 20ஆவது திருத்தம் தொடர்பில் பூரணமான ஆய்வொன்றை மேற்கொண்டு இறுதி முடிவுகளை எடுப்பதே சிறந்ததாகும்.

19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் போது அனைத்து தரப்பினரிடமும் ஜனாதிபதியிடம் காணப்படும் நிறைவேற்று அதிகாரத்தை குறைக்கவேண்டும் அல்லது இல்லாதொழிக்கவேண்டும் என்ற பொது நிலைப்பாடொன்று இருந்தது. அதில் கூட பல்வேறு சர்ச்சைகள் எழுந்தபின்னரே இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால் 20ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பிலான கட்சிகளின் நிலைப்பாடுகள் முன்னுக்குப் பின் முரனாகவே உள்ளன. தேசிய அரசுஆட்சியில் இருக்கின்றபோதே இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றலாம் என கூறுவது ஒரு புறத்தில் நியாயமாக இருக்கின்ற போதும் அதற்கான சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டார்கள். குறிப்பாக 19ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அனைத்து தரப்பினரும் பொது இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட 100 நாள் கால எல்லையையும் தாண்டவேண்டியிருந்தது. அதனை கருத்திற்கொண்டு 19, 20 ஆவது சட்டமூலங்களை ஒரே நேரத்தில் சமர்ப்பித்திருந்தால் இவ்வாறான நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்காது. - என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிலும் விடாமுயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் செயற்பாடு, மனதுக்கு ஆறுதல் தரும்.

**இடபம்:** தைரியக் குறைவும், செயலில் தாமதமும் ஏற்பட வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறுவீர்கள். உடல் நலனுக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** இனிய அணுகுமுறையால் நன்மை காண்பீர்கள். புதியவர்களின் அறிமுகத்தால், மகிழ்ச்சி உருவாகும். தொழில் வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு நல்ல முறையில் நடந்தேறும்.

**கடகம்:** திடீர் செலவால், சேமிப்புப் பணம் கரையும். தொழில், வியாபாரத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது. மனைவியின் கருத்துக்கு மதிப்பளிப்பீர்கள். உடல்நலனில் அக்கறை செலுத்துவது அவசியம்.

**சிங்கம்:** செயற்பாட்டில் புத்திசாலித்தனம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபார வளர்ச்சி உண்டாகும். நண்பர்களின் தேவை அறிந்து உதவுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடந்தேறும்.

**கன்னி:** சுய தேவையை பூர்த்தி செய்ய ஆவல் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவை. ஆடம்பர செலவு செய்யும் சூழல் உருவாகலாம். வாகன பயணத்தில் மிதவேகம் அவசியம்.

**துலாம்:** எதிலும் கலையுணர்வை வெளிப்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கண்டு மகிழ்வீர்கள். பிள்ளைகள் வழியில் ஆடம்பரச் செலவு உண்டாகும்.

**விருச்சிகம்:** பொதுநல நோக்குடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முதலீட்டை அதிகரித்து, இலாபம் காண்பீர்கள். உறவினர்களிடம் கருத்துவேறுபாடு நீங்கும். வெகுநாளாக வாங்க நினைத்த பொருளை வாங்கலாம்.

**தனுசு:** எப்போதும் பரபரப்புடன் காணப்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி இருந்தாலும், இலாபம் குறையாது. மனைவியின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**மகரம்:** நண்பர்களுடன் கருத்துவேறுபாடு கொள்ள வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் பணத் தேவை அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த எண்ணம் மேலோங்கும். அரசியல்வாதிகள், புதிய பதவிக்கான முயற்சியில் ஈடுபடுவர்.


**கும்பம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில் தடை விலகி, வருமானம் உயரும். உறவினர் வருகையால், சந்தோஷம் அதிகரிக்கும். மனைவியின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** கடமையில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் படிப்படியான வளர்ச்சி உண்டாகும். வீட்டு உபயோகப் பொருள்களை வாங்குவீர்கள்.




## புலி திருடப்பட்டது எப்படி?

விஜய் நடிப்பில் வெளியாக இருக்கும் புலி படத்தின் ஒரு நிமிட டீஸரை திருட்டுத்தனமாக கசியவிட்டது தொடர்பாக, பயிற்சி-உதவியாளரிடம் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.
விஜய் பிறந்தநாளை முன்னிட்டு புலி போஸ்டர்கள் 20 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கும், விஜய் பிறந்த நாளை முன்னிட்டு படத்தின் டீஸர் 21 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கும் வெளியாகும் என அறிவித்தார்கள். 21ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு வெளியாக இருந்த புலி டீஸர், ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே இணை யத்தில் வெளியானது. இதனால் படக்குழு பெரும் அதிர்ச்சிக்குள்ளானது. டீஸர் லீக் ஆனதைத் தொடர்ந்து படக்குழு உடனடியாக நள்ளிரவு 12 மணிக்கு வெளியிட இருந்த டீஸரை மதியமே இணையத்தில் அதிகாரபூர்வமக வெளியிட்டது.
இதனிடையே, முன்கூட்டியே திருட்டுத்தனமாக டீஸர் எப்படி வெளியானது என்பதை படக்குழு விசாரிக்க ஆரம்பித்தது. அப்போது, சென்னையிலுள்ள புகைப்பட நிறுவனத்தில், புலி டீஸருக்கு சவுண்ட் மிக்சிங் செய்யும்போது வெளியானது உறுதிப்படுத்தப்பட்டது. அங்கிருந்து எப்படி வெளியானது என்பதை பொலிஸார் விசாரித்தனர். இதனடிப் படையில் அங்கு பணியாற்றிய பயிற்சி உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



## அதிர்ச்சியான ஆய்வு முடிவு

உங்கள் குழந்தைக்கு நினைவு திறன் அதிகம் என்றால் அவர்கள் அதிகமாக பொய் சொல்வார்கள் என ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.
இங்கிலாந்தின் ஷபீல்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் 6 முதல் 7 வயதுள்ள குழந்தை களிடம் மேற்கொண்ட ஆய்வில் ஆர்வத்தைத் தூண்டும்போது முடிவு கிடைத்துள்ளது.
அதிக வார்த்தைகள் மற்றும் படங்களை நினைவு வைத்திருக்கும் குழந்தைகள் பொய் சொல்வதில் கை தேர்ந்தவர்களாக உள்ளனர். அதேசமயம் நினைவு திறன் குறைவாக உள்ள குழந்தைகள் சரியாக பொய் சொல்ல தெரியாமல் மாட்டிக்கொள்வதும் தெரியவந்துள்ளது.
இனிமேல் என் குழந்தை அதிகமாக பொய் சொல்கிறது என்று புலம்புவதை விட்டுவிட்டு என் குழந்தைக்கு நினைவு திறன் அதிகம் என்று மகிழ்ச்சி அடையுங்கள் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

## காக்கா முட்டை

### கடுப்பேற்றி காக்கா





'காக்கா முட்டை' படத்தில் வரும் சிறுவர்கள் மரத்தின் மீது ஏறி காக்கா முட்டை குடிக்கும் காட்சி, மரம் வெட்டும் காட்சி, காக்கா வந்து சோற்றை தின்னும் காட்சி இவை அனைத்துமே வெவ்வேறு இடங்களில் எடுக்கப்பட்டது.
பெரிய காக்கா முட்டை விக்னேஷ் அட்டைப் பெட்டியின் மீது சோறு வைக்கும் காட்சியை எடுத்து விட்டார்கள். அதை காக்கா வந்து தின்ன வேண்டுமே, அந்தக் காட்சியை காட்சிப்படுத்த வேண்டும், என்று இயக்குநர் இரண்டு நாள்களாக கஷ்டப் பட்டு இருக்கிறார்.
சாப்பாடு வைக்கும் முன்னர் நிறைய காக்கைகள் சுற்றிக் கொண்டே இருந் திருக்கிறது. சோறு வைத்தவுடன் ஒரு காக்கா கூட வரவே இல்லை. அனைவரையும் அனுப்பிவிட்டு இயக்குநர் மணிகண்டன் மற்றும் உதவியாளர் இருவரும் கறுப்பு துணி மூடி நீண்ட நேரம் உட்கார்ந்திருக்கிறார்கள். அப்போதும் காக்கா வரவில்லை.
ஒருவேளை கறுப்பு துணி மூடியிருப்பதால் வரவில்லை என்று துணியை எடுத்துவிட்டு வெயிலில் உட்கார்ந்திருக்கிறார்கள். அப்போதும் வரவில்லை. உடனே இயக்குநர் மணிகண்டன் கோழிக்கறி வாங்கி அதனை சிறு சிறு துண்டுகளாக வெட்டி சாப்பாட்டை சுற்றி தூவி இருக்கிறார். ஆனால், வந்த காக்கைகள் அனைத்துமே அந்தப் பெட்டியை சுற்றி இருந்த சிக்கனை எடுத்துக் கொண்டு பறந்துவிட்டன.
சோறு வைத்திருந்த பெட்டியை காக்கைகள், தம்மை பிடிக்க வைத்திருக்கும் கூண்டு என்று நினைத்திருக்குமோ என இயக்குநர் மணிகண்டன் யோசித்திருக்கிறார். ஆனால், காட்சியின் தொடர்ச்சி என்பதால் பெட்டியை எடுத்துவிட்டு அந்தக் காட்சியை காட்சிப்படுத்த முடியாது. எனவே அயராது கமராவை வைத்துக் கொண்டு உட்கார்ந்தே இருந்திருக்கிறார். அப்போது ஒரு காக்கா வந்து அமர்ந்து சோற்றின் பின்னால் இருந்த பெரிய சிக்கன் பீஸை எடுத்துச் சென்றுவிட்டது.
இப்போதும் 'காக்கா முட்டை' படத்தைப் பார்த்தீர்கள் என்றால், அந்தக் காட்சியில் சோற்றை காக்கா கொத்துவது போல மட்டும் தான் இருக்கும். கொத்தி எடுப்பது இருக்காது. ஏனென்றால் காக்கா எடுத்தது சிக்கன் பீஸ்!

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...



ஒருத்தர் கப்பலில் வேலை பார்க்குற ஒருத்தரை பார்த்து கேட்டார்.
'கப்பலில் வேலை பாக்குறீங்களே ...உங்களுக்கு நீச்சல் தெரியுமா?'
டென்சன் ஆன அவரு சொன்னாரு...
'நீங்கள் கூடத்தான் விமானத்தில வேலை பாக்குறீங்க, உங்களுக்கு பறக்கத் தெரியுமான்னு நான் கேட்டேனா? போய் வேலையை பாருங்க சார்'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஒளிராத மின் விளக்கால் மக்கள் சிரமம்

குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதியின் முன் அமைந்துள்ள மின்விளக்கு கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக ஒளிராத நிலையில் உள்ளது என்றும், அதனால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியும் மத்திய கிழக்கு வீதியும் இணையும் முச்சந்தியாக இந்த இடம் உள்ளதால், இந்த இடத்தில் இரவு நேரத்தில் மின் விளக்கு அவசிய தேவையாக உள்ளது எனவும், பொது மக்கள் நெருக்கமாக வாழுமிடமாகவும் இந்த தப்பகுதியுள்ளதால்இங்கு மின் விளக்கை ஒளிரச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்என்றும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ற-51)

### போதையில் இடையூறு: சமூகப் பணிக்கு உத்தரவு

தென்மராட்சி, ஜூன் 23

மதுபோதையில் பொது இடத்தில் பொதுமக்களுக்குஇடையூறுவிளைவிக்கும் வகையில் செயற்பட்ட இருவரை சமுதாயப்பணியில் ஈடுபடுமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் புதுக்குடியிருப்பு மந்துவில் மற்றும் கொடிகாமம் மந்துவில் தெற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்குகளை விசாரித்த நீதிவான் 80 மணித்தியாலங்கள் சமூகப்பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயங்கள் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற-9)

### மோ.சைக்கிள் மோதி முதியவர் காயம்



தென்மராட்சி, ஜூன் 23

வீதியில் நடந்து சென்ற முதியவரை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிவிட்டு தப்பியோடியுள்ளது.

மோட்டார்சைக்கிளால் மோதுண்ட முதியவர் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி வடக்கு மடத்தடி ஏ-9 வீதியில் இடம் பெற்றது.

மோட்டார் சைக்கிளால் மோதுண்டுதூக்கி வீசப்பட்டு காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த பரமநாதன் புஸ்பநாதன் (வயது 71) என்பவரே மருத்துவமனையில்சேர்க்கப் பட்டுள்ளார். (ற-9)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

திருமதி தயாநிதி திலகேசன்

அவர்களின் சகோதரன்

அமரர்

செல்வரத்தினம் சந்துருச்செல்வன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை நலன்புரிகழகம்,

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

## கண்ணீர்க் காணிக்கை

செல்லையா ரவீந்திரன்

(கிளைமுகாமையாளர் சு.ப.நோ.கூ.சங்கம்)



சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்தின் பணியாளராகிய

செல்லையா ரவீந்திரன்

21.06.2015 ஆம் திகதி காலமாகி விட்டார். இவரின் இழப்பு சங்கத்துக்கு பேரிழப்பாகும். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்

சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம் (61196) (3.6.9)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1945.02.17

மறைவு 2015.06.21



எமதுபாடசாலையின்ஆசிரியைதிருமதி அ.லிங்கராஜ் அவர்களின் அன்பு மாமியார்

திருமதி சலசாதேவி அரியபுத்திரன்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,

யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

வல்லிக்குட்டி தம்பன் (மணியம்)

மலர்வு 30.03.1930

உதிர்வு 24.05.2015

கடந்த 24.05.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் வல்லிக்குட்டி தம்பன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.06.2015) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் துயரில் பங்கெடுத்த அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடை பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)

முல்லையடி, பளை. குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி தவராசா தர்சிகா

தோற்றம் ★ 28.06.1994

மறைவு ★ 26.06.2012

திதி :-23.06.2015

மூன்றாண்டுகள் ஓடி மறைந்து விட்டாலும் மறக்க முடியவில்லை உங்களை.

புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு

சி.தவராசா (நகர் தம்பியன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 31.07.1937 விண்ணில்: 04.07.2014

சின்னப்பு கந்தசாமி (சாமி)

(ஓய்வு பெற்ற ஊழியர் மின்சார சபை சுன்னாகம்)

ஆண்டொன்று மறைந்து விட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்.
மறையுமா உங்கள் நினைவின் பாசம்.
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்
பரிதவிக்க விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்?
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை!
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்.
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

021 224 0103 குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் விநாயகமூர்த்தி உதயசங்கர்(சங்கர்)



அன்னை மடியில் 20.02.1983

ஆண்டவன் அடியில் 10.05.2015

ஆற்றாத துயர்தனை அள்ளித்தந்து
அகன்றோடி நாற்பத்தைந்து நாள்களானதோ
நேற்று உன்னோடு உறவாடிய உள்ளங்கள்
நெக்குருகி நொந்தழ நெடுந்தூரம் சென்றனையோ
மாற்றமுடியுமா நியதி என்று மண்விட்டுச் சென்றனையோ
மனையோ வெறுமையானதடா எம் சங்கரே
மனம் நிறையக் கவலையுடன் மறுகி அழுகின்றோம்
காலனவன் கரன்ட் வடிவில் கவர்ந்திழுத்து
காற்றோடு கலந்தாயோ எம் சங்கரே
காலமெல்லாம் எம் கண்களில் கண்ணீர் தான்.

கடந்த 10.05.2015 ஞாயிற்றுக் கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பவிளக்கு விநாயகமூர்த்தி உதயசங்கர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (23.06.2015)செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்புடன் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறுஅன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்.

அல்லாரை தெற்கு, மீசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து பொலிஸார் ரோந்து சாவகச்சேரியில் தற்போது அதிகரிப்பு

தென்மராட்சி, ஜூன் 23
சாவகச்சேரி பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி களில் ரோந்து நடவடிக்கையை அதிகரித்துள்ளனர்.
முன்னர் பிரதான வீதியில் காணப் பட்ட போக்குவரத்துப் பொலிஸார் தற்போது அனைத்து வீதிகளிலும் தமது கடமைகளை விஸ்தரித்து ரோந்து நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர். போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்துவோருக்கு அந்த இடத்தில் அபராதம் விதிப்பதுடன் சிலரை நீதி மன்றிலும் முற்படுத்தி வருகின்றனர்.
தலைக்கவசம் அணியாமை, தலைக் கவசத்தின் பட்டி அணியாமை, மது போதை, பிள்ளைகளை மோட்டார் சைக்கிள் எண்ணெய்த் தாங்கியில் அமர்த்திக் பயணித்தல், அளவுக்கு அதிகமாக ஆள்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லல், ஆவ ணங்களின்றி வாகனம் செலுத்து தல் போன்ற போக்குவரத்து விதி முறைகளை மீறி வாகனங்கள் செலுத்துவோருக்கு சம்பவ இடத்தி லேயே அபராதம் விதிக்கின்றனர். அத்துடன் மதுபோதையில் ஆவ ணங்களின்றி வாகனம் செலுத்து வோரின் மீது நீதிமன்றில் வழக்கு கள் தாக்கல் செய்து வருகின்றனர்.
அவ்வாறு அபராதம் விதிக்கப்படு வோர் தினமும் குறைந்தது 50க்கு மேற்பட்டோர் சாவகச்சேரி, மட்டு வில், சங்கத்தானை, சரசாலை ஆகிய அஞ்சல் நிலையங்களில் 100 ரூபா தொடக்கம் 5 ஆயிரம் ரூபா வரை தண்டப் பணத்தை செலுத்தி வரு வதைக் காணமுடிகிறது. (ந-9)

## வழித்தட அனுமதியின்றி பயணிகளை ஏற்றிய சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூன் 23
வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற வாக னச் சாரதிக்கு சாவகச்சேரி நீதி மன்றில் கடந்த வெள்ளிக்கிழமை 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.
பொலிஸாரால் தாக்கல் செய்யப் பட்ட வழக்கை விசாரித்த நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை வாகனச் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ந-9)


## மரண அறிவித்தல்

### சந்திரசேகரம் சிவப்பிரகாசம்(ஓய்வு பெற்ற அதிபர்)



தும்பளைமேற்கைப்பிறப்பிடமாகவும் மண்டைதீவைச் சேர்ந்தவரும்,ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான சந்திர சேகரம் சிவப்பிரகாசம் நேற்று (22.06.2015) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார். அன்னார் தும்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற வர்களான சந்திரசேகரம் சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின்அன்புப் புதல்வரும் மண்டைதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரஞ்சோதியின்(ஓய்வு பெற்ற ஆசிரியர் அருந்ததி ரீச்சர்) அன்புத் துணைவரும் காலஞ்சென்ற சின்னத்துரை(ஓய்வு பெற்ற ஆசிரியர்),கந்தசாமி(ஓய்வு பெற்ற ஆசிரியர்), சிவஞானம், காலஞ்சென்ற திருமதி மாணிக்கம், சந்திரசேகரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தயாநிதி (ஓய்வு பெற்றஆசிரியர்), உதயகுமாரன்(ஓய்வு பெற்ற புள்ளிவிபரவியலாளர்) காலஞ்சென்ற சிவக்குமாரன்(பொறியியலாளர்), அருள்குமாரன், சுந்தரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. சிவகாமி, யாழினிதேவி, ரஜீதா(ஆசிரியர்- யாழ்/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும் அருளினி, சிவகுமார தாஸ்,தனுஷன், பரமஹம்சன், பவித்திரா, ஈசானன், சாம்பவி, கயானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2015) செவ்வாய்க்கிழமை 59, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் யாழ் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 59, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
T.P:077 154 7025


## ஆலய வருடாந்த திருவிழா

கொழும்புத்துறை, ஜூன் 23
சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலய வருடாந்த திரு விழா நடைபெற்று வருகிறது. இன்று மாலை 5.15 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், நாளை புதன் கிழமை காலை 6.15 மணிக்கு திரு விழாத் திருப்பலியும் நடைபெறும். மாலை 5.30 மணிக்கு திருச்சொரூ பப் பவனியும் ஆசிரும் இடம் பெறும். (ந-135)

## தென்மராட்சி வலய அதிபர்களுக்கு கூட்டம்

தென்மராட்சி, ஜூன் 23
தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு வலய கேட்போர் கூடத் தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறி வித்துள்ளார். (ந-9)

## கீழே விழுந்து யுவதி காயம்

தென்மராட்சி, ஜூன் 23
அலுமாரிக்கு மேல் வைக்கப்பட்டிருந்த புத் தகத்தை எடுத்த யுவதி தவறி வீழ்ந்ததில் இடுப்பு எலும்பில் பாதிப்பு ஏற் பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வரணி தாவளை - இயற்றாலையில் இடம்பெற்றது.
முக்காலியில் ஏறி புத் தகத்தை எடுத்தபோது முக்காலி சறுக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதே இடத்தைச் சேர்ந்த ஜெயபாலன் கௌதமி (வயது-19) என்பவர் சாவகச்சேரி மருத்து வமனையில் சேர்க்கப் பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட் டார். (ந-9)

## மாற்றுவலுவுள்ளோருக்கு வசதியான கழிப்பறைகள்

### சாவகச்சேரி நகரசபையிடம் கோரிக்கை

தென்மராட்சி, ஜூன் 23
சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட மாற்று வலுவுள்ளோர் பயன்படுத்தக் கூடிய மலசலகூட வசதிகளை ஏற்படுத்தி வழங்க வேண்டுமென சாவகச்சேரி ஆதார மருத்துவமனை நிர்வாகத்தினர் சாவகச்சேரி நகரசபையை கேட் டுள்ளனர்.
மாற்று வலுவுள்ளோர்கள் தமது மலசலகூடங்களுக்கு இயற்கைக் கட னுக்குச் செல்லும் வேளையில் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுப்பதால் நோயின் தாக்கமும் அதிகரித்து வருகிறது. அவர்கள் பயன்படுத்தும் மலசலகூடங்களுக்கு இலகுவில் சென்று வரக்கூடிய வகை யில் மலகூடத்துடன் இணைந்த நிலையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களுக்கு ஏற் படும் பாதிப்புக்களைத் தவிர்க்கமுடி யும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதி களில் வசிக்கும் மாற்று வலுவுள் ளோரின் வீடுகளில் காணப்படும் மலசலகூடங்களில் சிறிய மாற்றங் கள் செய்து அவர்கள் பயன்படுத்தக் கூடிய வகையிலான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கோரப் பட்டுள்ளது. (ந-9)

## போலியோ தடுப்பு மருந்து வழங்கல் இருதயபுரத்தில்



மட்டக்களப்பு, ஜூன் 23
மட்டக்களப்பு மாநகரசபைக் குட் பட்ட பிரதேசத்தில் போலியோ நோய் உள்ளதாக சிறுவன் ஒருவன் அடையாளப்படுத்தப்பட்டதை தொடர்ந்து நேற்றுமுன்தினம் விசேட போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கும் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது.
இலங்கையில் முற்றாக போலியோ நோய் ஒழிக்கப்பட்டதாக கடந்த காலத்தில் இலங்கை அரசு அறிவித் திருந்த நிலையில் முதன்முறையாக மட்டக்களப்பில் இந்த போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.
மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட இருதயபுரம் பகுதியில் இந்தச் சிறு வன் போலியோ நோய் தாக்கத் துக்குள்ளாகியிருக்கலாம் என சந் தேகத்தின் அடிப்படையில் குறித்த சிறுவன் அடையாளப்படுத்தப்பட்டு வைத்திய சோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இருதயபுரம் பிரதேச பொதுச்சுகாதார பரிசோத கர் கே.ஜேசுராஜா தெரிவித்தார்.
இதனைத்தொடர்ந்து குறித்த சிறு வன் அடையாளம் காணப்பட்ட பிரதேசத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சிறுவர்களுக்கு விசேட திட்டத்தின் கீழ் போலியோ சொட்டு மருந்து வழங்கும் நடவ டிக்கை நேற்றுமுன்தினம் காலை முதல் இருதயபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டுள்ளது.
இதன்போது சுமார் ஆயிரத்து 200 சிறுவர்களுக்கு இதுவரையில் போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளதாக இருதய புரம் பிரதேச பொதுச்சுகாதார பரி சோத கர் கே.ஜேசுராஜா தெரிவித் தார்.
குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு இந்த விசேட போலியோ தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ந)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை

அல்வாய் மேற்கு, கூற்றாந்தணி திக்கத்தைப் பிறப் பிடமாகக் கொண்ட திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் (பிரபல வர்த்தகர் கலைச்செல்வி ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு.) அன்பு மனைவியும் தம்பிராசா, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன் புச்சகோதரியும் சறோஜினிதேவி, அமராவதி, செல்வக்குமரன் (உதவிக் கல்விப்பணிப்பாளர் வடமராட்சி கல்விவலயம்) விஜய குமாரி, சிவபாலன், கலைச்செல்வி (நோர்வே), மீன லோஜினி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ் சென்ற பசுபதி மற்றும் மாணிக்கவாசகர், திருமதி மகேஸ்வரி (ஆசிரியை யா/சிதம்பராக்கல்லூரி), அன்ரன் டேவிட் (வர்த்தகர் - மட்டக்களப்பு), திருமதி விஜயகுமாரி, நவரட்ண ராஜா (நோர்வே), தயாபரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கணேசகுமார் (ஆசிரியர் - கண்டி), பத்மகுமார் (ஆசிரியர் - மட்டக்களப்பு), திருமதி சுபாஜினி(கனடா), திருமதி மதிவதனி(லண்டன்), பாலேந்திரகுமார் (கொழும்பு), திருமதி தேவகி (நோர்வே), ஐங்கரன்(பிரான்ஸ்), காலஞ் சென்ற விஸ்ணு குமாரன் மற்றும் கோபிகா, துவாரகன், வஜித்தா, பவித்திரன், ஜீவிதன் ரபிக்ஷன், அபிஷயா, அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சோபிகா, தனுஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.06.2015) செவ்வாய்க்கிழமை மு.பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திக்கம் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூற்றாந்தணி, திக்கம்,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(59756)
(3.6.9)

தகவல்:
குடும்பத்தினர்


## மக்கள் பங்களிப்புடன் வீதி விளக்கு பொருத்தல்

### சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை

தென்மராட்சி, ஜூன் 23
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பங்களிப்புடன் வீதி விளக்கு பொருத்துவதற்கான நடவடிக்கையை சபை யினர் மேற்கொண்டுள்ளனர்.
மக்கள் பங்களிப்புடனான வீதி விளக்குத் திட் டத்தில் இணைய விரும்பும் வரியிறுப் பாளர்கள் நகரசபையில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட் டுள்ளது.
விண்ணப்பிக்கும் அனைவருக்கும் மின் விநி யோகத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
நகரசபையால் வட்டார ரீதியில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் வரியிறுப்பாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் மக்கள் பங்களிப்புடனான வீதி விளக்குத் திட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டுமென கோரியதை அடுத்து இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத்தின் திரை அரங்கு கட்டடத்தை பொதுநோக்கு மண்டபமாக மாற்றுக

## தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன் 23

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான திரை அரங்குக் கட்டடத்தை பொதுநோக்கு மண்டபமாக மாற்றியமைத்துத் தருமாறு சங்கம் வடமாகாண கூட்டுறவு அமைச்சிடம் கேட்டுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் தலைவர் ந.உமாகரன்:–

சங்கத்தின் தெல்லிப்பழை சந்தியில் இருக்கும் திரை அரங்கு கட்டடத்தை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு பொதுநோக்கு மண்டபமாக மாற்றியமைத்து நிர்மாணித்துத் தருமாறு வடமாகாண அமைச்சிடம் கேட்டுள்ளோம்.

வடக்கு மாகாண அமைச்சின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் இந்தக் கோரிக்கையை சங்கம் முன்வைத்துள்ளது. இந்தக் கோரிக்கைக்கு சாதகமான பதில்களும் சங்கத்துக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

இந்தத் திரை அரங்கை பொதுநோக்கு மண்டபமாக மாற்றியமைப்பதற்கு சங்கத்திடம் போதிய நிதி வளம் இல்லை. தற்போது சங்கம் 52 பணியாளர்களுடன் செயற்பட்டு வருகின்றது. இதில் 38 பணியாளர்கள் நிரந்தர மானவர் கள். மொத்தமாக பத்து கிளை நிலையங்களே செயற்பட்டும் வருகின்றன.

கிளை நிலையங்களின் போதிய வியாபார நடவடிக்கையின்மையால் சங்கம் நட்டத்தில் செயற்பட்டு வருகின்றது. பணியாளர்களுக்கான அதிகரிப்பு முப்பது வீத சம்பள உயர்வைக் கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில்தான் சங்கத்தின் திரை அரங்குக் கட்டடத்தை பொதுநோக்கு மண்டபமாக மாற்றி மக்கள் பயன்பாட்டுக்கு பயன்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள் என.– என்றார். (ற–17)

# சவாரி வண்டில் ஏறி ஒருவர் காயம்

தென்மராட்சி, ஜுன் 23

சவாரித் திடலில் கூடியிருந்த சனக்கூட்டத்துக்குள் சவாரி வண்டில் புகுந்ததில் குடும்பஸ்ர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வரணியில் நடந்துள்ளது.

மாட்டு வண்டில், பார்வையாளர்களை நோக்கி வந்ததை அவதானித்த மக்கள் ஓடியபோது கீழே வீழ்ந்தவரின் மார்பில் வண்டிச் சில்லு ஏறியது என்று கூறப்படுகின்றது. வரணி, இடைக் குறிச்சியைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி (வயது–50) என்பவரே காயமடைந்தவராவார். இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா மருத்தவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ற–9)


தொழில்சார் கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

DMI COMPUTER EDUCATION

Diploma in Hardware Engineering

Diploma in CCTV Technician

Assembling a CCTV system - IP camera installation PTZ camera installation Network (LAN, WAN, IP) IP Address Configuring Final project and revision

Dip. in Video Production & Multimedia

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403

நெல்லியடி M.M.V வீதி Tel.:021-226 2470 | சாவகச்சேரி கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | சுன்னாகம் 130, கே.கே.எஸ். வீதி, Tel.:021-224 1970 | கிளிநொச்சி A9 வீதி No.111 Tel.:021-228 5655


# காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மாணவரை கௌரவிக்கும் நிகழ்வு

தென்மராட்சி, ஜுன் 23

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சை க.பொ.த. சாதாரண தரம் உயர்தரம் ஆகியவற்றில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவ வாடிக்கையாளர்களைக் கௌரவித்து பணப் பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரி கிளையின் மாணவ வாடிக்கையாளரான கடந்த 2014 க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கணித பாடத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் த.சிவதாஸிற்கு இரண்டாம் கட்ட கொடுப்பனவான ரூபா 50 ஆயிரமும், 2014 ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீடசையில் 192 புள்ளிகள் பெற்று மாவட்டத்தில் முத லிடம் பெற்ற சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி செல்வி வனோஜா சிறிபாலகிருஸ்ணனுக்கு புலமைப் பரிசில் நிதி வழங்கலுக்கு முன்னரான கௌரவிப்பும், யாழ்ப்பாணம் கிளையின் மாணவ வாடிக்கையாளரான 2013 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவனுக்கு மூன்றாம் கட்டக் கொடுப்பனவான ரூபா 20 ஆயிரமும் வழங்கப்பட்டன.

இவற்றை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் எஸ்.செல்வரத்தினம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ்.பிராந்திய முகாமையாளர் பா.சத்தியன் ஆகியோரும் வழங்கினர்.

இந் நிகழ்வில் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் கிளைகளின் முகாமையாளர்களும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ற–9)

# வடலியில் பற்றிய தீயால் குடிசை எரிந்து நாசம்

பளை, ஜுன் 23

பனை வடலியில் பிடித்த தீ அருகில் உள்ள ஓலைக் குடிசையையும் எரிந்து சாம்பலாக்கியது. வீட்டிலிருந்த உடைமைகளும் எரிந்து நாசமாகின.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் இயக்கச்சி பனிக்கையடியில் நடந்துள்ளது.

அந்தப் பகுதியில் நடைபெறவிருந்த தேவாலய கட்டடத் திறப்பு விழாவுக்காக சுற்றாடலைத் துப்பரவு செய்து குவிக்கப்பட்ட குப்பையை எரித்த போது அது அருகில்உள்ள வடலிப் பனையில் தீப் பிடித்து அருகில் உள்ள வீட்டையும் எரித்து சாம்பலாக்கியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் சபீனா என்பவரது குடிசையே எரிந்து சாம்பலாகியது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–9)


SUMITOMO

Original Japan

பாதுகாப்பானவை நம்பகரமானவை

உலகில் மிகப்பெரிய உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான சுமிரோமோ ரம்பர் இன்டஸ்ரீஸினால் சுமிரோமோ ரயர் யப்பானில் உற்பத்தி செய்யப்படுகின்றது.





• அதிஉயர்தரம் • அதிகூடிய தூரம்
• நவீன வடிவமைப்புகள் • ஸ்திரத்தன்மை
• உயர் தொழில்நுட்பம்

யாழ் நகரில் உங்கள் தேவைகளுக்கு

பொபியூலர் மோட்டர் ஸ்டோர்ஸ்

270, ஸ்டென்லி ரோட், யாழ்ப்பாணம்.

தொ.பே.இல : 021-222 3535, 021-222 2403

பெக்ஸ் : 021-222 3535

V.R. VADIVETKARASAN ENTERPRISES

271, SEA STREET, COLOMBO - 11.

TEL : 0112 434 800, 2435732 Fax : 2435731


# புகைத்தலுக்கு எதிரான தின நிகழ்வு நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், ஜுன் 23

உலக புகைத்தலுக்கெதிரான தினம் சுகாதார அமைச்சால் நாளை மறுதினம் 25 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்தும் ஆறு பொது சுகாதார பரிசோதகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். மாவட்ட பொது சுகாதார பரிசோதகர், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்இருவர், பொது சுகாதார பரிசோதகர் மூவர் என தலா ஆறு பேர் வீதம் கலந்து கொள்ளுமாறு சுகாதாரஅமைச்சின்பணிப்பாளர்நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற–9)

# பரிசில்நாள் நிகழ்வு

தென்மராட்சி, ஜுன் 23

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறும்.

வித்தியாலய அதிபர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரும் கௌரவ விருந்தினராக வித்தியாலய பழைய மாணவன் கே.ரகுநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற–9)


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம்

விசேட பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டமானது 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது. அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

- செயலாளர்



கணினி / CCTV உதிரிகள்

Laptops

hp ASUS

5th Gen i3 Laptops Rs. 66, 750/- இருந்து (or upwards)

5th Gen i5 Laptops Rs. 81, 750/- இருந்து (or upwards)

KKBRO CCTV

அதி நவீன CCTV உதிரிகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

Printers

hp brother

Laserjet 1102 Printer Rs. 12, 500/-

Wifi Laserjet HL1210w Printer Rs. 11, 500/-

3 in 1 Laserjet Printer Rs. 23, 000/-

Deskjet 1010 Rs. 3, 650/-

Accessories

FAX Machine: Rs. 19, 650/-

External DVD R/W: Rs. 4, 800/-

External Harddrive:

500GB: Rs. 7850/-

1TB : Rs. 10.650/-

Subwoofer

2.1 Subwoofer Rs. 2, 800/- இருந்து

2.1 Subwoofer Rs. 8, 800/- (Bluetooth)

4.1 Subwoofer Rs. 6, 250/-

5.1 Subwoofer Rs. 7, 000/-

5.1 Subwoofer Rs. 8, 850/- (Bluetooth)

MICRO PC SYSTEMS

No: 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பாணம்.

யாழ்பாணம்: TP: 0212225893

கிளிநொச்சி: TP: 0212285593

வவுனியா: TP: 0242221969

கொழும்பு: TP: 0112367405

Projector / Projector Screen / Subwoofer வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவை பலவீனப்படுத்த மைத்திரி முயற்சிக்கிறார்

## குற்றஞ்சாட்டுகின்றார் ஹரின் பெர்னாண்டோ

கொழும்பு, ஜுன் 23

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியை பலவீனப் படுத்தும் வகையிலான செயற் பாடுகளை முன்னெடுத்து வருவ தாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குற்றஞ் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இளைஞர், யுவதி களின் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்த தாவது:-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தற்போது மீள முடியாத அளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

எனினும் ஜனாதிபதி அந்த முன்ன ணியை வெற்றியடைய செய்வதற் கான நடவடிக்கைகளை முன்னெ டுத்து வருகின்றார்.

இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு வகையில் சவாலை ஏற்படுத்துவ தாகும். நமக்கு நாமே குழியை வெட்டிக்கொண்ட போன்ற செயற் பாடாகும்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து போகும் கும்பலுக்கு மீண்டும் மக் கள் ஆணையைப் பெற முடியாது.

அவர்களை ஒன்றிணைக்க ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன நட வடிக்கை எடுத்தால், அப்போதுதான் சிக்கல் தோன்றும்.

அவர்களை ஒன்றிணைக்கும் விட யம் காரணமாகவே ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைத்து வரு கிறார்.

அதனை ஜனாதிபதி பகிரங்கமாக கூறியுள்ளதால், நாம் செய்த முட் டாள்தனம் உறுதியாகியுள்ளது.- என்றார். (ற)

# பிரதேச செயலர் பிரிவுகளில் வேலைத் திட்டங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜுன் 23

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் அத்தியாவ சியமெனக் கருதப்படும் தலா 5 வேலைத் திட்டங்களின் விவரங் களை அனுப்பிவைக்குமாறு மாவட் டச் செயலகத்தால் அனைத்து பிர தேச செயலகங்களுக்கும் அறி விக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் தென்மராட்சி பிர தேசத்தில் இயங்கும் 60 கிராம அலுவலர் பிரிவுகளில் மிக அவ சியம் எனக் கருதப்படும் ஐந்து வேலைத் திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப் படவுள்ளது. அதற்காக பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவு களை நான்கு வலயங்களாகப் பிரிக் கப்பட்டு ( தலா 15 கிராம அலுவலர் பிரிவுகள் ) அப் பகுதியில் மிக அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் இனங்கண்டு அறிக்கை சமர்ப்பிக்கு மாறு பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வலயத்தையும் சேர்ந்த கிராம அலுவலர்கள், வாழ்வின் எழுச்சி அலுவலர்கள், பொருளா தார அபிவிருத்தி அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள் போன்றோர் ஒன்றுகூடி ஆராய்ந்து மிக அவசியமானதென இனங்காணப்படும் வேலைத்திட் டத்தை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டங்களுடன் மேலதிகமாக பிரதேச செயலகத் தால் இனங்காணப்படும் வேலைத் திட்டமொன்றும் தெரிவு செய்யப் பட்டு ஐந்து வேலைத்திட்டங்களின் விவரங்களும் அனுப்பி வைக்கப் படவுள்ளன என்று தெரிவிக்கப்பட் டது. இந்தத் திட்டத்துக்கான வேலை களைத் தெரிவு செய்ய பிரதேச செயலக அலுவலர்கள் குழுக்கள் அந்தந்த இடங்களில் கலந்துரை யாடல்களை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)



கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய விளையாட்டு மைதா னத்துக்குச் செல்லும் நுழைவாயிலில் உள்ள குறித்த பாடசாலையின் பெயர் வளைவு பொருத்தப்பட்ட தூண் வெடித்துள்ளதால் அது எந்த நேரமும் முறிந்து விழும் நிலையில் உள்ளது. இது குறித்து சம்பந் தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-36)

# ஆலய வருடாந்த உற்சவம்

கரணவாய், ஜுன் 23


அருள்மிகு தச்சன்தோப்பு சிந் தாமணிப்பிள்ளையார் ஆலய வரு டாந்த மகோற்சவம் நேற்றுத் திங் கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங் கள் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 30ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற வுள்ளன. (ற-108)

# திராட்சைப் பயிர் செய்கையாளருக்கு பயிற்சிப் பட்டறை

அச்சுவேலி,ஜுன்23

யாழ். மாவட்டத்தில் திராட்சைப்பழப் பயிர்ச் செய்கையை மீள்புனரமைப்பு செய்து மீளவும் கட்டியெழுப்புவதற்கு திராட்சைப்பழப் பயிர்ச் செய் கையாளர்களுக்கான செயற்பட்டறை இன்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் நடைபெறுகின்றது.



திராட்சைப்பழப் பயிர்ச் செய்கைக்கு சமகாலத் தில் காணப் படும் அதி கரித்த வெப்பநிலை வீச்சும் காலநிலை முரண்பாடும் வாய்ப் பாக இல்லாத போதி லும் பயிர்ச் செய்கை யில் ஈடுபடும் விவ சாயிகளின் மரபு வழிச் சிந்தனையும் தொழில் நுட்ப முரண்பாடும் முக்கிய காரணம் என விவசாயத்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திராட்சை பழப்பயிர்ச் செய் கையில் ஈடுபடும் விவசா யிகளை மீண்டும் புத்தூக் கம் பெறச் செய்வதற்கு வசதியாக திராட்சைப்பழப் பயிர்ச் செய்கை செயற்பட் டறைநடைபெறுகின்றது.(ற-11)

# இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜுன் 22

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் கல்லூரிக்காலம் எனும் இறுவட்டு வெளியீடு இன்று செவ் வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. தி.சாரங்கன் தலைமை யில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன் னாள் அதிபர் வ.ஶ்ரீகாந்தன் கலந்து கொள்வார். (ஐ)

# தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுன் 23

கோண்டாவில், யாழ்சாலை போக்கு வரத்து சபை ஊழியர்களால் தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் கடந்த வெள்ளிக் கிழமை, ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசாவால் இந்தச் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட் டுள்ளது.

இதன் தலைவராக அருளானந்தம் அருட்பிரகாஸ், செயலாளராக மார்க்கண்டு சிறிகாந்தரூபன், பொரு ளாளராக கதிரைமலைநாதன் சுபாஸ்கரன், உப தலைவராக ஜே.வி.ஜெயந்தன், உப செயலாள ராக யோகராசா கமலதாசனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் போஷகர்களாக கூட் டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அ.பரஞ்சோதி மற்றும் இ.ஆனோல்ட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ற-5)

# தேர்த்திருவிழா

நெல்லியடி, ஜுன் 23

வடமராட்சி தென்துன்னையம்பதி ஶ்ரீ கௌரி அம்பாள் சமேத சிவ பூதேஸ்வர சுவாமி தேவஸ்தான மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறும். நாளை புதன்கிழமை மு.ப 10.30 மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். (ற)

★★★

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங் கேஸ்வரர் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.50 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)


**பெயர் மாற்றம்**

இல 230, D5 பெரிய பரந்தன் , கிளிநொச்சி எனும் முகவரி கொண்ட சோமசுந்தரம் லேகுணா ஆகிய நான் எனது பெயரை இன்று தொடக்கம் இளங்கோ லோகேஸ்வரி என மாற்றிக்கொள்கின்றேன் என்பதை அறியத் தருகின்றேன்.

இ.லோகேஸ்வரி

(57133) (3.6.11)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

வரணி குடமியன் நாவற்காடுப் பகுதியில் கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் 8 பரப்பு தென்னங்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 259 5726 077 856 9774

**தேவை**

டிராக்டர் -பௌசர் சாரதி தேவை. வவுனியா பூவரசங்குளம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 116 5968

**மணமகள் தேவை**

யாழ் இந்து ,மலேசியா வாசியான மணமாகாத பொறியியலாளராகக் கடமையாற்றும் 56 வயதுடைய மண மகனுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

தொடர்பு: pnmal1@yahoo.co.uk

T.P: 006 012 2822 117, 076 591 2520


# போட்டிப் பரீட்சை வெட்டுப் புள்ளிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம் ஜுன் 23

வடக்கு மாகாண பொதுச் சேவையின் வருமான பரி சோதகர் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற் காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மாவட்ட ரீதி யிலான வெட்டுப் புள்ளி வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – 152, கிளி நொச்சி – 153, மன்னார் – 136, முல்லைத்தீவு – 142, வவுனியா – 142. மேற் குறித்த வெட்டுப் புள்ளி களின் அடிப்படையில் தகு தியானவர்களுக்கு நேர் முகத் தேர்வுக்கு உரிய கடி தங்கள் முதலமைச்சரின் அமைச்சினால் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று அமைச்சின் செய லாளர், இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ற-5)



போர் நடவடிக்கைகளால் முற்றாக சேதமடைந்திருந்த கொழும் புத்துறை மணியம்தோட்டம் கர்த்தர் ஆலயம் புதிதாக நிர் மாணிக்கப்பட்டு வருகின்றது. தற்போது தற்காலிக மண்டபம் அமைத்து திருப்பலிகள் மற்றும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ற-135)

# கொழும்புத்துறை துரையப்பாவில் இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 23

கொழும்புத்துறை துரையப்பா வித் தியாலய பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நடேசு தயா ளன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந் தினராக யாழ்.வயலக் கல்விப் பணிப் பாளர் என்.தெய்வேந்திர ராசா கலந்து கொள்ளவுள்ளார். (ற-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கூகுள் நிறுவனப் பொம்மைகளுக்கு காப்புரிமை விண்ணப்பம்




குழந்தைகளின் நடவடிக்கைகளை கண்காணிக்க விளையாட்டுப் பொம்மைகளை கூகுள் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதற்கான காப்புரிமைக்கு கூகுள் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது. கூகுள் நிறுவனம் தனது காப்புரிமை விண்ணப்பத்தில் தெரிவித்திருப்பதாவது:-

கூகுளின் இந்த கண்டுபிடிப்பில், குழந்தைகள் பயன்படுத்தும் கரடி மற்றும் முயல் பொம்மைகள் போல, பல்வேறு வடிவங்களில் உள்ள விளையாட்டு பொம்மைகளின் உள்ளே அதிநவீன கமராக்கள், மைக்ரோ போன்கள், டிரான்ஸ்மிற்றர்கள் பொருத்தப்பட்டு, அவற்றின் மூலம் திரட்டும் தகவல்கள் வை-பை மற்றும் புளூடுத் மற்றும் க்ளவுட் கணினி மூலமாக வாடிக்கையாளர்களுடன் இணைக்கப்படும்.

இதனால் அந்தப் பொம்மை உள்ள இடத்தை அதன் உரிமையாளர் தொடர்ந்து கண்காணிப்பில் வைத்திருக்க முடியும். இணைய தளத்திலிருந்து கிடைக்கும் எச்சரிக்கைகளை வைத்து, செல்போன் மற்றும் ரிமோட் கன்ட்ரோல் சாதனங்கள் மூலமாக அந்த பொம்மைக்கு கட்டளைகள் இடலாம்.

அவ்வாறு இடப்படும் கட்டளைகளால் பொம்மையை அசைய செய்து செயலாற்ற வைக்கவும், அதில் பொருத்தியுள்ள மைக்ரோபோன் மூலம் கட்டளையிடுபவரின் குரலை ஒலிக்கச் செய்து, பேசுவது போலச் செய்யவும் முடியும். இதுபோன்ற பொம்மைகள் மூலம், தொலைவிலிருந்து பல வீட்டுப் பொருள்களை இயக்கவும், குழந்தைகளை கவனித்துக் கொள்ளவும் பயன்படுத்தலாம் என கூகுள் தனது காப்புரிமை விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளது.

## ரோபோ தொழில்நுட்பங்கள்

சில வாரங்களுக்கு முன்னர் DARPA (Defense Advanced Research Projects Agency) ஆனது புதிய தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ரோபோக்களுக்கான போட்டி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்தப் போட்டியில் பங்குபற்றிய அசையும் ரோபோக்களில் 8 ரோபோக்கள் தாம் உருவாக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றத் தவறியதால் தோல்வியடைந்துள்ளன.

இந்தப் போட்டியில் பங்குபற்றிய ஒவ்வொரு குழுவும் பாது காப்பை நோக்கமாகக் கொண்ட 8 ரோபோக்களை வடிவமைத்து போட்டியில் பங்குபெறச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## நவீன இலத்திரனியல் சக்கர நாற்காலி

அங்கவீனமுற்றவர்கள் இலகுவாக நகர்ந்து செல்ல சக்கர நாற்காலிகள் பெரிதும் உதவுகின்றன.

காலப்போக்கில் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இந்தச் சக்கர நாற்காலிகளில் இலத்திரனியல் தொழில்நுட்பம் புகுத்தப்பட்டு மின்சாரத்தில் இயங்கக் கூடியவாறு மாற்றியமைக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது இலத்திரனியல் சக்கர நாற்காலிகள் படிக்கட்டுக்களிலும் நகரக்கூடிய வகையில் சுவிற்ஸர்லாந்திலுள்ள ETH மற்றும் சூரிச் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் குழு ஒன்றினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறித்த நாற்காலியின் அடிப்பகுதியில் பட்டி ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை தமிழ் பட்டதாரிகளின் பிரச்சினை ஜனாதிபதி கவனத்துக்கு

## கிழக்கு மாகாணசபை தவிசாளர் ஏ.பி.சந்திரதாச கலப்பதி உறுதி

அம்பாறை, ஜூன் 23

அம்பாறை மாவட்ட தமிழ் பட்டதாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் கவனத்துக்கு விரைவில் கொண்டு செல்லப்படும் என கிழக்கு மாகாணசபை தவிசாளர் ஏ.பி.சந்திரதாச கலப்பதி உறுதியளித்தார்.

அம்பாறை மாவட்ட தமிழ் பட்டதாரிகள் அமைப்பினருக்கும் கிழக்கு மாகாணசபை சபாநாயகருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட தமிழ் பட்டதாரிகள் அமைப்பின் தலைவர் அ.ஹரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அதிகளாவான தமிழ் பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

தவிசாளர் கலப்பதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஜனவரி மாதத்தின் பின்பே நாட்டில் சுமுகமான நிலை ஏற்பட்டது. அதனூடாக நாட்டில் ஜனநாயகம் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த அரசு, சிறந்த ஸ்திரமான நிலையில் இல்லை என்பது அனைவரும் அறிந்த விடயம். எதிர்வரும் காலத்தில் சிறந்த நிலையான நேர்மையான அரசை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கடந்த காலத்தில் கல்வி அமைச்சராக இருந்தவர் ஒருவரே இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அவர் கல்வியின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை வகுத்து தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியவர். எதிர்காலத்தில் 10 இலட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டத்தையும் வகுத்து வருகின்றார். ஆகவே அதனூடாக உங்களது பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக் கொள்ள முடியும்.

கல்வியியற்க் கல்லூரி செல்கின்றவர்கள் கல்வியை நிறைவு செய்து வெளி யேறுகின்போதே, தொழில் வாய்ப் பைப் பெறுகின்றனர். ஆனால் பல் கலைக்கழகம் செல்கின்றவர்கள் 4 வருடங்கள் கடந்தும் தொழில் வாய்ப்பின்றி வீடுகளில் முடங்கி கிடப்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும்.

ஆகவே தமிழ் பட்டதாரிகளின் நிலை குறித்து, முதலில் கிழக்கு மாகாண முதலமைச்சருடன் பேசப்படும். அதற்கும் தகுந்த சாதகமான பதில் கிடைக்காதவிடத்து, ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு, உரிய தீர்வைப் பெற்றுத்தருவதற்கு ஆவன செய்வேன். – என்றார்.

இந்தச் சந்திப்பின் போது, அம்பாறை மாவட்ட தமிழ் பட்டதாரிகள் கடந்த பல வருடங்களாக எதிர்நோக்கி வருகின்ற வேலைவாய்ப்பு தொடர்பான பிரச்சினைகள் பற்றி, பட்டதாரிகள் அமைப்பின் செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள், தவிசாளருக்குத் தெளிவுபடுத்தினார்கள். எதிர்வரும் தேர்தலுக்கு முன், தங்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் எனும் கோரிக்கையையும் முன்வைத்தனர். (ற)

# பால்வாத்த ஓடை புனரமைப்பு



காத்தான்குடி, ஜூன் 23

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் மாரி காலத்தில் ஏற்படும் வெள்ள இடரில் இருந்து பாது காக்கும் பொருட்டு வெள்ளம் வடிந்தோடும் வகையில் புதிய காத்தான்குடியில் பால்வாத்த ஓடை எனப்படும் சின்னத்தோனா புனரமைக்கப்படவுள்ளதாக காத்தான்குடி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எம்.சிவராஜ் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்காக இடர் முகாமைத்துவ அமைச்சு ஒன்பது லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முசம்மில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து, அரச அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக முகாமைத்துவ அமைச்சு இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ள தாக காத்தான்குடி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எம்.சிவராஜ் மேலும் குறிப்பிட்டார்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் ஆண்டு தோறும் மாரி காலத்தில் ஏற்படும் வெள்ளம் வடிந்தோடும் வகையில் இந்த பால்வாத்த ஓடை புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் இந்த தோனா தோண்டப்பட்டு புனரமைப்புச் செய்யப்படுமென அவர் மேலும் குறிப்பிட்டார். (ற)

# தொழில்நுட்ப ஆய்வு கூடம் திறக்கப்பட்டது

மன்னார், ஜூன் 23

மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடம் நேற்றுக் காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பெரிய பண்டிவிரிச்சான் ம.வி. பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி எஸ்.அழகேஸ்வரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் குறித்த ஆய்வுகூடத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இதன்போது மடு வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச கண்காட்சியில் உலகின் நீளமான பீட்சாவை தயாரித்து அந்த நாடு சாதனை படைத்துள்ளது. இத்தாலியின் மிலன் பகுதியில், மிலன் 2015 கண்காட்சி நடைபெற்றது. அதில் இத்தாலியைச் சேர்ந்த 80 சமையல் கலைஞர்கள் தங்களின் கடின உழைப்பினால் தயாரித்த 1,595 மீற்றர் நீளமுள்ள பீட்சாவை காட்சிக்கு வைத்திருந்தனர். (ஐ)

## சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் இளைஞர் அடித்துக் கொலை



புதுடில்லி,ஜூன் 23

ஆந்திராவில் 7 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞரை கிராம மக்கள் அடித்துக் கொன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேற்கு கோதாவரி மாவட்டம் மாதேபள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் இளைஞன் ஒருவர் சிறுமியைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த பின்னர் கொலை செய்து இரும்புப் பெட்டி ஒன்றில் சிறுமியின் உடலை மறைத்து வைத்துள்ளார்.

சிறுமியைக் காணாத பெற்றோர் கிராம மக்களுடன் சேர்ந்து தேடிய போது கிராமத்தின் மடப்பள்ளியில் சிறுமி நிர்வாணமாக மீட்கப்பட்டார். குறித்த இளைஞன் மீது சந்தேகம் அடைந்த கிராமத்தவர்கள் தலைமறைவான அந்த இளைஞனை தேடிப் பிடித்து கற்களால் அடித்துக் கொன்றுள்ளனர். இதனால் அந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தால் ஆந்திராவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ஐ)

## ஐ.எஸ். அமைப்பின் புதிய பயிற்சி



ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் புதிய பயிற்சி முறைகள் அடங்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. இஸ்லாமிய நாடு அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ். அமைப்பு அதற்காக பல தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த அமைப்பைக் கட்டுபடுத்த முடியாமல் ஏனைய நாடுகள் திணறி வருகிறது.

இந்த நிலையில் இளைஞர்களைக் கவர்வதற்கு ஐ.எஸ் அமைப்பினர் புதிய பயிற்சி முறைகளை பின்பற்றி வருகின்றனர். இது தொடர்பாக ஏழு நிமிட வீடியோக் காட்சி ஒன்று இணையத்தில் பரவி வருகிறது. அதில், இளைஞர்களையும், சிறுவர்களையும் ஒரு கூண்டில் அடைத்து விடுகின் றனர். பின்னர் அவர்களை நேருக்கு நேர் மோத விடுகின்றனர். கூண்டைச் சுற்றி ஆயுதமேந்திய ஏராளமானவர்கள் அவர்களை உற்சாகப்படுத்துகின்றனர். சில முகமூடி அணிந்த சிறுவர்கள் தங்கள் தலையால் கல்லை உடைக் கின்றனர். மேலும் சிலர் தற்காப்பு பயிற்சிகள், துப்பாக்கி சுடுதல் ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றனர். (ஐ)

# ஆந்திராவில் பலத்த மழை

## 182 மீனவர்கள் மாயம்

ஐதராபாத்,ஜூன் 23

வடஆந்திரா ஒடிஸா அருகே வங்கக் கடலில் நிலைகொண்டு இருந்த தீவிர காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ஆந்திரா, தெலுங்கானா மாநிலத்தில் கடந்த 4 நாள்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது.

ஆந்திராவில் 6 மாவட்டங்களிலும், தெலுங்கானாவில் 7 மாவட்டங்களிலும் கனமழை பெய்து வருகிறது. அதன் காரணமாக பல கிராமங்கள் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கிறது.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் 96 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. அதில் 17 கிராமங்கள் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தெலுங்கானா மாநிலத்தில் விஜய நகரம் ஆகிய மாவட்டம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அங்கு விவசாய பயிர்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

காகிநாடா, மசூலிப்பட்டினம், விசாகப்பட்டினம் பகுதிகளைச் சேர்ந்த 182 மீனவர்கள் கடந்த 4 நாள்களுக்கு முன்பு கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். அவர்கள் கரை திரும்பவில்லை. 3 ஹெலிகொப்டர் மூலம் அவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் இரண்டு இராணுவப் படையினரும் தேடுதல் பணிக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திர கடலோர மாவட்டங்கள் மற்றும் தெலுங்கானாவில் ஸ்ரீகாகுளம், விஜயநகரம் ஆகிய மாவட்டங்களில் இன்னும் இரண்டு நாள்களுக்கு மழை நீடிக்கும் என்று விசாகப்பட்டினம் வானிலை மையம் எச்சரித்துள்ளது.

மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.(ஐ)




## விஷச்சாராயம் குடித்த 105 பேர் சாவு

### மும்பையில் கூலித்தொழிலாளர்களின் பரிதாபம்



மும்பை, ஜூன் 23

மும்பை மால்வாணியில் கடந்த 17 ஆம் திகதி சட்டவிரோதமாக விற் பனை செய்யப்பட்ட சாராயத்தை அந்தப் பகுதியை சேர்ந்த கூலித் தொழிலாளிகள் குடித்துள்ளனர்.

அந்த விஷத் தன்மை கொண்டிருந்த சாராயத்தை அந்த பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வாங்கி குடித்துள்ளனர். அதனால் வாந்தி, மயக்கம், வயிற்று வலி ஏற்பட்டு சுருண்டு விழுந்துள்ளனர். பாதிக்கப்பட்ட அனைவரும் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். ஆனால் சிகிச்சை பயனின்றி மறுநாளே 13 பேர் உயிரிழந்தனர். மறுநாள் சாவு எண்ணிக்கை 55 ஆக உயர்ந்தது. நேற்று முன்தினம் மேலும் 35 பேர் உயிரிழந்துள்ளனர். அதனால் மூன்று நாளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆனது. இந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தவர்களில் நேற்றும் பலர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர். அதன் மூலம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை [illegible] ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## முன்னாள் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு



பாரிஸ்,ஜூன் 23

ஐரோப்பிய நாடுகளுக்குத் தஞ்சம் கோரி வரும் ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களை ஏளனமாக பேசிய பிரான்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது.

பிரான்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எதிர்க்கட்சி தலைவருமான நிக்கோலஸ் சர்கோஸி, கடந்த வாரம் பாரீஸ் நகருக்கு அருகில் தனது கட்சி சார்பில் நடந்த கூட்டத்தில் பங்கேற்றுள்ளார். கூட்டத்தில் பேசிய அவர், பிரான்ஸ் நாட்டு அரசிடம் போதிய நிதி இல்லை. வேலை வாய்ப்பு மிக குறைவாக உள்ளது. புதிதாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் வசதியும் இல்லை. இவ்வாறான சூழலில், ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்து வரும் அகதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு பதிலாக ஐ.நா. சபை அந்த எண்ணிக்கையை மேலும் விரிவுபடுத்த முயற்சி செய்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு புகலிடம் தேடி வரும் வெளிநாட்டு அகதிகள் தொடர்பாக அவர் கூட்டத்தில் ஏளனமாகப் பேசியமை பல தரப்பு அரசியல் தலைவர்கள் மற்றும் பொது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

Digitized by ... Foundation.

## சாவுத் தண்டனைக் கோரிக்கையை இந்தோனேசிய நீதிமன்றம் நிராகரிப்பு

இந்தோனேசியாவில் கடந்த 2005 ஆம் ஆண்டு, ஜகார்தா புறநகர் பகுதியில் போதைப் பொருள்களை விற்க முயன்றதாக கூறி பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த செர்ஜே அட்லாய் கைது செய்யப் பட்டார்.

அவர் மீதான வழக்கு விசாரணையின் முடிவில், சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதையடுத்து அந்த நாட்டின் ஜனாதிபதிக்கு செர்ஜே சார்பில் கருணை மனு அளிக்கப்பட்டது. ஆனால் அந்த மனு ஜனாதிபதியால் நிராகரிக்கப் பட்டது. தனது கருணை மனு நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக நீதிமன்றத்தில் மீண்டும் மனு தாக்கல் செய்தார் செர்ஜே. அந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் ஜனாதிபதியின் முடிவை ரத்துசெய்யமுடியாதுஎனநேற்று முன் தினம் தீர்ப்பு வழங்கியுள்ளது. (ஐ)



ஐக்கிய நாடுகள் சபையில் அகதிகளுக்கான சிறப்புத் தூதரும், பிரபல ஹொலிவூட் நடிகையுமான ஏஞ்சலினா ஜோலி தனது மகளுடன் துருக்கியில் உள்ள சிரியா அகதிகள் முகாமுக்குச் சென்று மக்களை சந்தித்தார். (ஐ)

## சீனாவின் மிக உயரமான கட்டடம்

பீஜிங், ஜூன் 23



சீனாவின் வர்த்தக நகரமான ஷாங்காயில் உலகிலேயே மிகப் பெரிய 2ஆவது கட்டடம் கட்டப் பட்டுள்ளது. இந்தக்கட்டடம் 2 ஆயிரத்து 86 அடி, அதாவது 632 மீற்றர் உயரத்தில் முக்கோண வடிவில் அமைக் கப்பட்டுள்ளது.

சீன மக்களின் முற்போக்குத் தன்மையின் அடையாளமாக இந்த முறுக்கிய வளைவுகள் அமைக்கப்பட்டுள் ளன. மேலும் இந்தக் கட்டடம் எதிர் காலத்தில் சீனாவின் அடையாளமாக திகழும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தக்கட்டடத்தில் 110 மாடிகள் உள்ளன. இந்தக் கட்டடம் கோடை காலத்தில் குளிர்ச்சியாகவும், குளிர் காலத்தில் இதமான வெப்பத்துடன் இருக்கும் வகையிலும் உருவாக்கப் பட்டுள்ளது. (ஐ)

## யேமனில் சவூதி கூட்டுப்படை வான்தாக்குதல் :15 பேர் சாவு

சனா, ஜூன் 23

அரபு நாடுகளில் ஒன்றான யேமனில் ஷியா பிரிவு ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல், ஜனாதிபதி மன்சூர் ஹாதி ஓட்டம் பிடித்தார். ஆனால் அவரை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்பது அரபு நாடுகளின் விருப்பம். அதற் காக ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சன்னிப் பிரிவைச் சேர்ந்த சவூதி அரேபியா தலைமையில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், பஹ்ரைன், கட்டார், ஜோர்தான், மொராக்கோ, எகிப்து, சூடான் ஆகிய 9 நாடுகளின் கூட்டுப்படை கள் கடந்த மார்ச் மாதம் வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. அந்தப் போரில் இது வரை 2 ஆயிரத்து 800 பேர் கொல்லப்பட் டுள்ளனர்.



இது தவிர்த்து ஐ.எஸ். தீவிரவாதிகளும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதன் காரணமாகவும் உயிரிழப்பு ஏற்பட்டு வருகிறது.

போரினால் நிலை குலைந்துள்ள யேமனில், 2 கோடியே 10 லட்சம் பேர் அதாவது, நாட்டின் மக்கள் தொகையில் 80 சதவீதம் பேர் மனித நேய உதவிகளை எதிர் பார்த்துக் காத்திருப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

எனவே யேமனில் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் ஐ.நா. சபை ஆர்வம் காட்டுகிறது. கடந்த வாரம் சுவிஸ் நாட்டில் உள்ள ஜெனிவா நகரில், ஐ.நா. சபை ஏற்பாட்டில் யேமன் போர் நிறுத்தம் தொடர்பாக பேச்சு நடந்தது. ஆனால் அதில் எந்தவொரு உடன்படிக்கையும் ஏற்பட வில்லை.

இந்த நிலையில், யேமனில் சாடா, மாரிப் மாகாணங்களில் சவூதி அரேபிய கூட்டுப்படைகள் நேற்று முன்தினம் மாலை வான்தாக்குதல் கள் நடத்தியுள்ளன.

ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறி வைத்து அந்தத் தாக்குதல்களை சவூதிக் கூட்டுப்படைகள் நடத்தினாலும், அவற்றில் அப்பாவி பொது மக்களில் 7 பேர் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர். இதுகுறித்த தகவலை ஹவுதி கிளர்ச்சியாளர் களின் சபா செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. (ஐ)

# பாகிஸ்தானில் வெயில் உக்கிரம்

## 141 பேர் சாவு

கராச்சி, ஜூன் 23

சுட்டெரிக்கும் வெயில் காரணமாக பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தில் மட்டும் 141 பேர் உயிரிழந்துள்ளனர். அதிலும் குறிப்பாக கராச்சியில் மட்டும் 132 பேர் உயிரிழந்துள்ளனர்.



சிந்து மாகாணத்தின் உள் பகுதிகளான தட்டா மற்றும் தர்ப்பர்கரில் 9 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். உடல் வறட்சி மற்றும் வெப்ப பக்கவாதம் காரணமாக தட்டாவில் 5 பேரும், தர்ப்பர்கரில் 4 பேரும் நேற்று உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் அந்த மாகாணத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 141 ஆக அதிகரித்துள்ளது. இதனையடுத்து கராச்சி உள்ளிட்ட மாகாணத்தின் அனைத்து மருத்துவ மனைகளிலும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று அந்த மாகாணத்தின் முதலமைச்சர் சையது குயாம் அலிஷா தெரிவித் துள்ளார்.

மேலும், வெயிலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கும் வகையில், மருத்துவமனைகளுக்கு மின்சாரம் மற்றும் தண்ணீர் தடையின்றி வழங்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றம் தீவிரவாதிகளால் தாக்குதல்



காபூல்,ஜூன் 23

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தை சுற்றி வளைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் அருகில் இருந்த கட்டடங்களில் பதுங்கியிருந்து நாடாளுமன்றம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலில் ஆப்கானிஸ்தான் நாடளுமன்ற உறுப்பினர்கள் பலர் காயமடைந்துள்ளனர். ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தின் வெளியே கார் குண்டுகள் மூலமும் தாக்குதல் நடத்தியுள்ளனர். நாடாளுமன்ற வளாகத்தில் 9 குண்டுகளை தீவிரவாதிகள் வெடிக்கச் செய்துள்ளனர்.

குண்டுகள் வெடித்துச் சிதறியதில் உலோகத்துகள்கள் தாக்கி உறுப்பினர்கள் பலர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த உறுப்பினர் கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளை முறியடிக்க நாடாளுமன்றத்தைச் சுற்றிவளைத்து ஆப்கான் பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனால் நாடாளுமன்ற வளாகம் புகை மண்டலமாகக் காட்சி அளிக்கிறது. நாடாளுமன்றத்தின் மீதான தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். (ஐ)

## ஆப்கானிஸ்தானில் முக்கிய நகரம் தலிபான்கள் வசம்

காபூல்,ஜூன் 23

ஆப்கானிஸ்தானின் குண்டஸ் மாகாணத்தில் உள்ள முக்கியமான மாவட்டமான சர்தாராவை தலிபான்கள் கைப்பற்றிக்கொண்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வியூக முக்கியத்துவமுள்ள சர்தாரா நகரைப் பிடிப்பதற்கான தாக்குதலை அரச படைகள் ஆரம்பித்துள்ளன. மாகாணத் தலைநகருக்கும் விமான நிலையத்துக்கும் அரு[illegible]ல் உள்ள அந்த நகரின் வழியா[illegible]த் தான் காபூலுக்குச் செல்லும் [illegible]தி போகிறது. எனவே, வியூக மு[illegible]கி யத்துவமுள்ள இடமாக சர்[illegible]ா கருதப்படுகிறது.

அந்தப் பகுதியில் தாங்கள் [illegible]த் திருக்கும் பொலிஸ் நிலையத்[illegible]ச் சுற்றி தலிபான்கள் சென்று[illegible]ன் டிருக்கும் படம் ஒன்றை தலி[illegible]ன் இணையத் தளம் ஒன்று வெ[illegible]ட் டுள்ளது.

இந்த நகரையும் தலிபா[illegible]ர் கையில் இருக்கும் பிற பகுதி[illegible]ா யும் திரும்ப மீட்பதற்கான த[illegible]கு தலை அரச படைகள் ஆரம்பி[illegible]ள் ளன. [illegible])

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கா.கிரிதரன்
கந்தசாமி நகர், வவுனியா


# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்போம்

இதயம் அற்ற இறைவன் இந்த உலகில் உள்ள இன்பங்களை அனுபவிப்பதற்கான ஆறுஅறிவு உள்ள ஆண், பெண் என்ற இரண்டு இனத்தைப் படைத்தான். அவ்வாறு படைக்கப்பட்ட ஆண், பெண் என்ற இனங்களும் சமூகத்தில் சமமாகவும், சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்பதற்காக தமக்குள்ளே ஒரு சில கட்டுப்பாடுகளையும், விதிமுறைகளையும் ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வாறு விதிமுறைகளை ஏற்படுத்தியும் சமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான உரிமைகள் இல்லை.

இறைவனால் படைக்கப்பட்ட பெண் இனம் ஆனது, இந்த உலக வாழ்வில் பெரிதும் மதிக்கப்பட வேண்டியவர்கள். சமூகத்தில் சந்ததிகளையும், சாதனையாளர்களையும் உருவாக்குபவர்கள்.

இதனை பாரதி சாதம் படைக்கவும் முடியும் பெண்ணால் தெய்வ சாதி படைக்கவும் முடியும் என பாடியுள்ளார். இந்த உலக வாழ்வில் பெண்கள் பல்வேறு கதாபாத்திரங்களை ஏற்று செயற்படுகின்றனர். அந்த வகையில் ஒவ்வொரு பெண்ணும் ஒரு பிள்ளையாக, ஒரு மாணவியாக, ஒரு மனைவியாக, ஒரு தாயாக, ஒரு அக்காவாக, ஒரு தங்கையாக எனப் பல்வேறு சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கதாபாத்திரம் வேறுபடுகின்றது.

இவ்வாறு பெருமைகளை உடைய




பெண்கள் இன்று சுதந்திரமாக நடமாடமுடியாது. காரணம் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகம் நடைபெறுகின்றது.

வன்முறை என்பது சமூகத்தில் பெண்கள் சுதந்திரமாகவும், சமத்துவத்துடனும் தமது சுயவிருப்பு வெறுப்பு நிலைமைகளை வெளிப்படுத்த முடியாமல் இருக்கும் சமூக காரணிகள் ஆகும். இந்த வன்முறைகள் பல்வேறாக பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் இடம்பெறுகின்றது.

பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகளை பிரதானமாக இரண்டு வகைப்படுத்த முடியும். ஒன்று உடல் ரீதியான வன்முறை. உதார ணமாக பாலியல் துஷ்பிரயோ கம். இரண்டாவது உளவியல் ரீதி யான வன்முறை. உதாரணமாக தகாத வார்த்தை பிரயோகம் போன்றனவாகும். மேலும் பெண் கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வன்முறைக்கு உட்படுத்தப்படு கின்றனர். உதாரணமாக பாடசாலையில் பெண்கள் தகாத வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் ஏளனம் செய்தல், மேலும் பெண் களின் உடல் அமைப்பை தகாத முறையில் வரைதல் மற்றும் வர்ணித்தல் மற்றும் அவர்களின் உடைமைக ளுக்கு சேதம் ஏற்படுத் துதல் என பல்வேறாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மேற்கொள் ளப்படுகின்றன.

மேலும் வீடுகளில் பெண்களுக்கு எதிராக வன்முறைகள் அதிகம் நிகழ்கின்றன. உதாரணமாக பெண்களுக்கு வீடுகளில் கருத்துச் சுதந்திரம் தடுக்கப்படுதல், முடிவெடுக்கும் அதிகாரத்தை கொடுப்பதில்லை, வீட்டுவேலைகளை அளவுக்கு மேல் சுமத்துதல் மற்றும் பாலியல் ரீதியிலான துன்புறுத்தல் என பல்வேறாக வீடுகளில் பெண்களுக்கு எதிராக வன்முறை மேற்கொள்ளப்படுகின்றது. இதைவிடவும், பெண்கள் தொழில் புரியும் இடங்களில் சொல்ல முடியாத பல்வேறு துன்பங்களை அனு பவிக்கின்றார்கள். இவ்வாறாக பெண்களின் மீது மேற்கொள் ளப்படும் வன்முறைகள் மூலம் அவர்களின் ஆளுமையும், ஆற்றலும் சமூகத்தில் புறக்கணிக்கப்படுகின்றது.

இவ்வாறாக ஆதி முதல் அந்தம் வரை பெண்களுக்கு எதிராக வன்முறைகள் நிகழ்த்தப்பட்ட வண்ணமே உள்ளன. 21 ஆம் நூற்றாண்டில் மட்டும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஆரம்பிக்கவில்லை. இது பண்டைய காலம் தொட்டே இருந்து வருகின்றது. பண்டைய காலங்களில் பூப்படைந்து விட்டால் அவர்கள் வீட்டை விட்டு வெளியேபோகக் கூடாது என்ற ஒரு அடக்கு முறையின் மூலமாக பெண்களுக்கு எதிரான வன்முறை மேற்கொள்ளப்பட்டதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. மேலும் இந்தக் காலத்தில் பெண்கள் கல்விகற்க தடை விதிக்கப்பட்டது. மேலும் இந்தக் காலப்பகுதியில் கணவன் இறந்தவுடன் பெண்கள் உடன்கட்டை ஏற வேண்டும். என்ற வழமை காணப்படுகின்றது. இதைவிடவும் இந்தக் காலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளாக பாலியல் துஷ்பிரயோகம் கட்டாயத் திருமணம், இள வயது திருமணம், பலாத்கார விவாகம் எனப் பல்வேறு வன்முறைகள் காணப்படுகின்றன.



இவ்வாறாக இந்தக் காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டு பல கிளர்ச்சியாளர்கள் தோற்றம் பெற்றனர். அவர்களில் இராஜாராம் மோகன்ராஜ், தயாநந்த சரஸ்வதி, மகாத்மாகாந்தி, பாராதியார் போன்றவர்கள் முக்கியமானவர்கள் ஆவர்.

இதில் பாரதியார் பெண்களின் வன்முறைகளுக்கு எதிராக பாடியுள்ளார். மாட்டை பிடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே வீட்டினின் எம்மிடம் காட்ட வந்தார்!! எனச் சிறப்பாக பாடியுள்ளார்.

இதே போன்றே இன்று நவீன காலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகம் நடைபெறுகின்றன. உதாரணமாக கடந்த வருடம் இந்தியாவிலே சட்டக்கல்லூரி மாணவி ஒருவர் பேருந்தில் வைத்து பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்டிருந்ததால், இது இக்காலப் பெண்கள் மீதான வன்முறையை எடுத்துக் காட்டுகின்றது. இதைவிடவும் எமது வடக்கு மாகாணத்தில் ஒருசில நாள்களுக்கு முன்பு புங்குடுதீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவி வித்தியா மீதான பாலியல் துஷ்பிரயோகம் எமது பிரதேசங்களில் பெண்களின் நிலையைக் காட்டுகின்றது.

இவ்வாறாக எமது சமூகத்தில் நாளுக்கு நாள் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இந்த நிலையை மாற்றவேண்டும். இதற்காக பெண்கள் பாதுகாப்பு பொலிஸ் பிரிவை வலுப்படுத்த வேண்டும். மேலும் பெண்கள் மீது வன்முறை செய்வோரை சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையாக தண்டிக்க வேண்டும். இதைவிடவும் சமூகத்தில் உள்ள சிவில் அமைப்புகளையும் வலுப்படுத்தி பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கமுடியும்.

இதனைவிடவும் போக்குவரத்தின் போது பெண்களுக்கு தனியாக பேருந்துகளை பயன்படுத்த வேண்டும். மேலும் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் விழிப்புணர்வு ஊட்டுதல் வேண்டும். இவ்வாறாக பல்வேறு நடைமுறைகளைப் பின்பற்றி சமூகத்தில் இருந்து பெண்களுக்கு எதிரான வன்முறையை இல்லாது ஒழிப்போம்.

# இரு வெள்ளி விருதுகளை தனதாக்கிய பீபள்ஸ் லீசிங்

இலங்கையின் வங்கி சாரா நிதிசார் சேவைகளை வழங்கும் துறைசார் முன்னோடியான பீபள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, இலங்கை இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித்துறை விருதுகள் வழங்கும் நிகழ்வில் இரு வெள்ளி விருதுகளை தனதாக்கியிருந்தது. தொடர்ச்சியாக நான்காவது வருடமாக இந்நிகழ்வு கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது.

இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதிச் சேவைகளை இலங்கையில் வழங்கும் தாபனங்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளை கௌரவிக்கும் வகையில் ஆறு பிரிவுகளில் இந்த இலங்கை இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித்துறை விருதுகள் வழங்கப்படுகின்றன. 'ஆண்டின் சிறந்த சமூக மேம்பாட்டு இஸ்லாமிய நிதி தாபனம்' என்பதற்கான வெள்ளி விருதை பெற்றுக் கொண்டதுடன், பீபள்ஸ் லீசிங் நிறுவனத்தின் யூனியன் பிளேஸ் கிளை முகாமையாளர் அஸ்லம் பதுர்தீன் 'ஆண்டின் வளர்ந்து வரும் இஸ்லாமிய வங்கியியல் சேவை வழங்குநர்' எனும் வெள்ளி விருதையும் பெற்றிருந்தார்.

இந்த இரு விருதுகளையும் பெற்றுக் கொண்டது தொடர்பில் பீபள்ஸ் லீசிங் தாபனத்தின் வணிக அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பதில் பொது முகாமையாளர் ரொஹான் தென்னக்கோன் கருத்துத் தெரிவிக்கையில், 'இந்த வெள்ளி விருதுகளை பெற்றுக் கொண்டமை தொடர்பில் பீபள்ஸ் லீசிங் பெருமையடைகிறது. இலங்கை இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித்துறை விருதுகளை பெற்றுக் கொண்ட இரண்டாவது தடவையாக இது அமைந்துள்ளது. பீபள்ஸ் லீசிங் தாபனத்தின் 'அல் சபா' இஸ்லாமிய நிதியியல் பிரிவு தற்போது படிப்படியாக வலிமையடைந்து வருகிறது' என்றார்.

'எமது அல் சபா இஸ்லாமிய நிதிச் சேவை பிரிவை நாம் 2005 இல் ஆரம்பித்திருந்தோம். இந்த பிரிவின் சகல செயற்பாடுகளும் ஷரிஆ விதிமுறைகளுக்கமைய முன்னெடுக்கப்படுகின்றன. இதனை ஷரிஆ ஆலோசனை சபை மேற்பார்வை செய்கின்றது. இந்த செயற்பாடுகள் சிறப்பான வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. அல் சபா [illegible] கிளைகளை ஆரம்பித்து நாம் [illegible] இஸ்லாமிய நிதிச் சேவைகளை எந்தவொரு பீபள்ஸ் லீசிங் கிளையிலிருந்தும் வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும்' என்றார்.

பீபள்ஸ் லீசிங் தாபனம், நாடு முழுவதும் பரந்த அல் சபா சேவை வலையமைப்பை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இதன் மூலமாக பரந்தளவு நிதிச் சேவைகளை சர்வதேச இஸ்லாமிய நிதியியல் விதிமுறைகளுக்கமைய வழங்க எதிர்பார்த்துள்ளது. 'எமது நிறுவனத்தின் சார்பாக ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் இஸ்லாமிய நிதிச் சேவை வழங்கும் நபர்' எனும் விருதை வென்ற அஸ்லம் பதுர்தீன் மற்றும் பீபள்ஸ் லீசிங் தாபனத்தின் அல் சபா இஸ்லாமிய நிதியியல் பிரிவுக்கும் பாராட்டுக்களை தெரிவிக்கிறேன்' என தென்னகோன் மேலும் குறிப்பிட்டார்.

1995ஆம் ஆண்டு பீபள்ஸ் லீசிங் கம்பனி, இலங்கையின் மாபெரும் அரச வங்கியான மக்கள் வங்கியின் அங்கத்துவ தாபனமாக தாபிக்கப்பட்டது, கடந்த 13 வருடங்களாக சந்தை முன்னோடி எனும் ஸ்தானத்தை பீபள்ஸ் லீசிங் கம்பனி தன்னகத்தே கொண்டுள்ளது. நாட்டில் காணப்படும் வங்கி சாராத தாபனங்களில் பாரிய லீசிங் சேவை வழங்குநர் எனும் பெருமையையும் கொண்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வளம்பெற வேண்டும்

ஆசியாவிலேயே மிகவும் தரம் வாய்ந்த வைத்தியசாலையாகத் துலங்கிய மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் வளர்ச்சி இன்றைய கூட்டுறவுத் துறையின் பின்னடைவினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி நிற்கிறது.

அண்மையில் உதயன் நாளிதழில் 30ஆவது அகவைக் கொண்டாட்ட விழா யாழ். இந்துக் கல்லூரி சபாரட்ணம் அரங்கில் நடைபெற்றது. இந்த அரங்கில் இருந்தபோது, மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையின் மண்டபம் ஞாபகத்துக்கு வந்தது. அந்த மண்டபத்தில்தான் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்க பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. கிடைத்த வளங்களைப் பயன்படுத்தி அந்த மண்டபத்தை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் பேணி வருவது சிறப்பானதாகும்.

இலங்கையில் அதுவும் வடபகுதியில் கூட்டுறவுத் துறை சிறந்து விளங்கியது. கூட்டுறவாளர்களின் பல்நோக்குச் சிந்தனைகளின் வெளிப்பாடுகள் பல்வேறு சேவை வடிவங்களில் வெளிப்பட்டன. அவைகளில் ஒன்றாக 1935இல் ஆரம்பிக்கப்பட்டு 80 வருடங்களை எட்டியிருக்கும் இந்த வைத்தியசாலை கூட்டுறவுக்கே உரித்தான தனித்தன்மையுடன் செயற்பட்டது. பெரும் நிலப்பரப்பில் வயல், கடல், பனந்தோப்புகள் மத்தியில் குடிமனைகள் சூழ்ந்த பிரதேசத்தில் அமைந்த இந்த வைத்தியசாலை வளாகத்தில் அன்று வாடகையாக நாளொன்றுக்கு 50 சதத்தில் இருந்து 50 ரூபா வரையிலான நோயாளர் விடுதிகள் இருந்தமை கூட்டுறவுத்துறையின் சிறப்பம்சமாகும்.

இந்த வைத்தியசாலையால் மூளாய் என்ற இடத்திற்கே ஒரு தனிப் பெருமை கிடைத்தது. வடமராட்சி பருத்தித்துறையில் இருந்து தீவகங்கள் வரையான இடங்களிலிருந்து இங்கு சிகிச்சை பெறவருபவர்கள், மூளாய்–பருத்தித்துறை வரையான பஸ்சேவை, வைத்தியசாலையின் முன்பாக வீதியை கலகலப்பாகிக்கொண்டிருக்கும் பல உணவகங்கள், தனியார் வாடகைக்காரர்கள் என ஒரே பரபரப்புத்தான். 24 மணித்தியாலமும் சிறந்த சேவையை வழங்கிக் கொண்டிருந்த இந்தக் கூட்டுறவு வைத்தியசாலை வடக்கின் கூட்டுறவுத்துறைக்கு பெருமை சேர்த்தது.

எண்பதாம் அகவையைத் தொட்டு நின்றாலும், இன்றும் அந்த வீதியில் போவோர் வருவோரை வியக்கவைக்கும் கூட்டுறவு வைத்தியசாலையின் அழகான நிர்வாகச் செயற்பாட்டுக் கட்டடமும் கம்பீரத்துடன் விளங்கும் பிரமாண்டமான முன்பக்க போர்ட்டிக்கோவும் இன்றைய கூட்டுறவுச் சமூகத்தினரை வருந்தி அழைத்து நிற்கின்றன.

கூட்டுறவு வைத்தியசாலைச் சங்க அங்கத்தவர்கள், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், இன்றைய வைத்தியசாலை நிர்வாக சபைக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். எமது கூட்டுறவுப் பரம்பரையினர் எமக்குத் தேடித்தந்த கூட்டுறவு முதுசங்கள் பாதுகாக்கப்படவேண்டும். வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் வேலைத் திட்டங்களின் கீழ் எங்கள் கூட்டுறவு வைத்தியசாலையும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கூட்டுறவுக்கேயுரித்தான மிடுக்குடன் செயலாற்ற வேண்டும். இதற்கு அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

*கி.வே.கிருஷ்ணானந்தன்*
*சிவன்பண்ணை வீதி*



## வாசகர் திருமுகம்

## நல்ல உள்ளம் கொண்டவரைக் கௌரவித்தனர்

சங்கானை பிரதேச வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர் (பெண்) இரவு நேரக் கடமைக்காக, வைத்தியசாலைக்குச் செல்லும்போது, வல்லை வீதி, சங்கானையில், நகைகளும், சிறு தொகைப்பணமும் கொண்ட அவரது கைப்பையைத் தவறவிட்டுள்ளார்.

அந்த வீதியால் பயணம் செய்த பண்ணாகம், சுழிபுரத்தைச் சேர்ந்தவரும், சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலை ஆசிரியையுமான திருமதி மோகனராஜன் தனலட்சுமி என்டவர் அதனைக் கண்டெடுத்துள்ளார். அந்தப் பையில் இருந்த ஓர் அடகுநகைத் துண்டு மூலம், உரியவரைக் கண்டு பையை ஒப்படைத்துள்ளார்.

இந்தச் செயலைப் பாராட்டி, வைத்தியசாலைச் சமூகம் 25.04. 2015இல் இவரை வைத்தியசா லைக்கு அழைத்துக் கௌரவித்தனர்.

இன்றைய காலகட்டதில் இவ்வாறான நல்ல உள்ளம் கொண்டவர்கள், மேன்மேலும் சமுதாயத்தில் உருவாகவேண்டும் என கௌரவித்தோர் தெரிவித்தனர். இவருடைய இந்தச் செயலால் பண்ணாகத்து மக்கள் பெருமை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

*நலன் விரும்பி*

## இனிய உதயனுக்கு...

என்னால் விமர்சனம் செய்யப்பட்ட 'இயல், இசை, நாடக விழா 2015 ஒரு பார்வை' என்ற கட்டுரையை கடந்த புதன்கிழமை (17 ஜூன் 2015)அன்று பிரசுரித்தமைக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அதில் கடந்த வருடம் மூன்று நாள்கள் நடைபெற்றது என்பது தவறான கருத்தாகும். மேடையில் பெரியார் ஒருவர் ஆற்றிய உரையின் நிமித்தம் நானும் தவறாகப் புரிந்து கொண்டேன். கடந்த வருடமும் ஐந்து நாள்கள் நடைபெற்றது என்பதை கூறிக்கொண்டு தவறுக்கு மனம் வருந்துகின்றேன். *(கடந்த வருட அழைப்பிதழ் மூலம் இதனை உறுதி செய்துள்ளேன்.)*

*ஆரணி, மானிப்பாய்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# உலக அழிவை நெருங்குகிறோமா?

அணு ஆயுதங்களின் பெருக்கமும், பரவலும், அதிகரித்துவரும் வன்முறைகளும், ஆயுத மோதல்களும் ஒருபுறம் உலக அழிவு தொடர்பான அச்சுறுத் தலை எதிரொலித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், மனிதர்களின் மனிதத்தன்மையற்ற செயற்பாடுகள் உலக அழிவை விரைவுபடுத்திக் கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள ஆய்வில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

உயிரினங்கள் பெரிய அளவில் அழியும் ஒரு கால கட்டம் பூமியில் உருவாகிவருகிறது என்றும், இந்தக் காலகட்டத்தில் மனித இனமும் அழியும் வாய்ப்புள்ளது என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

விலங்கினங்கள் அதிர்ச்சியளிக்கும் அதிக வேகத்தில் அழிந்துவருவதாக புதிய ஆய்வொன்று காட்டுகிறது. மனிதத் தலையீடு இல்லாமல் சாதாரணமாக விலங்கி னங்கள் அழியும் வேகத்தோடு ஒப்பிடுகையில், தற் போது நூறு மடங்கு அதிக வேகத்தில் உயிரினங்கள் அழிந்துவருவதாக இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

விலங்கினங்களுடைய வாழ்விடங்கள் மாறிப்போவதும், சுற்றுச்சூழல் மாசுபடுவதும், காலநிலை மாற்ற முமே இந்த அழிவிற்குக் காரணங்கள் என்று தெரிவிக் கப்படுகிறது.

இத்தனை உயிரினங்களும் அழியக் காரணமாக இவை இருப்பதால் தமக்கு வாழ்வாதாரமாக விளங்கி வரும் கட்டமைப்பையும் மனித இனம் தானாகவே அழித்துக் கொள்கிறது என இந்த ஆய்வை நடத்திய விஞ்ஞானிகளில் ஒருவர் கூறுகிறார்.

ஆறரைக் கோடி வருடங்களுக்கு முன்னால் பெரிய விண்கல் பூமியில் விழுந்து டைனோசர்கள் உட்பட ஏராளமான உயிரினங்கள் அழிந்த காலகட்டத்துக்குப் பிற்பாடு, மிக அதிக வேகத்தில் உயிரினங்கள் அழிவது தற்போதுதான் என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் டைனோசர்களின் அழிவிற்கு வழிவகுத்த நிலைமையை தற்போது மனித இனம் முகங்கொடுத்துக்கொண்டிருப்பதை இலகுவாக நோக்கி விடமுடியாது. உலகில் பெரியளவில் உயிரினங்கள் அழியும் ஆறாவது காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு அபாயத்தின் மத்தியிலும் ஆறுதலான செய்தியொன்றும் காத்திருக்கின் றது. இதற்கு முன்பாக ஐந்து தடவைகள் பெரிய அளவில் உலகில் உயிரினங்கள் அழிவிற்கு முகங்கொடுத்த சந்தர்ப்பங்களில் அவர்கள் எதிர்கொண்ட அச்சுறுத்தல் கள் அவர்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகக் காணப்பட்டன. பாரிய விண்கற்கள் பூமியுடன் மோதியமை, தொடர்ச்சியான எரிமலை வெடிப்புகள் போன்றவையே முன்னைய பேரழிவுகளுக்குக் காரணமாகியிருந்தன. ஆனால், தற்போது முகங்கொடுத்துவரும் நவீன பேரழி விற்குக் காடழிப்பு, சட்டவிரோத வேட்டையாடல், பூகோளம் வெப்பமாதல் உட்பட மனிதர்களால் இயற்கையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களும் காரணமாக அமைந்துள்ளதாக விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டி யுள்ளனர். மனிதர்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டால் தற்போது எதிர்நோக்கும் அழிவை முற்றாகத் தவிர்க்க முடியாவிட்டாலும் தாமதப்படுத்திக்கொள்ளமுடியும்.

உலகில் முன்னெப்போதுமில்லாத அளவில் கால நிலைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன், ஒருகாலத்தில் வளங்கொழித்த பகுதிகள் தற்போது வறண்ட நிலங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் செல்வந்தர்களை அதிகமாகக் கொண்ட செழிப்புமிக்க மாநிலமான கலிபோர்னியா தற்போது வரலாறு காணாத வறட்சிக்கு முகங்கொடுத்துள்ளமை நிலைமையின் பாரதூரத்தை உணர்த்துகின்றது.

கடந்த 8 இலட்சம் ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகமான காபனீரொட்சைட் தற்போது எமது வளி மண்டலத்தில் காணப்படுகின்றமை, 1870ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடல்மட்டத்தின் அளவு 8 அங்குலங்களால் உயர்வடைந்துள்ளமை அபாயத்தின் பரிமாணத்தை எடுத்தியம்புகின்றன.

மனிதர்கள் ஆதிக்கவெறியினாலும் பொருளாதார முன்னேற்றப்போட்டிகளின் காரணமாகவும் பின்பற்று கின்ற இயற்கைக்கு விரோதமான நடவடிக்கைகளால் உலக வெப்பநிலை மோசமாக அதிகரிக்கின்றமை உயிரினங்களின் அழிவைத் துரிதப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. உயிரினங்கள் துரிதமாக அழியும் காலப்பகுதியில் மனித இனமும் அழியும் என விஞ்ஞானிகள் விடுத்திருக்கும் எச்சரிக்கை, நமக்கு முன்பாக எதிர்நோக்கியுள்ள பெரும் அழிவு குறித்த நிதர்சனம் பற்றிய அபாயச் சங்காகக் கருதப்படவேண்டியது அவசியமாகும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிறுபான்மையினரை புறமொதுக்கும் இரு கட்சி ஜனநாயகம் இங்கே.......!

பலகட்சி ஜனநாயக முறையை ஒழித்துக் கட்டிவிட்டு, இருகட்சி ஆட்சிமுறை ஒன்றை நிலைநாட்ட அரசமைப்புக்கான 20ஆவது திருத்தத்தின் மூலம் முயற்சி எடுக்கப்படுவதாக, நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்து உரையாடிய சிறு பான்மை இனக் கட்சிகள் முறைப்பாடு செய்துள்ளன.

20ஆவது அரசமைப்பு திருத்த சட்ட முன்வரைவு, சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியிலேயே வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரி பால சிறிசேன, நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் அவர்களைச் சார்ந்த சிறிய கட்சிகளும் இதனை ஆதரிக்கின்றன.

குறிப்பாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்த முன்வரைவை பலமாக ஆதரிக்கிறார். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் போன்றவர்களை கடுமையான வார்த்தைகளால் சாடவும் செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதால் இந்தச் சட்டவரைவு இலகுவாக நிறைவேறிவிடும் சாத்தியம் காணப்படுகின்றது. ஆனால், இந்த முன்வரைவை சிறுபான்மையினர் கட்சிகளும் ஜனதா விமுக்தி பெரமுன, கம்யூனிஸ்ட் மற்றும் சம சமாஜக் கட்சி போன்றவையும் கடுமையாக எதிர்த்து நிற்கின்றன.

அதேவேளை, நாட்டின் இரண்டாவது பெரிய கட்சியாக விளங்கும் ஐ.தே.கவும் அவர்களுடன் இணைந்து நிற்பதனால், அது மூன்றிலிரண்டு வாக்குப் பலத்துடன் நிறைவேறுவது சந்தேகத்துக்குரியதே.

தற்போதைய அரசின் பிரதமரும் அவர் தலைமையிலான அக்கட்சி அமைச்சர்களும் அவரது கட்சி உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களிக்க நேர்ந்தால், அது நாடாளுமன்றத்தை கேலிக்குரிய தாக்கும். அதாவது அரச தரப்பினரே அரசு தரப்பிலான ஓர் அதிமுக்கிய சட்ட முன்வரைவை எதிர்த்து வாக்களித்தால், ஒரு விசித்திர நிலைமை ஏற்படுவதாகக் கொள்ளலாம்.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுவதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் விரும்புவார் என்று எதிர்பார்க்க முடியாது.

இவற்றை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டே, பிரதமர் ரணில் நாட்டில் இருகட்சி ஆட்சி முறை உருவாக்கப்படுவதை அனுமதிக் கப்போவதில்லை என்று தம்மைச் சந்தித்த சிறுபான்மையின மற்றும் சிறிய கட்சி பிரதிநிதிகளிடம் கூறியிருப்பார் என்று கருத இடமுண்டு.

பொதுவில், ஐ.தே.கவிலிருந்து எஸ்.டபிள்யு.ஆர்டி பண்டாரநாயக்க விலகிக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பித்த காலத்திலிருந்து--

பல கட்சிகளின் செயற்பாடுகள் எவ்வாறு இருந்தாலும், இந்த இரண்டு கட்சிகளுமே பெரிய கட்சிகளாகவும், ஒன்றில்லாவிட்டால் மற்றது என்ற வகையில் ஆட்சி பொறுப்பை ஏற்று நடத்தியும் வந்துள்ளன. ஏனைய சிறிய கட்சிகள் தத்தமது தேவைக்கு ஏற்ப பதவியிலிருக்கும் கட்சிக்கு ஆதரவளித்துள்ளனவே அன்றி, அவை அதிகார பீடத்தில் அமருவது பற்றி சிந்தித்துப்பார்க்க முடியாத நிலையே நீடித்து வந்துள்ளது. மொத்தத்தில், இங்கு உண்மையில் இரண்டு கட்சிகளின் ஆட்சிதான் இருந்து வந்துள்ளது. இன்னும் சொல்வதானால் பெரும்பான்மை இனத்தவர்களைக் கொண்ட இரண்டு கட்சி ஆட்சி முறைதான் செயற்பட்டு வந்திருக்கிறது. அதுவே யதார்த்தம்.

சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், இந்த இரண்டு கட்சியினருமே ஆட்சிப் பீடம் ஏறுவதற்கு சிறுபான்மை இனத்தவர்களையும் சிறிய கட்சிகளையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர, சிறிய, சிறுபான்மைக்கட்சிகளின் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு தீர்த்து வைக்க முயன்றதில்லை. அதற்கான முயற்சிகளும் இதயசுத்தியுடன் நடைபெறவில்லை. அதனாலேயே நாடு இன்று உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கும் பாவ வினை வந்து சேர்ந்துள்ளது.

அரசியல் தலைவர்கள், கட்சி நலன்களை விட நாட்டினதும் மக்களதும் பிரச்சினைகளில் மனம் வைத்துச் செயற்படும் காலம் ஒன்று முகிழ்த்தால் மட்டுமே சுபீட்சமுண்டு. இல்லை எனில் இதே நிலை பல ஆண்டுகளுக்குத் தொடரவே செய்யும்....!

# நாட்டின் எதிர்காலம் பெரும்பான்மையின் மனமாற்றத்தில்

■ சேரலாதன்

இந்த நாடு ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை எதிர்கொள்ள வேண்டுமென்றால் பெரும்பான்மையின மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். இந்த நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து அவர்கள் மீது இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட சிந்தனைகளே திணிக்கப்பட்டு வருகின்றன. தென்பகுதியைச் சேர்ந்த அரசியல் தலைவர்களுக்கு இனவாதம் தான் சிறந்த அரசியல் மூலதனமாக வாய்த்துள்ளது. இதனால் மக்களின் மனங்களிலும் இதையே விதைத்து வந்துள்ளனர்.



அந்நியர் ஆட்சியில் இங்கு வாழ்ந்த இனங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க வகையில் பேதங்கள் இருக்கவில்லை. ஆனால் நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அரசியல்வாதிகளே இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இனவாதத்தை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்திய பிதாமகர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க என்றால் அது மிகையாகாது. லண்டனில் உயர்கல்வி கற்ற இந்தப் பெரியார் அங்கிருந்து திரும்பி வந்த பின்னர் அரசியலில் காலடி எடுத்து வைத்தார். சிறந்த பேச்சாற்றல் மிக்கவரான அவர் அரசியலில் நிலைத்து நிற்க வேண்டுமென்றால், பெரும்பான்மை மக்களின் இதயங்களை வெல்ல வேண்டுமென்றால் இனவாதத்தை விதைப்பதே சிறந்த வழி என்பதைப் புரிந்து கொண்டார்.

இருபத்துநான்கு மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வருவேனென அவர் கூறிய வார்த்தைகள் பெரும்பான்மையின மக்களைப் பெரிதும் கவர்ந்தது. பண்டாரநாயக்க நாட்டின் அரசுத் தலைவராகவும் அமர்ந்து கொண்டார். தமிழர்களின் அஹிம்சை வழியிலான போராட்டம் இம்பெறுவதற்கு பண்டாரநாயக்கவின் செயற்பாடுகளே வழிவகுத்தன. தமிழ், சிங்கள மக்களுக்கிடையில் விரிசல்களும் அப்போதுதான் ஆரம்பிக்கத் தொடங்கின.

பின்னாள்களில் பண்டாரநாயக்காவின் சிந்தனைகளையே ஏனைய சிங்கள அரசியல் தலைவர்களும் பின்பற்றத் தொடங்கினர். கொடிய இனமோதல் ஒன்று உருவாகுவதற்கு இதுவே வழி வகுத்தது.

சிறுபான்மை மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான், அவர்களுக்கும் சகல உரிமைகளும் உள்ளன, இனரீதியாக அவர்களை ஒதுக்கி வைப்பது தேவையற்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்ற சிந்தனைகள் பெரும்பான்மையின மக்களின் மனங்களில் எழுமாயின் இனவாதம் பேசுகின்ற அரசியல்வாதிகள் எப்போதே காணாமற் போய்விட்டிருப்பார்கள். ஆனால் ஏனோ இந்தச் சிந்தனைகள் அவர்களின் மனங்களில் இன்னமும் தோன்றவில்லை.

பல்வேறு கால கட்டங்களில் இன மோதல்களை எதிர்கொண்ட கசப்பான அனுபவங்களை இந்த நாடு எதிர் கொண்டுள்ளது. இதில் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள்தான் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனாலும் கூட இன்றுவரை இவை தவறு என்பதை ஏற்றுக் கொள்ளுகின்ற மனப்பக்குவம் அந்த மக்களிடம் ஏற்படுத்தப்படவில்லை.

இன்றுகூட தென்பகுதி அரசியல்வாதிகள் அங்குள்ள மக்கள் மத்தியில் இனவாதத்தைக் கக்குவதிலேயே முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இதுவரை காலமும் புலிகளால் அச்சுறுத்தல் இருப்பதாகப் பயமுறுத்தப்பட்ட பெரும்பான்மையின மக்கள் தற்போது புலிகள் அழிக்கப்பட்ட நிலையிலும் அவர்களின் பேரால் குழப்பங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர். பெருமளவானவர்கள் இதை நம்புவதுதான் வேதனை தருகின்றது.



இதேவேளை புத்தபிரானின் போதனைகளைக் கடைப்பிடிப்பதாகக் கூறும் புத்த மதகுருமார்களும் மக்களின் மனங்களில் விஷ வித்துக்களை விதைப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். மக்களும் இவர்கள் கூறுவதை உண்மையென ஏற்றுக்கொள்வதாகத் தெரிகிறது. அரசியல்வாதிகளையும், புத்த குருமாரையும் மக்கள் நம்புவதால் அவர்களின் மனங்களில் மாற்றங்களை இலகுவாக ஏற்படுத்த முடியவில்லை.

சில மிதவாத சிங்கள அரசியல் தலைவர்கள் இன ஒற்றுமையை ஏற்படுத்தும் விதமாகக் கருத்துக்களை வெளியிட்டாலும் அதை ஏற்றுக்கொள்ளுகின்ற மனப்பக்குவம் மக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் அத்தகைய தலைவர்கள் அரசியல் ரீதியான அங்கீகாரத்தையும் சிங்கள மக்களிடம் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

தற்போதுகூட தோற்கடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் மஹிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் மீண்டும் தமது அரசியல் வருகையை உறுதிப்படுத்தும் பொருட்டு மிகவும் கீழ்த்தரமான வகையில் பெரும்பான்மையின மக்களிடையே இனவாதக் கருத்துக் களைப் பரப்பி வருகின்றார். மக்களும் அவரது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதாகவும் தெரிகின்றது.

இந்த நிலையே நீடிக்குமானால் நாட்டில் அமைதியும், சமாதானமும் எட்டாத கனவுகளாக மாறிவிடும் நிலைதான் உருவாகப் போகின்றது.

தென்பகுதி மக்கள் அரசியல் வாதிகளின் கருத்துக்களை ஒருபுறம் ஒதுக்கிவைத்து விட்டு சுயமாகச் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும். எது உண்மை, எது பொய் என்பதை அவர்கள் தீர அலசிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் உண்மையான நிலைவரங்கள் அவர்களின் மனதில் புரிய ஆரம்பிக்கும்.

இதை விடுத்து அரசியல்வாதிகள் மற்றும் மதகுருமார்களின் துர்போதனைகளை ஏற்றுக்கொண்டு அதன்வழி நடப்பார்களாயின் இன ஐக்கியம் மேன்மேலும் சிதைவடைவதோடு இந்த நாட்டின் எதிர்காலமே பாழாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதையும் சாதிக்காத மோடியின் வருகை

தமிழில்–நித்தியபாரதி

இன்னமும் சூழல் மாறவில்லை. தமிழ் நாட்டின் ஈரோடு மாவட்டத்திலுள்ள அரசலூர் அகதி முகாமிலேயே நந்தினி பிறந்தார். இவரது பெற்றோர்கள் இலங்கைத் தீவின் வடக்கு மாகாணத்தில் போர் மேகம் சூழப்பட்ட 1990 இல் அங்கிருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர்.

நந்தினி உயர்நிலைப் பரீட்சையில் 1200 மொத்தப் புள்ளிகளுக்கு 1170 புள்ளிகளைப் பெற்று சிறப்புச் சித்தி பெற்றார். இதன் பின்னர் இவர் சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்பதற்காக விண்ணப்பித்திருந்தார்.

இவர் இந்தக் கல்லூரியில் மருத்துவக் கற்கையைத் தொடர்வதற்கான போதிய தகைமை கொண்டிருந்த போதிலும் அகதி என்ற காரணத்துக்காக இவருக்கு அந்தக் கல்லூரியில் இடமளிக்கப்பட வில்லை.

இலங்கை உட்பட பல்வேறு நட்பு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு மாணவர்கள் தமக்கான மருத்துவக் கற்கையைத் தொடர்வதற்கு மனித வள அபிவிருத்தி அமைச்சு அனுமதி வழங்கவுள்ளதாக இந்திய மத்திய உள்விவகார அமைச்சிற்கு வெளியுறவுச் செயலகம் மே 08, 2015 அன்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், அகதிகள் என அடையாளங்காணப்பட்ட மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்படவில்லை. நந்தினி பதிவு செய்யப்பட்ட ஈழத்தமிழ் மாணவி அல்ல. இவர் தமிழ் நாட்டிலேயே பிறந்து தமிழ்நாட்டி லேயே கல்வி கற்ற ஒருவராவார்.

இலங்கையில் மோதல் ஆரம்பித்த பின்னர் 1983லிருந்து இந்தியாவில் தமிழ் மக்கள் அகதித் தஞ்சம் கோரத் தொடங்கினர். இவர்களுக்கு இந்தியா புகலிடம் வழங்கியது.

தமிழ்நாட்டிலுள்ள ஈழத்தமிழ் பெற்றோருக்கு 20,000 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் தமிழ்நாட்டில் பிறந்தவர்களாவர். இவர்கள் நாடிழந்த வர்கள் என்பதன் காரணமாக இவர்களது பிறப்பானது சிறிலங்கா குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 5 (2) இன் கீழ் பதியப்பட வேண்டும். அல்லது இவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.

ஆனால் இவர்கள் நாடிழந்தவர்கள் என்கின்ற வகையின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு பெற்றோர்கள் தமது திருமணச் சான்றிதழ்களை சென்னை, இலங்கைத் துணைத் தூதரகத்திடம் கையளிக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்கு அகதியாகச் செல்லும்போது இவ்வாறான ஆவணங்களைத் தம்முடன் கொண்டு செல்வதற் கான நிலையிலிருக்கவில்லை.

இந்தியாவில் வாழும் 100,000 வரையான ஈழத்தமிழ் அகதிகள் சிறிலங்காவுக்குத் திரும்பிச் செல்வது தொடர்பாக இந்திய– இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் அடுத்த ஆண்டுச் சந்திப்பின்போது முன்னுரிமை அளிக்கப்படும் என செப்ரெம்பர் 09, 2013 இன் பின்னர் இலங்கை மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்திருந்தது.

தமிழ்நாட்டிலுள்ள ஈழத்தமிழ் அகதிகள் தாம் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கான நாள்களை 2014 ஆரம்பத்திலிருந்து ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

ஈழத்தமிழ் அகதிகளின் நலனுக்காக இயங்கும் ஈழ அகதிகள் புனர்வாழ்வுக்கான அமைப்பு 2014லிருந்து ஆஸ்திரேலியாவுக்கு படகுப் பயணங்களை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டாம் என மக்களுக்கு ஆலோசனை வழங்க ஆரம்பித்தது. இதற்குப் பதிலாக இலங்கைக்குச் செல்லுமாறும் கோரத் தொடங்கியது.

இந்த நிறுவனம் மிகத் திட்டமிட்ட முறையில் இலங்கைக்கு ஈழ அகதிகள் திரும்பிச் செல்வது தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொண்டது. இதற்காக ஈழத்தமிழ் அகதிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதில் அகதிகள் நலன் பேண் அமைப்பு முக்கிய பங்காற்றியது.

தமிழ்நாட்டில் பிறந்த ஈழத்தமிழ் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் இதில் ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனாலும் இந்தச் செயற்பாடானது மிக மெதுவானதாகக் காணப்படுகிறது.

இதேவேளையில், நந்தினி ஈழத் தமிழ் அகதி மாணவி என்ற ஒரேயொரு காரணத்தை முன்வைத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அங்கம் வகிக்கும் பிரதம நீதியரசர் சன்ஜய் கிசான் கோல் மற்றும் நீதிபதி சிவஞானம் ஆகியோர் உட்பட்ட குழுவினர் நந்தினி மருத்துவக் கற்கையைத் தொடர்வதற்கான அனுமதியை வழங்க முடியாது என இந்திய மத்திய அரசுக்கு எழுதிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

நந்தினி போன்ற ஈழத்தமிழ் அகதி மாணவர்கள் தமது தொழிற்கல்வியைத் தொடர்வதற்கு வேறேதாவது சிறப்புச் சட்டவரைபுகள் உள்ளனவா என்பதைத் தெளிவுபடுத்துமாறு மத்திய உள்விவகார அமைச்சிடம் இந்திய மேலதிக பிரதம வழக்கறிஞர் ஜி.ராஜகோபால் கோரியிருந்தார்.

1983இல், இலங்கையில் இனப் பிரச்சினை தீவிரம் பெற்றதன் பின்னர், 334,797 வரையான ஈழத்தமிழர்கள் இந்தியாவில் அகதித் தஞ்சம் கோரியிருந்தனர். இவர்களுள் 212,000 வரையானவர்கள் இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பியுள்ளவர்கள் அல்லது வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளனர்.


தற்போது எஞ்சியுள்ள 102,000 அகதிகளுள் 65,218 பேர் தமிழ்நாட்டிலுள்ள 25 மாவட்டங்களைச் சேர்ந்த 110 வரையான அகதி முகாங்களில் வாழ்கின்றனர்.

19ஆவது நூற்றாண்டில் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குப் பிரித்தானியர்களால் கொண்டு செல்லப்பட்ட மலையகத் தமிழர்களில் சில ஆயிரம் வரையானவர்கள் மீண்டும் இந்திய அகதி முகாங்களில் தங்கியுள்ளனர்.

தமிழ்நாட்டு அகதி முகாங்களில் வாழும் பெரும்பாலான ஈழத் தமிழ் அகதிகள் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்காகக் காத்திருக்கின்றனர்.

இந்திய அரசியல் யாப்பின் எட்டாவது பத்தியில், மலையகத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் இலங்கை அகதிகள் என்பதால் இவர்களுக்கு இந்தியக் குடியுரிமை மறுக்கப்படக் கூடாது.

> இந்திய மற்றும் இலங்கை அரசுகள் இணைந்து முழுமையான திட்டங் களை முன்னெடுக்கும் போது ஈழத் தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திரும்பிச் செல்வது அதிகரிக்கப் படும்.



தமது நாட்டில் நிலவிய மத வன்முறைகளால் இந்தியாவில் அகதித் தஞ்சம் கோரிய பங்களாதேஷ் இந்துக்களுக்கு இந்தியக் குடியுரிமையை வழங்குவதென பா.ஜ.க அரசு தீர்மானித்துள்ளது. இதே வசதி வாய்ப்புக்கள் ஈழத்தமிழ் அகதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். இவர்களுள் பெரும்பான்மையானவர்கள் இந்துக்களாவர்.

இலங்கையில் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் போர் முடிவுற்றாலும் கூட, வடக்கு–கிழக்கு மாகாணங்களில் இன்னமும் இயல்புநிலை முற்றாகத் திரும்பவில்லை. இலங்கை இராணுவத்தினர் இங்கு பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். வடக்கு–கிழக்கு மாகாணங்களில் வாழும் ஐந்து பொதுமக்களுக்கு ஒரு இராணுவ வீரர் என்ற விகிதாசாரத்தில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினரில் பெரும்பாலானவர்கள் பௌத்தர்களாவர். தமிழ் மக்கள் வாழும் வடக்கு–கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றன.

இந்தியா மற்றும் சிறிலங்கா ஆகிய இரண்டு நாடுகளிலும் கடந்த 12 மாதங்களில் ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்விரு நாடுகளிலும் வாழும் மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளன. ஆனால் நடைமுறையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. சில இடங்களில் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

பெப்ரவரி மாதத்தில் இந்தியாவுக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன, 1987 இந்திய–இலங்கை உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள 13வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

இதேபோன்று இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள தனியார் நிலங்களை மீளவும் உரிமையாளர்களிடம் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தார். சிறிலங்கா இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டிருந்த காவற்துறை அதிகாரத்தை நீக்குவது தொடர்பாகவும் இந்தியப் பிரதமர், இலங்கை அதிபரிடம் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதேபோன்று இலங்கை இராணுவத்தினர் மக்களின் நிர்வாகங்களில் தலையீடு செய்யக்கூடாது எனவும் கோரப்பட்டது. இது தவிர உள்ளூர் மக்கள் பொலிஸ்துறையில் இணைக்கப்பட வேண்டும் எனவும் வடக்கு–கிழக்கிலுள்ள இராணுவ முகாங்கள் அகற்றப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டது.

இவ்வாறான நகர்வுகள் நாட்டில் மீளிணக்கப்பாட்டைக் கட்டியெழுப்ப உதவுவதுடன், தாம் தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்ல முடியும் என்கின்ற நம்பிக்கையை தமிழ்நாட்டு வாழ் ஈழத்தமிழ் அகதிகள் மத்தியிலும் உருவாக்கும்.

போர் முடிவடைந்த பின்னர் 8,155 அகதிகள் மட்டுமே இலங்கைக்குத் திரும்பிச் சென்றுள்ளதானது இலங்கையில் தமிழ் மக்கள் வதியும் இடங்களில் இயல்புநிலை திரும்புவதற்கு இன்னமும் காலம் எடுக்கும் என்பதைப் பிரதிபலிக்கிறது.

இந்திய மற்றும் இலங்கை அரசுகள் இணைந்து முழுமையான திட்டங்களை முன்னெடுக்கும் போது ஈழத் தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திரும்பிச் செல்வது அதிகரிக்கப்படும்.

அகதி முகாங்களில் வாழும் மக்களுக்கு ஆதரவளிப்பதென்பது இந்தியாவைப் பொறுத்தளவில் சுமைமிக்க ஒன்றாகும். ஆகவே இந்தச் சுமையை நீக்குவதற்கு பொருத்தமான அரசியல் நகர்வை முன்னெடுப்பதுடன் நன்கு ஆராயப்பட்ட பொருளாதாரத் திட்டத்தையும் முன்னெடுக்க வேண்டும்.

இதன்மூலம் இந்தியாவின் இலங்கை தொடர்பான கோட்பாடு மீது மேலும் தெளிவான நிலை காணப்படும். இலங்கைக்கான இந்தியப் பிரதமர் மோடியின் சுற்றுப்பயணமானது திருப்புமுனையாக உள்ள போதிலும் உறுதியான எதையும் சாதிக்கவில்லை. இலங்கையில் பிரதமரால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் வெறும் வெற்று வாக்குறுதிகளாகவே காணப்படுகின்றன. இவை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

தமிழ்நாட்டில் வாழும் ஈழத்தமிழ் அகதிகளின் பிரச்சினைகள் தொடர்பில் தி.மு.க தலைவர் மு.கருணாநிதி தொடக்கம் அ.இ.அ.தி.மு.க தலைவி ஜெ.ஜெயலலிதா வரை எந்தவொரு அரசியல்வாதிகளும் பயனுள்ள தீர்வுகளை எட்டவில்லை. ஈழத்தமிழ் அகதிகளின் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன.

இவர்கள் நாடிழந்தவர்களாவும் வீடிழந்தவர்களாகவும் வாழ்கின்ற நிலையை மாற்றுவதற்கு மனிதாபிமான அணுகுமுறை மிகவும் தேவைப்பாடான ஒன்றாக விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | | 8 | | 4 | |
| | 5 | | | 6 | | | | 3 |
| | 9 | | 1 | 7 | | | | 8 |
| 2 | | | | | 7 | 8 | | |
| | 4 | | | 9 | | | 6 | |
| | | 6 | 8 | | | 4 | | 5 |
| | | | | | 9 | | 8 | |
| 4 | | | | 3 | | | 5 | |
| | 1 | | 7 | | | | | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 2 | 7 | 9 | 8 | 3 | 6 | 4 |
| 4 | 7 | 3 | 1 | 5 | 6 | 2 | 8 | 9 |
| 6 | 9 | 8 | 3 | 2 | 4 | 1 | 7 | 5 |
| 7 | 1 | 6 | 4 | 8 | 2 | 5 | 9 | 3 |
| 8 | 3 | 5 | 9 | 7 | 1 | 6 | 4 | 2 |
| 2 | 4 | 9 | 6 | 3 | 5 | 8 | 1 | 7 |
| 5 | 6 | 1 | 2 | 4 | 7 | 9 | 3 | 8 |
| 9 | 2 | 4 | 8 | 1 | 3 | 7 | 5 | 6 |
| 3 | 8 | 7 | 5 | 6 | 9 | 4 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளை யும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக் கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 60 | 80 | 80 | 80 | 30 |
| கத்தரி | 50 | 60 | 50 | 40 | 30–40 | 40 | 80 | 30 |
| கரட் | 200 | 180 | 160–280 | 120 | 260 | 240 | 220 | 150 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 50 | 60 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 120 | 160 | 140 | 130 | 160 | 100 | 140 | 120 |
| பாகல் | 180 | 140 | 160 | 140 | 140 | 130 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 80–100 | 120 | 140 | 70 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 110 | 100 | 120 | 100 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 80–140 | 120 | 140 | 140 | 160 | 200 | 140 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 30 | 30 | 60 | 15 |
| தக்காளி | 80 | 120 | 100 | 80 | 80–100 | 120 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 40–60 | 40 | 80 | 25 |
| கீரை | 20 | 15–20 | 30 | 10 | 15–20 | 20 | 30–35 | 15 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 20 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 160 | 140 | 140 | 160 | 150 | 200–220 | 180 |
| புடோல் | 60 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 | 60 |
| கோவா | 80 | 100 | 100 | 100 | 80 | 100 | 80 | 80 |
| வெண்டி | 140 | 140 | 100–160 | 120 | 140 | 120 | 120 | 70 |
| போஞ்சி | 160 | 240 | 280 | 160 | 260 | 240 | 240 | 140 |
| லீக்ஸ் | 180 | 160 | 140 | 160 | 160 | 200 | 160 | 170 |
| தேங்காய் | 50 | 25–35 | 60 | 50 | 40–60 | 40 | 35–50 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 100 | 100–120 | 120 | 120 | 120–130 |
| தேசிக்காய் | 120 | 130 | 120 | 120 | 140 | 100 | 160 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 120 | 180 | 120 | 160 | 200 | 200 | 200 | 180 |
| இராசவள்ளி | 120 | 130 | 120 | 120 | 120 | 140 | 180 | – |
| முருங்கைக்காய் | 500 | 480 | 600 | 400 | 600–800 | 280 | – | 250 |

## நாளை

**ஆனி-09**
**புதன்கிழமை**
**24.06.2015**
**திதி:** அட்டமி
பி.இ. 05.07 வரை
**நட்சத்திரம்:** உத்தரம்
மு.இ.07.19 வரை
**சுபநேரம்:**
04.25-05.55 வரை
**இராகுகாலம்:**
11.55-01.25 வரை



## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### உன்னைப் பற்றியே சிந்திக்காதே

சமநிலையில் இருந்து பிறழாதவன், மன சாந்தமுடையவன், இரக்கமும், கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற்படுவர். அதன்மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக் கொள்கிறான்.

தீமையைச் செய்வதால், நமக்கு நாமே தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதால் நமக்கு நாமே நன்மை தேடிக் கொண்டவர்களாகிறோம்.

சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் தெரிந்து கொள்வ தால் என்ன நன்மை விளையப்போகிறது. நல்லவர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பயனுடையதாக்குங்கள்.

சுயநல எண்ணம் சிறிதும் இல்லாமல், பணம், புகழ் என்னும் எதிர்பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டு செய்தால், உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமிருந்து வெளிப்படும்.

நம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டே இருப்பது சுயநலங் களிலேயே மிகப்பெரிய பாவமாகும். சுயநலஎண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒருவன் கடவுளை நெருங்க முடியும்.




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 700 | 600 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 600 | 550 |
| பாரை | 650 | 500 | – | 550 | 500 | 400 |
| சுறா | 650 | 500 | – | 600 | 800 | – |
| சீலா | 350 | 450 | 500 | 450 | 500 | – |
| விளை | 700 | 400 | 400 | 500 | – | 350 |
| முரல் | 350 | 400 | 400 | 400 | 300 | – |
| கும்பிளா | 450 | 400 | 400 | 380 | 400 | 300 |
| கிழாக்கன் | 700 | 700 | 400 | 400 | 500 | 500 |
| ஓரா | 400 | 400 | 300 | 350 | 200 | – |
| திரளி | 300 | 300 | 200 | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 160 | 130 | 100 |
| ஓட்டி | 300 | 300 | – | 300 | 200 | – |
| திருக்கை | 150 | 300 | 100 | 280 | 250 | 140 |
| பாலை | 400 | 350 | 300 | 500 | – | – |
| வாழை | 100 | 200 | – | 350 | – | – |
| கொய் | 100 | 200 | 100 | 120 | 100 | 250 |
| மதனம் | 150 | 300 | 200 | 250 | – | – |

நமது முன்னோர்கள் உடலுக்கு ஆரோக்கியம் தரும் உணவு களையே சாப்பிட்டு வந்தார்கள். அந்த உணவோடு மருந்துகளையும் உண்டு நோயின்றி ஒவ்வொரு வீட் டிலும் சமையல் அறையி லுள்ள அஞ்சறைப் பெட் டியில் அற்புத மருந்துகள் இடம்பெற்றிருக் கும். உணவோடு சேர்ந்து நம் உடலைக் காக்கும் அற்புத கூட்டணிதான் இந்த அஞ்சறைப் பெட்டி பொக்கிஷங்கள். இந்த அஞ்சறை பெட்டியில் உள்ள அற்புதமான அரு மருந்து மற்றும் உணவுப் பொருட்களில் நாம் அதிகம் பயன்படுத்து வது கடுகு. கடுகை மூன்று வகைகளாக கூறுவர். நாய்கடுகு, மலைக்கடுகு, சிறு கடுகு என்று. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பது பழமொழி. கடுகு அந்தளவிற்கு முன்னோர்கள் மனதில் இடம் பிடித்துள்ளது. இதன் பயன் களும் ஏராளம்.

**நீரழிவு நோயை கட்டுப்படுத்த...**

கடுகு, ஆவாரை விதை, மரமஞ்சள், கருவேலம் பிசின் ஆகியவற்றை எடுத்து சுத் தப்படுத்தி வைத்துக் கொள் ளவும். வீட்டில் அம்மி இருந் தால் அதில் இவற்றை வைத்து இடித்து பொடியாக்க வேண் டும். இதனை நீர்விட்டு பிசைந்து சூரணமாக்கி வைத் துக் கொள்ளலாம். நீரிழிவு நோய் உள்ளவர்கள் இந்த சூரணத்தை 1–2 கிராம் உள் ளுக்கு சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.

**சிறுநீர் பெருக்கி**

கடுகை அரைத்து தேனில் கலந்து தினமும் சாப்பிட்டு வந்தால் சிறுநீர் நன்கு பிரியும்.

**கடுகு எண்ணெய்**

கடுகிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை வட இந்தியா வில் சமையலுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். கொழுப்பு சத்து அதிகமில்லாத இந்த எண்ணெய் இதய நோயை தடுக்கும்.

**விக்கல் நீங்க**

வெந்நீர் 130 மி.லி. எடுத்து அதில் கடுகுத்தூள் 8 கிராம் ஊறவைத்து வடிகட்டி அருந் தினால் விக்கல் நீங்கும்.

**மேலும் பல பயன்கள்**

விஷம், பூச்சி மருந்து, தூக்க மாத்திரை போன்றவற்றை



சாப்பிட்டவர்களுக்கு, 2 கிராம் கடுகு நீர் விட்டு அரைத்து நீரில் கலக்கி உட்கொள்ளக் கொடுத்தால் உடனடியாக வாந்தி எடுக்க விஷம் வெளியேறும்... தேனில் கடுகை அரைத்து உட்கொள்ளக் கொடுக்க இருமல், கபம், ஆஸ் துமா குணமாக்கும். கடுகை தூள் செய்து வெந்நீரில் ஊற வைத்து வடித்து கொடுக்க விக்கலை குணப்படுத்தும் கடுகை அரைத்து பற்றிட ரத்தக்கட்டு, மூட்டு வலி தணியும் கை, கால்கள் சில்லிட்டு விரைத்துக் காணப்பட்டால் கடுகை அரைத்து துணியில் தடவி கை, கால்களில் சுற்றி வைக்க வெப்பத்தை உண்டாக்கும் உடனடியாக விரைப்பு சீராகும். கடுகு, மஞ்சள் சம அளவு எடுத்து நல்லெண் ணெயில் காய்ச்சி வடிகட்டிக் காதில் சில சொட்டுகள் இட தலைவலிக்கு நிவாரணம் கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களும்- உடல் நலமும்



**1.** 1,10 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கோ அல்லது பெயர் எண் அமையப் பெற்றவர்களுக்கோ, சுமார் நாற்பது வயதுக்கு மேற்பட்டு இவர்களுக்கு இரத்த ஓட்டம் சம்பந்தமான வியாதிகள் பீடிக்கப்படுவதுண்டு. இவரது உடலுக்கு மஞ்சள், ஆரஞ்சு, எலுமிச்சை, பேரிச்சம்பழம், இஞ்சி, தேன் முதலியன நன்மை தரக்கூடியதாகும்.

**2.** 2, 11, 20 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கோ அல்லது பெயர் எண் அமையப் பெற்றவர்களுக்கோ, ஜீரணக்கருவிகள் அதாவது அஜீரணம் வயிற்றுக் கோளாறு, மூத்திரக்காய்கள் சம்பந்தமான நோய்களே விரைவில் ஏற்பட ஏதுவாகும்.
இவர்களது உடலுக்கு ஒத்துக் கொள்ளக் கூடிய பதார்த்தங்களான, முட்டைக்கோஸ், கீரை வகைகள், வெள்ளரிப் பிஞ்சு, பழவகைகள் குறிப்பாக முலாம்பழம் ஆகியவைகளை தினசரி தமது உணவுடன் சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.

**3.** 3, 12, 21, 30 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கோ அல்லது பெயர் எண் அமையப் பெற்றவர்களுக்கோ, ஆரோக்கியம் கொஞ்சம் குறைந்தால் தோல் சம்பந்தமான நோய்கள் பீடிக்க ஏதுவாகும். கராம்பு, குங்குமப்பூ, ஜாதிக்காய் ஆகியவைகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். எப்பொழுதுமே ஆகாரத்துடன் அப்பிள், நெல்லி, அன்னாசி, கோதுமை ஆகிய பதார்த்தங்களை அன்றாடம் உபயோகித்து வருவது நல்லது.

**4.** 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கோ அல்லது பெயர் எண் அமையப் பெற்றவர்களுக்கோ தலை சம்பந்தமான அதாவது மூளை, கண், காது, மூக்கு, தொண்டை, வாய், நாக்கு, பல் சம்பந்தமான நோய்கள் ஏதாவது உண்டாகும்.
மேற்குறிப்பிட்ட நோயிலிருந்து ஒருவாறு தப்புவதற்கு கீழ்க்காணும் பதார்த்தங்களை தினசரி ஆகாரத்தோடு சேர்த்து வருவது மிகவும் நன்று. பருப்பு, வாழைக்காய், மாதுளம்பழம், எலுமிச்சம்பழம், பூசணிக்காய், நாரத்தம்பழம், வாழைப்பழம், முருங்கைக்கீரை, அரைக்கீரை, சிறுகீரை போன்றவைகளையும் உபயோகிக்கலாம்.

**5.** 5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கோ அல்லது பெயர் எண் அமையப் பெற்றவர்களுக்கோ, நரம்பு சம்பந்தமான வியாதிகளைப் பற்றி எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். இழுப்பு, வாத நோய், தூக்கமின்மை ஆகிய கோளாறுகள் எளிதில் பற்றும்.

# பெண்களின் மனோபாவங்கள்




ஒரு குடும்பம் சிறந்து விளங்குவதற்கு ஒரு பெண்தான் பெரும்பாலும் காரணமாக இருக்கிறாள், அதே நேரம் அந்த குடும்பம் சீர் குலையவும் அந்த பெண்ணே காரணமாகி விடுகிறாள். இதற்கு அவளது குணாதிசயங்கள் முக்கிய பங்கு வகிகின்றன. எல்லாப் பெண்களுக்குமே எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கும். எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள் இருக்கும். பல பெண்களும் விரும்புவது துடிப்பான, விவேகமான, படித்த, கொஞ்சம் அழகான (ரொம்ப அழகா இருந்தா ஆபத்து தானே), நகைசுவையுடன் பேசக்கூடிய (மனைவியுடன் மட்டும்), உயரமான (மனைவியை விட கொஞ்சம் அதிகமாக), புத்திசாலியான (மனைவிக்கு முன்னால் இல்லை ), அப்புறம் முக்கியமாக கை நிறைய சம்பளம் (கணவன், மனைவி இருவர் கையும் சேர்ந்தால் போல நிறையணும்). இவ்வளவு தான் பெண்களின் எதிர்பார்ப்பு எல்லாம்.
விருப்பங்களும், எண்ணங்களும் ஒவ்வொருத்தருக்கும் ஏற்ப மாறுபடலாம், ஆனால் எதிர்ப்பார்ப்பு என்பது கண்டிப்பாக இருக்கும். எதிர்பார்ப்பில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் அவள் மனதுக்குள் வெறுமை சூழ்ந்து விடும். இது தான் இன்றைய பெண்களின் மனபோக்கு. இது மிகவும் ஆபத்தான ஒன்று தான்.
ஆண்கள்தான் காரணம் என்று அவர்களை குறை சொல்வதை விடுத்து தங்களால் முடிந்தவரை பிரச்சினைகளை சரி செய்ய முயலவேண்டும். முக்கியமாக பிறர் சொல்வதை கேட்காமல் சுயமாக முடிவு எடுக்க பழகி கொள்ள வேண்டும். பலர் ஆலோசனை சொல்கிறேன் என்று அவர்கள் வாழ்வில் நடந்த சிலவற்றை முன் உதாரணமாக சொல்லி நம்மை குழப்பி விடுவார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட பெண்ணோ அல்லது ஆணோ நிச்சயமாக அந்த பிரச்சினையை பற்றி மட்டும் தான் யோசிப்பார்கள், ஆக ஒரு நல்ல தீர்வு கண்டிப்பாக கிடைக்கும். மற்றவர்களுக்கு இவர்கள் பிரச்சினை சாதாரண ஒரு சம்பவம், ஆனால் இவர்களுக்கு அது வாழ்க்கை அல்லவா?

**பிறரின் சொல்படி நடக்கும் மனோபாவம்:**
தற்போது பல பெண்களும் நன்கு படித்து உலக அனுபவம் பெற்றவர்களாக இருந்தும் திருமணம் என்று வந்தவுடன் பலரது ஆலோசனைக்கும் செவி சாய்ப்பவர்களாகி விடுகிறார்கள். காதல் திருமணம் செய்தவர்களுக்கு திருமணம் முடியும் வரை யார் சொல்வதும் காதில் விழாது. ஆனால் திருமண வாழ்க்கையில் சின்னப் பிரச்சினை வந்தால் போதும் அவன் மேல் தவறு என்று அவளும், இவள் மேல்தான் தவறு என்று அவனும் மாறி மாறி குறை சொல்ல ஆள்களை வலியத் தேடிப் போய் சொல்வார்கள். கேட்பவர்களும் வாய்க்கு வந்ததைச் சொல்லி பிரச்சினையில் கொஞ்சம் எண்ணெயை ஊற்றி விட்டுச் செல்வார்கள்.
பெற்றோர்கள் வரன் பார்த்து நடத்திவைக்கும் திருமணங்களில் பெண்ணுக்கு நல்லது செய்ய வேண்டுமே என்ற எண்ணத்தில் அவர்கள் நடந்து கொள்ளும் சில விதங்கள் அந்த பெண்ணின் வாழ்கையையே சீரழிப்பதை அவர்கள் உணருவதே இல்லை. வரன் பார்க்கத் தொடங்கும்போதே தரகரிடம் அவர்கள் வைக்கும் முதல் கோரிக்கையே மாமியார் , மைத்துனர் மாதிரி எந்த பிடுங்கலும் இல்லாத வீடா இருந்தா நல்லது என்பது தான்...? (இப்படியே இவர் கள் மகனுக்கு வரும் பெண் வீட்டாரும் இருந்து விட்டால் ஒன்று அந்த மகனுக்கு கல்யாணம் ஆக பல வருடம் ஆகும் அல்லது தாய் உடனே சாக வேண்டும் )
இதைக் கேட்கும் பெண்ணின் மனநிலை என்ன ஆகும்....? அந்த நிமிடமே அவள் மனதில் மாமியார், மைத்துனி என்பதின் அர்த்தம் விஷ விதை மறைமுகமாக ஊன்றபட்டு விடுகிறது. ஒருவழியாக சம்பந்தம் இருவீட்டார்க்கும் பிடித்து போய் நிச்சயத்தின் போது அந்த மாமியார் கேட்கும் வரதட்சணையால் அந்த விதைக்கு நீர் ஊற்றபடுகிறது. பின்னர் திருமண நாள் நெருங்கும் நேரத்தில் அந்த பெண்ணின் உறவினர்களாலும் அக்கம்பக்கத்து நண்பர்களாலும் (நல்லது செய்வதாக நினைத்து கொண்டு ) பல் அறிவுரைகள் வழங்கபடுகின்றன.



அந்த பெண்ணும் தன்னை எப்படி புத்திசாலி என்று நிரூபிப்பது, எப்படி சாமார்த்தசாலி என்று பெயர் எடுப்பது என்பதை பற்றி யோசிக்கும் போதே ஏற்கனவே போடப்பட்ட விதை நன்கு ஆழ ஊன்றி துளிர் விட ஆரம்பத்திருக்கும். இப்படி இந்த விதத்தில் ஒரு பெண்ணை திருமணதுக்கு தயார் படுத்தினால் அவளது எதிர் காலம் என்னாகும் என்று யாரும் ஒரு நிமிடம் கூட நினைத்துப் பார்ப்பது இல்லை. திருமணத்துக்குப் பின் ஏதாவது பிரச்சினை என்றால் இந்த நலன் விரும்பிகள் எங்கே என்று கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக் கொண்டுதான் தேட வேண்டும். அப்படியே தென்பட்டாலும் நீதாம்மா பார்த்துக்கணும் என்று சொல்லி நாசுக்காக நழுவி விடுவார்கள். சில பெற்றவர்களும் மகளே உன் சமர்த்து என்று சொல்லிவிட்டால் அந்த பெண்ணின் நிலை என்ன....? இது இன்றும் பல வீடுகளில், குடும்பங்களில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.....

**திருமணத்துக்குப் பின்னர் தொடரும் அவலம்**
திருமணத்துக்குப் பின்னர் புகுந்த வீட்டில் புகும் பெண்ணின் கண்களுக்கு அங்குள்ள அனைவருமே எதிரிகளாகவே தெரியும். யாரிடமும் சரியாக பேசிப் பழகாமல் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குள்ளே முடங்கிவிடுகிறாள். கணவன் இருக்கும் நேரத்தில் மட்டும்தான் அவளது பேச்சையும், சிரிப்பையும் மற்றவர்கள் கேட்க முடியும். புதுப்பெண்தானே போகப்போக சரியாகி விடும் என்று பிறரும் சமாதானம் செய்து கொள்வார்கள் ( இவள் மனதில் விஷம் என்ற மரம் தற்போது கிளை பரப்பி செழித்து வளர்ந்திருப்பதை அறியாதவர்களாய்!! )
அந்த மாமியாரும், மைத்துனியும் ஒருவேளை நல்லவர்களாக இருந்தாலும் இந்தப் பெண்ணைப் பொறுத்தவரை கெட்டவர்கள்தான் (அப்படி தானே அவளுக்கு சொல்ல பட்டிருக்கிறது) புகுந்த வீட்டினரை தனது நாக்கு என்னும் விஷக் கொடுக்கால் சமயம் கிடைக்கும் போதெல்லாம் கொட்டத் தவறுவதே இல்லை. சில நாள்களில் எடுத்ததுக்கெல்லாம் குற்றம் குறை சொல்லி தன் கணவனை அந்த குடும்பத்திடம் இருந்து பிரித்துத் தனி குடித்தனம் கொண்டு போய் விடுகிறாள்.
கணவனும் அப்படிப் போனாலாவது சண்டை குறையுமே என்றுதான் போகிறான். அங்கும் சச்சரவு தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் (எதையும் குறை சொல்லி பழகி விட்டதால்) காலம் கொஞ்சம் கடந்த பின்தான் கணவனும் தன் தாயை தவிக்கவிட்டு வந்ததை உணர்ந்து மனம் குமைகிறான். அவனுடைய இயலாமை வெறுப்பாக மனைவியின் மீது திரும்ப, வீடு நரகமாகிறது. கணவன், மனைவி உறவு பாதிக்கப் படுகிறது.
ஆக இப்படிப்பட்ட நிலை உருவாகக் காரணமாக அமைவது அந்த பெண்ணின் நிலையற்ற மன நிலைதான். மற்றவர்கள் ஆயிரம் சொன்னாலும் கேட்கிறவர்களுக்கு புத்தி எங்கே போனது..? தன் வாழ்க்கை எப்படிப்பட்ட நிலையில் அமைய வேண்டும் என்பதை படித்த அந்த பெண் தான் முடிவு செய்யவேண்டும். மற்றவர்களின் ஆலோசனையைக் கேட்டாலும் தனக்குள் அதைப் பொருத்தி சரியாக இருக்குமா? என்று சீர்தூக்கிப் பார்க்கும் மனப்பக்குவம் இல்லாமைதான் கணவன் மனைவி உறவு கெடக் காரணமாகி விடுகிறது . இது தான் இன்று பலரின் அனுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க



# புதுப்பானை



முல்லாவின் வீட்டில் சிறுவன் ஒருவன் வேலை செய்து கொண்டிருந்தான். முல்லா ஒருநாள் புதுப்பானை ஒன்றை வாங்கி வந்தார். பையா! இந்தப் பானையை எடுத்து கொண்டு கிணற்றுக்குப் போய் நிறைய நீர் கொண்டு வா எனக் கூறினார். சிறுவன் பானையை எடுத்துக் கொண்டு கிணற்றுக்குப் புறப்பட்டான். முல்லா சற்று தூரம் சென்ற சிறுவனைக் கூப்பிட்டார். சிறுவன் திரும்பி வந்து, என்ன எஜமானே என்று கேட் டான். இந்தப் பானை புத்தம் புதியது. அதிக பணம் கொடுத்து வாங்கியிருக் கிறேன். இதை நீ கவனமாகக் கையாண்டு உடைத்தாயானால் அடி கொடுப்பேன் என்று கூறிய முல்லா! சிறுவனின் முதுகில் ஓங்கி அறைந்தார். சிறுவன் திடுக்கிட்டுத் திரும்பி, எஜமானே, பானையை உடைத்தால்தானே அடி கொடுப்பேன் என்று கூறினீர்கள். நான் பானையை உடைக்கவில்லையே என்னை எதற்காக அடித்தீர்கள்? என்று கேட்டான்.

அதற்கு முல்லா, பையா! நீ பானையை உடைத்து விட்ட பின்னர் உன்னை அடித்து என்ன பயன். உடைந்து போன பானை திரும்பி வருமா? அதற்காகத்தான் எச்சரிக்கை அடியாக முன்னதாகவே அடித்தேன். இந்த அடியை நினைவில் வைத்துக் கொண்டு நீ பானை விடயத்தில் மிகவும் கவனமாக இருப்பாய் அல்லவா? என்று பதிலளித்தார் முல்லா.

# கழுகு



கழுகு என்பது ஒரு வலுவான பெரிய பறவையையும் அதன் இனத்தையும் குறிக்கும். இந்தப்பறவைகளுக்கு பெரிய கண்களும் கூரிய நுனியுடைய வளைந்த அலகும், வலுவான உகிர்களைக் கொண்ட கால்களும், அகண்டு நீண்ட இறக்கைகளும் உள்ளன. இவைகளின் கண் பார்வை மிகவும் கூரியது. மிக உயரத்திலே பறந்தாலும், தரையில் நகரும் எலி, கோழிக்குஞ்சு போன்ற சிறு விலங்குகளைக் கண்டால், சடார் என்று கீழே பாய்ந்து தமது வல்லுகிரால் கவ்விக் கொண்டு போய் கொன்று உண்ணும். சிறு விலங்குகளை இவ்வாறு கொன்று தின்பதால், இந்தப் பறவைகளைக் கொன்றுண்ணிப் பறவைகள் என்று சொல்வதுண்டு.

கழுகுகளில் பற்பல வகைகள் உண்டு. இந்த இனத்தைச் சேர்ந்த பறவைகளைத் தமிழில் எழால், கழுகு, கங்கு, கங்கம், கூளி, பருந்து, பணவை, பாறு, பூகம், வல்லூறு என அழைக்கப்படுகின்றன. பிணந்தின்னிக் கழுகுகள், பாம்புப்பருந்து, கரும்பருந்து குடுமி எழால், ஹார்பி கழுகு என்பன பெரும்பாலும் குறிப்பிட்ட கழுகின் உள்ளினங்களைக் குறிக்கும். கழுகு இனங்கள் பெரும்பாலும் பழைய உலகம் என்று சொல்லப்படும் ஆசியா–ஆப்பிரிக்க–ஐரோப்பாவில் தான் அதிகம் காணப்படுகின் றன. அமெரிக்கக் கண்டத்தில் பெரும் கழுகுகள் மிகவும் குறைவே. வட அமெரிக் காவில் இரண்டே இரண்டு இனங்கள்தான் உண்டு. அவை வெண்டலைக் கழுகும், பொன்னாங் கழுகும் ஆகும். கழுகுகளில் பெட்டைக் கழுகு சேவற்கழுகை விட சற்றுப் பெரிதாக இருக்கும்.

# அறிவுத் துணுக்குகள்

- ஒட்டகத்துக்கு நீந்தத் தெரியாது.
- சூரியக்குடும்பத்தில் எட்டு கிரகங்கள் உள்ளன.
- இதயம் சுருங்கும் போது இரத்த அழுத்தம் அதிகமாகும்.
- மூளையின் எடையை விட கல்லிரலின் எடை அதிகம்.
- கிரிக்கெட் மட்டை வில்லோ மரத்தில் செய்யப்படுகின்றது.
- கோஹிநூர் வைரம் லண்டனில் உள்ளது.
- அங்கிள் சாம் என்று அழைக்கப்படுபவர்கள் அமெரிக்கர்கள்.

# எதிர்காலம் நம்முடையதே

சந்தோஷமும், கேளிக்கையும் உல்லாசமும் இளைஞர்களுக்கு அவசியமானதே. அதேபோல வாழ்வுக்கு ஒரு எதிர்கால நோக்கத்தையும் திட்டத்தையும் அமைக்க வேண்டியதும் அவசியமானதே. பொது நலம் கொண்ட வாழ்க்கை நல்லதுதான். ஆனால் தனிப்பட்ட உன்னுடைய வாழ்வும் உங்களுக்கு முக்கியமானதே. நண்பர்கள் வாழ்வுக்கு வேண்டியவர்கள் தான். ஆனால் அவர்களே உனது வாழ்க்கையாகிவிட முடியாது. ஏனென்றால உங்களுடைய சந்தோஷமும், உல்லாசமும், பொதுநலமும், நண்பர்களும் உங்களைக் கைவிடும் ஒரு நாள் வரும்.



உங்களது பெற்றோர் உங்களிடம் 'நன்கு யோசித்து முடிவெடு ' என்று சொல்லி முடிவெடுக்கும் அந்த நிமிடத்தில் உங்களைக் கைவிடுவார்கள். அப்போது நீங்கள் எடுக்கும் ஒரு தீர்மானம் சிலவேளைகளில் உங்களை ஒரு உயர்ந்த நிலைக்கு கொண்டுவரலாம். அல்லது உங்களை ஒரு அழிவிலும் கொண்டுபோய் நிறுத்தலாம். எனவே நீங்கள் எடுக்கும் தீர்மானத்தில் உங்கள் வாழ்வின் எதிர்காலம் தங்கி யுள்ளது.

உங்கள் சொந்த புத்தியால் எடுக்கும் தீர்மானங்கள் சிலவேளை அப்போது உங்களுக்குச் சரியாகத் தோன்றினாலும் அது தவறானதாகப் போய்விடக் கூடும். எனவே நீங்கள் சில விடயங்களைக் குறித்து தீர்மானம் எடுக்க விளையும் போது உங்களுக்கு மூத்த வர்களை, அனுபவசாலிகளை அணுகி ஆலோசனைகளைப் பெறுவது சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்தனை கந்தசாமி தேர்த்திருவிழா

கொக்குவில் மாத்தனைக் கந்தசாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 நாள் திருவிழாவாக இடம்பெற்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் 9.30 மணிக்கு தேர் உற்சவம் இடம்பெறும். நாளை புதன்கிழமை தீர்த் தோற்சவமும், மறு நாள் வியாழக்கிழமை பூங்கா வனத் திருவிழாவும் இடம்பெறும்.


### உடன் விற்பனைக்கு

கட்டட இடிபாடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 375 4040

### பேக்கரி 'பாஸ்' தேவை

கிளி நொச்சி நகரில் "பேக்கரி பாஸ்" வேலைக்கு ஆள் தேவை

தொடர்பு: 077 345 2602

### தேவை

சமையல் உதவியாளர் / றூம் துப்புரவு செய்பவர் ஆண், பெண் மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 717 2039


### தவறிவிட்டது

எனது NPHX-2404 இலக்க பின்பக்க மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு வளளாயிலிருந்து பருத்தித்துறைக்கு வரும் பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 077 90 44 376 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
077 9044376

### பகிரங்க ஏலம்
#### யாழ் மாநகர சபை

யாழ் மாநகர சபையின் கழிவகற்றல் பிரதேசமான கல்லுண்டாய் வெளியில் தரம் பிரிக்கப்பட்ட உக்கக்கூடிய பசளைகள் மற்றும் காக்கைதீவுப் பகுதியில் இருந்து பெறப்படும் பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருள்கள் பகிரங்க ஏலம் மூலம் கீழ் குறிப்பிட்ட திகதியில் இடம் பெறும் என்பதனை அறியத் தருகின்றேன்.

காலம்:- 03.07.2015 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி

இடம்:- நானாவித இறைவரிப்பகுதி,
மாநகர சபை

ஒரு உழவு இயந்திர பசளை(1lord)= 250.00
(VAT நீங்கலாக)

1Kg பொலித்தீன், பிளாஸ்ரிக்= 10.00 (VAT நீங்கலாக)

**ஆணையாளர், மாநகர சபை,
யாழ்ப்பாணம்.**

### தவறிவிட்டது

கடவுச்சீட்டு, பிறப்புப்பத்திரம், வங்கிப் புத்தகம், வர்த்தக வங்கியின் காசோலைகள் அடங்கிய சிறிய Bag தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் விலாசத்தில் சேர்ப்பிக்கவும்.

சே.சிவநாதன்
91/15, புங்கங்குளம்வீதி, அரியாலை
076 6548323

### நன்றிகள்

யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் உள்ள GARGILLS PVT. LTD (Food city) இல் தவறவிடப்பட்ட எனது பெறுமதிமிக்க தங்க நகையை எடுத்து உடனடியாகவே என்னிடம் ஒப்படைத்த அங்கு கடமையாற்றும் ஊழியர் மற்றும் நிர்வாகத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

சாவகச்சேரி — சி. பாலகி

### கண்ணீர் அஞ்சலி
## கந்தையா சிவசோதி



எமது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திருமதி த.கவிதா அவர்களின் அன்புத் தந்தையார் கந்தையா சிவசோதி அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரதேச செயலாளரும்,அனைத்துஉத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை. (c 16362)

### அறிவித்தல்
## மாநகரசபை, யாழ்ப்பாணம்


மாநகரசபைக் கட்டளைச்சட்டம் பிரிவு 129 இன் படி மாநகர சபைக்குட்பட்ட அனைத்து வரியிறுப்பாளர்களும் தங்களால் உருவாக்கப்படும் அனைத்து கழிவுகளையும் பின்வருமாறு தரம்பிரித்து மாநகர சபையிடம் ஒப்படைக்க வேண்டும். தரம் பிரிக்கப்படாத கழிவுகளை மாநகரசபை 01.08.2015 இலிருந்து பொறுப் பேற்றுக் கொள்ளமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

| வரியிறுப்பாளர்கள் | கழிவுகளின் வகை |
|---|---|
| * குடியிருப்புகள் | * உணவுக்கழிவு |
| * கடைகள், அலுவலகங்கள் | * மீளப்பயன்படுத்தக்கூடிய, மீள் சுழற்சிக்குட்பட்ட கழிவுகள் |
| * உணவு விடுதிகள் | * ஆபத்தான கழிவுகள் |
| * மரக்கறி, பழக்கடைகள் | * மிருகங்களின் பிணங்கள், மிருகங்களின் பாகங்கள், மிருகங்களின் எரு |
| * இறைச்சி, மீன், முட்டை கடைகள் | |
| * தொழிற்சாலைகள் | |
| * வைத்திய சாலைகள் | * ஆதனத்தை கூட்டும் போது பெறப்படும் கழிவுகள் |
| * ஏனைய நிறுவனங்கள் | |

கட்டட இடிபாடுகள், வழமைக்கு மாறாக ஏற்படும் கழிவுகள் மாநகரசபையில் கட்டணம் செலுத்தி அகற்றிக் கொள்ளவேண்டும்.

ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம். 23.06.2015

## ஞானப்பிரகாசம் ஞானதயாளன்
(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் வவுனியாதெற்கு)



யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா கரப்பன் காட்டை வசிப் பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் ஞானதயாளன் நேற்று (22.06.2015) திங்கட்கிழமைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருளானந்தம், திரேசாபுஸ்பம் தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி அக்னெ லின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஞானதேவி, கிருபாதேவி, காலஞ்சென்ற நேசதயாளன், சாந்தாதேவி, சந்திரவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசில்ட், தயாளினி, அன்ரனி ஞானராஜ் (ஆசிரியர் வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்), குயின்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிறீன் இன்பராஜ், சோமா ஆகியோரின் அன்பு மாமனும், பிறிற்றிகா, பிறிற்றியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.06.2015) புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் இல. 33, கரப்பன் காடு, வவுனியாவில் உள்ள அவரது இல்லத்திலிருந்து இறுதிக்கிரியைக்காக வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இரம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 33, கரப்பன் காடு, வவுனியா.
தொ.பே. 077 7445846

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



அன்னையின் மடியில் 11.12.1929 | ஆண்டவன் அடியில் 21.06.2015

## திருமதி லில்லிமலர் நிக்கலஸ்

இல.23, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மலரகம், வளன்புரம், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும், இல. 05, பண்ட் வீதி, ஹெந்தளை, வத்தளையைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லில்லிமலர் நிக்கலஸ் 21.06.2015 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற நிக்கலஸ் (உரிமையாளர், செல்லம்ஸ் ஸ்டுடியோ, யாழ்ப்பாணம்) அவர்களின் அருமை மனைவியும், மரிய ஸ்ரெலா (கனடா), மரிய நிர்மலா (முன்னாள் ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்), மரியராஜினி (கனடா), ஜோய்ஜெயக்குமார் (வீரகேசரி ஆசிரியர் பீடம்), மரியசாந்தினி (நோர்வே) தயாளன் ராஜ்குமார் (பிரான்ஸ்), றொபேர்ட் ரவிக்குமார் (நோர்வே), மரியவதனி (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும், தாசீசியஸ் (கனடா), காலஞ்சென்ற தெய்வேந்திரா, அலோசியஸ் (கனடா), வசந்தி (கொழும்பு), செபஸ்டியன் (நோர்வே), ஸ்ரெலா (பிரான்ஸ்), பயஸ் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெரால்ட் - ஜூலியா, தர்ஷினி - ராகுல் (கனடா), லக்ஸ்மன் (ZTE Lanka (Pvt) Ltd)- கிறிஸ்ரபெல், சிந்துஜா - விஜய் (லண்டன்), சீமோன், சுசானா, மரியானா (நோர்வே), தமிழ்ச்செல்வன், தமிழ்வேந்தன் (பிரான்ஸ்), றொபின், றோகர், றோய் மார்ட்டின் (நோர்வே), திரேசன், லில்லியன் (நோர்வே) ஆகியோரின் பாட்டியும், எலைட், ரிஸ்ரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 23.06.2015 யாழ்.நகரிலுள்ள White House Parlour இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 24.06.2015 (புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு கொழும்புத்துறை, வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நிர்மலா தெய்வேந்திரா 0772876256
லக்ஸ்மன் றொஜெர்ஸ் 0718644583
ஜோய் ஜெயக்குமார் 0714031929

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Construction of Ambulance Park | 500.00 | 85,000.00 | 91 | 4.13 | C 7 |
| Construction of Car Park | 500.00 | 75,000.00 | 91 | 3.71 | C8 |
| Renovation of OPD | 500.00 | 60,000.00 | 91 | 2.81 | C 8 |
| Fixing of grab bars at Medical Ward Complex Toilets, Renovation of Paediatric Clinic, Painting of Eye Clinic & Renovation of Occupational Therapy Unit | 500.00 | 55,000.00 | 91 | 2.51 | C 9 |
| Construction of Guard Wall at Old Maternity Ward Complex, Aluminium Partition for Ward No 12, Aluminium Partition for EEG Unit & In front of JICA Building Toilet | 500.00 | 12,000.00 | 91 | 0.56 | C 10 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 24.06.2015 up to 09.07.2015 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 10.07.2015, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
23/06/2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 23.06.2015 -




## ஆசியுரை

சித்தர்கள் நடமாடிய திருவூரில் பஞ்சரத தேரோட்டம் நடைபெறுவது கீர்த்தி பெறும் நிகழ்வாகும். சித்தர்களால் பூசிக்கப்பட்ட சிவபெருமானுக்கு 10 தினங்கள் அற்புதமாக அபிஷேகம் ஆராதனை அழகுத்திருக்கோலக் காட்சிகளுடன் வீதியுலா சிறப்பாக நடைபெற்று திருவருள் பொழியும் வேளையில் இன்று அடியார்களை ஆட்கொண்டு அருள்வதற்கு ஐந்து தேர்களில் 3ஆம் வீதியில் வலம் வருவது மகத்துவம் பொருந்தியதாகும். மஹோற்சவத்தின் திருவருள் பேறுகள் அனைவருக்கும் சித்திக்க சிவகாமி பாகர் சிவசிதம்பரேஸ்வரப் பெருமானின் திருவருளை வேண்டி தேவஸ்தான ஸ்தானிகம் சார்பில் ஆசீர்வதிக்கின்றோம்.

**சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள்.**

## சித்தர்கள் வாழ்ந்த தலம்

சித்தர்கள் வாழ்ந்து சிறப்பித்த சித்தன்கேணியில் அமைந்துள்ள சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் ரதோற்சவ நிகழ்வு இன்றைய தினம் நடைபெற உள்ளமை தொடர்பில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். குறித்த இந்த மேன்மையான நிகழ்வுகளில் ஒத்துழைப்பு வழங்கிய சிவாச்சாரியப் பெருமக்கள் மற்றும் சிவனடியார்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு எம் பெருமானின் அருட்கடாச்சம் பெற்று எல்லோரும் நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

**த்.இராஜகுமார்**
**தலைவர்,**
**ஆலயபரிபாலன சபை.**

## நீண்ட வரலாற்றுத் தொன்மை

மிக நீண்ட காலமாக சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் வழிபட்டு இறையருள் வேண்டி நிற்பவர் என்ற ரீதியில் குறித்த பஞ்ச ரத பவனி இன்றைய தினம் இடம்பெறுவதையிட்டு மகிழ்வடைகின்றேன். கடந்த காலங்களில் குறித்த ஆலயத்தின் பரிபாலன சபையின் வேண்டுகோளுக்கு இணங்க என்னால் இயன்ற உதவிகளை ஆலயத்தின் அபிவிருத்தி கருதிநாடாளுமன்ற நிதிக்கூடாக மேற்கொண்டும் உள்ளேன். இந்த வகையில் இன்றைய இந்த பஞ்சரத பவனி சிறக்க வாழ்த்துவதோடு எம்பெருமானின் அருட்கடாட்சம் பெற்று எல்லோரும் நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

**ஈ.சரவணபவன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்.**
**யாழ் கிளிநொச்சி மாவட்டம்.**

## ரதோற்சவம் சிறக்கட்டும்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

எமது எழில்மிகு கிராமத்தின் சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தின் பஞ்சரத பவனி இன்று இடம்பெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். வருடம் தோறும் இடம்பெறும் இந்த ரதோற்சவ நிகழ்வு இவ்வருடமும் மிகச்சிறப்பாக இடம் பெற்று கடந்த கால துன்ப துயரங்களில் இருந்து எமது இனம் மீட்சிபெற எல்லாம் வல்ல எம்பெருமான் அருள்பாலிக்க வேண்டி நிற்பதோடு வாழ்த்தி வணங்குகின்றேன்.

**திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்**
**தவிசாளர்,**
**வலி மேற்கு பிரதேசசபை.**

## காண்பதற்கரிய பஞ்சரத பவனி

சிவநேயச் செல்வர்களே, பழமையும் புகழும் மிக்க, சித்தன்கேணித் தலத்திலே இருந்து அருளாட்சி செய்யும் ஆடல்வல்லான் இன்று தன்னுடைய பரிவாரத்திருமூர்த்தங்களுடன் தேரேறிவரும் காட்சி அற்புதமானது. உலக இயக்கத்துக்காக சதா காலமும் ஆனந்த நர்த்தனம் புரியும் தாண்டவ சொரூபனாகிய சிவசிதம்பரேஸ்வரர் தேரிலிருந்து இறங்கி மஹா வசந்த மண்டபம் நோக்கிச் செல்லும் ஆனந்த தாண்டவம் அற்புதமிக்கது. அதே போல நாளை அதிகாலை நிகழும் ஆனி உத்திர அபிஷேகமும் உத்தர தரிசனமும் தில்லையில் நிகழ்வதற்கு நிகரானது. தீர்த்தோற்சவ நிகழ்வைத் தொடர்ந்து சிவகாமி அம்பாளுடன் சபா மண்டபத்துக்கு எழுந்தருளும் ஆனி உத்தர நடனமும் கண்டு சிவனடியார்களெல்லாம் பேரானந்தப் பெருவாழ்வு வாழ வேண்டுமென இன்றைய பஞ்சரத திருநாளில் சிவசிதம்பரனுடைய பாதார விந்தங்களை இறைஞ்சுகின்றோம்.

**இளைஞர் முன்னேற்றக் கழகம்**
**சித்தன்கேணி.**

## வாழ்த்துச் செய்தி

சிவபூமி எனத் திருமூலரால் போற்றப்பட்ட ஈழமணித் திருநாட்டின் வடபால் விளங்கும் யாழ் குடாநாட்டின் வலிகாமம் மேற்கு பிரதேசம் கலை, கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களை நிறைவாக கொண்டது. இங்கு இந்து ஆலயங்களுக்குக் குறைவில்லை. இந்துப்பண்பாட்டின் மையங்களாக இயக்க சக்தியாக இவை விளங்குகின்றன எனலாம். இந்துக்கள் கூடுதலாக வாழ்வதால் இங்கு கிரியைகள்,சடங்குகள், விழாக்கள், விரதங்கள் மக்களின் வாழ்வியலோடு நெருக்கமாக இணைந்துள்ளன. எமது பிரிவில் முதன்மைபெற்று விளங்கும் சிவாலயங்களுள் சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலய வருடாந்த ரதோற்சவம் இன்று சிறப்பான முறையில் நடைபெறுகின்றது. இதனையிட்டு பத்திரிகையில் வெளிவருகின்ற சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

சித்தர்கள் வாழ்ந்து புனிதம் பெற்ற சித்தன்கேணிப்பகுதியில் எழுந்தருளி அடியவர்களுக்கெல்லாம் அருட்பேற்றினை வழங்கிக் கொண்டிருக்கின்ற ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமானின் திருவருள் எல்லையற்றது. இந்தியாவிலுள்ள சிதம்பர ஆலயத்தை வழிபட்ட பேறு இங்கு வழிபடுபவர்களுக்கு கிடைக்கும் என்பது சிவனடியார்களின் நம்பிக்கையாகும். இம்மூர்த்தியின் கீர்த்தி வியாபகமானது.

அவனருளாலே அவன் தாள் வணங்கி

என்பதற்கமைய இன்று இறைவனின் ரதோற்சவம் காண்பவர்கள் உயர்ந்த அருட்பேறு பெற்றவர்கள் என்றே கூறவேண்டும்.

எமது இந்து ஆலயங்களுள் ஆன்மீகப் பணியுடன் அறப்பணியும் ஆற்ற முன்வர வேண்டும் என்பது இன்றைய சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும். எனவே எமது ஆலயங்கள் தங்களால் இயன்றவரை சமூக, சமய, கலை, கல்விப்பணிகளை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலமாகவும் உயர்ந்த ஆன்மீக திருப்தியைப் பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறாயினும் இன்றைய ரதோற்சவ நிகழ்வு பக்தி பூர்வமானது. போற்றுதற்குரியது. இந்த உற்சவத்தில் கலந்து கொண்டுள்ள சிவாச்சாரியார்கள், பரிபாலன சபையினர், சிவனடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரப்பெருமானின் சிவப்பேறு நிறைவாகக் கிடைக்க வேண்டும் என வாழ்த்தி சிவனடியை வணங்குகின்றேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

**அ.சோதிநாதன்**
**பிரதேச செயலர் வலி மேற்கு**

விநாயகர்
சுப்பர் ஸ்ரோர்ஸ்

143, பிள்ளையார்
கோயிலடி, சித்தன்கேணி.
Tel: 021 2250797

விநாயகர்
கபே & கூல்பார்

141,
பிள்ளையார் கோயிலடி,
சித்தன்கேணி.
Tel: 021 2250797

Cyber Shot
Computer Repairing,
Laptop Selling, Accessories.

Main Street, Sithankerney.

PAN
PHARMACY

Shop No. 01,
Sithankerney.
Tel: 021 225 1151

கணபதி ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்

தெல்லிப்பழை றோட்,
சித்தன்கேணி.

சுப்ரா கல்வி நிறுவனம்
சித்தன்கேணி.
தரம் 1 முதல் A/L வரையான சகல
பாடங்களும் தமிழ் மற்றும் ஆங்கில
மொழி மூலம் தகுதியான ஆசிரியர்களால்
கற்பிக்கப்படுகிறது.

NIRU
Medical Clinic
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



### வைரமுத்து உருத்திரன்

பொன்னாலையை பிறப்பிடமாகவும் வழக்கம்பரை சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய இசை ஆசிரியர் சங்கீத பூசணம் கலாபூசணம் வைரமுத்து உருத்திரன் நேற்று 22.06.2015 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
குடும்பத்தினர்.
தொடர்பு :- 021 790 3797
(61281)

## மரண அறிவித்தல்

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம், பிலி 1:21

### திருமதி மீகா விசாலாட்சி(அன்னம்) கார்த்திகேசு



அராலி மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் துணவி சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மீகா விசாலாட்சி (அன்னம்)கார்த்திகேசு நேற்று (22.06.2015) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பன் பொன்னி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் நவரட்ணம், கனகமலர், குணரட்ணம்(போதகர்), செல்வநாயகம்(சுவிஸ்), யோகராணி(கனடா), ஜெயரட்ணம், தவராசா(மாவட்ட நீதிமன்ற அலுவலர்), யோகரட்ணம்(சென் ஜோண்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல்லத்திலிருந்து 23.06.2015 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நல்லடக்க ஆராதனைக்காக தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதின பேராலயம் வட்டுக்கோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டு வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :- 077 436 6733
077 428 1253

தகவல் :-
குடும்பத்தினர்.

(61277)

## மரண அறிவித்தல்

### திருமதி புஷ்பரத்தினம் வயித்திலிங்கம்



கீரிமலை வீதி பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பரத்தினம் வயித்திலிங்கம் நேற்று (22.06.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரபத்திரர் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்து சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைரமுத்து வயித்திலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குவலயம் ,குமாரசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் கணேசரத்தினம், விமலாதேவி, சந்திரகுமார், இராஜலக்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாக்கியம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), புவியரசி, கலாம்பிகை காலஞ்சென்ற திருநாவுக்கரசு (சிறீ) மற்றும் பாலச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சஞ்சீவ் (மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்), சதீஸ்(உள்ளூராட்சி திணைக்களம் வடமாகாணம்), கார்த்திக் (பொறியியலாளர் சிங்கப்பூர்), சாம்பவி, சதீபன், தனுஷன், கஜரூபி, சாமந்தி, ஜானுஜா (தாதியர் துறை இரண்டாம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்) , பிரியங்கன், சாருஜன் , மதுஷா, கீர்த்தனன்(பிரான்ஸ்), கௌசல்யா (பிரான்ஸ்), கிருசோத்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

(61279)

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 - 01 - 1959



மறைவு
21 - 06 - 2015

### திருநாவுக்கரசு திருகரன் (திலகன்)

மல்லாகம், நீதிமன்ற வீதியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, பெரேரா ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு திருகரன் 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு-கனகலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மட்டுவில் ஆ. நடராசா-பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், மாலதி அவர்களின் பாசமிகு கணவரும், மாதங்கி, திருமாறன், சுபாங்கி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரன் அவர்களின் அன்பு மாமனாரும், ஜெயகௌரி, பாலயோகினி, காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சனி, திருக்குமாரன், திருநிமலன் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் 24.06.2015 புதன் கிழமை, காலை 7 மணி முதல் பொரளை ஜெயரத்ன மலர்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணி அளவில் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: மாலதி (மனைவி)

தொடர்பு : 011-2360545

## மரண அறிவித்தல்

### திருமதி கனகேஸ்வரி சிவபாதம்

யாழ்ப்பாணம் சுண்டுக்குழியை பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி சிவபாதம் நேற்று (22.06.2015) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி (திருமேனி) சோதியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - மாசிலாமணி தம்பதி யரின் அன்பு மருமகளும், சிவபாதத்தின் உற்ற துணைவியாரும், தனுஷியா, கிருஷ்ணகுமாரி ஆகியோரின் ஆசைத்தாயாரும், யசிதரன் (உரிமையாளர், முத்துமாரி ஹாட் வெயார் - பளை, கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்), சிவகுமார் ஆகியோரின் பாசமிகு மாமி யும், மதிவாணியின் ஆசைப் பேர்த்தியும், காலஞ்சென்ற பத்மநாதன் (றிக்கோ) மற்றும் விமலநாதன், செல்வநாதன் (லண்டன்), காலஞ்சென்ற தனலட்சுமி (தயா - லண்டன்) மற் றும் கமலநாதன், கோணேஸ்வரநாதன் (ஈசா - கனடா), புவனேஸ்வரி (ராசாத்தி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ் சென்ற செல்வராணியின் ஆசை மச்சாளும், காலஞ்சென்ற சோமசுந் தரத்தின் (உரிமையாளர், P. சோமசுந்தரம் அன் கோ) உடன்பிறவாச் சகோதரியும், ரோகினி, சபாநாதன் (லண்டன்), கலாதேவி, கலாயோதி (கனடா), சிவச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சூரியகுமார் (லண்டன்), கிரிஷாந்தா (லண்டன்), நிர்மலா (கனடா), காலஞ்சென்ற தேவகுமார் மற்றும் தர்மினி (கனடா), ராஜேஸ்கண்ணா, நிருஜிதா, விஜிகிருஸ்ணா, அபிசங்கர், ஜீவசங்கர், பிரியங்கா, அஞ்சனப்பிரசாதா (கனடா), அருண்மைந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், பத்மநாபன் (லண்டன்),சுமதி (லண்டன்), பஞ்சலிங்கம் (கனடா), லக்ஷ்மன் (கனடா), சோபி (லண்டன்), சேரன் (லண்டன்), சந்திரிக்கா (லண்டன்), தினேஸ், சுதா ஆகியோரின் அன்புப் பெரியதாயும், ஜோதிநிலானி, ஜோசன் நிலான், சாருஷா, பவிஷானி, பெபிசனன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் எதிர்வரும் (25.06.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



பிறப்பு: 18.06.1947 இறப்பு: 22.06.2015

கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்: சிவபாதம் (கணவர்)
யசிதரன் (மருமகன்) முத்துமாரி ஹாட்வெயார், பளை, கலட்டி சந்தி. 077 6560112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.50 கோடி ரூபா வாகனத்தை வாக்கியுள்ள முன்னாள் எம்.பி

கொழும்பு, ஜூன் 23

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகர இரண்டு கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றை அண்மையில் துறைமுகத்தில் இருந்து விடுவித்து கொண்டதாகத் தெரிய வருகிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலில் இருந்து விலகிய விஜேசேகர, விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டார்.

இதனடிப்படையில், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஜயந்த விஜேசேகரவுக்கு பல பெரிய திட்டங்களை முன்னெடுக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எவ்வாறாயினும் 2 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான வாகனத்தைக் கொள்வனவு செய்யும் அளவுக்கு அவரிடம் சொத்துக்கள் இருப்பது அரசியல் வட்டாரத்தில் பரவலாகப் பேசப்படும் விடயமாகியுள்ளது.

ஜயந்த விஜேசேகரவே நேரடியாகப் பணத்தைச் செலுத்தி வாகனத்தை விடுவித்து எடுத்துச் சென்றதாகக் கொழும்பு துறைமுகத்தின் சுங்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (த)

# இலங்கையின் பாதுகாப்பு நிதி இந்தியா, சீனாவை விட அதிகம்

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னரும், பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் நிதி, ஒப்பீட்டளவில் இந்தியா, சீனா போன்ற நாடுகளை விடவும் அதிகம் என்று தகவல்கள் கூறுகின்றன.

2014ஆம் ஆண்டு நிலவரப்படி, இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதம், பாதுகாப்புக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளில் பூட்டான் மொத்த தேசிய உற்பத்தியில் 9 சதவீதத்தை, பாதுகாப்புக்காக ஒதுக்கியது.

அதையடுத்து பாகிஸ்தான் மொத்த தேசிய உற்பத்தியில் 8 சத வீதத்தை பாதுகாப்புக்காக ஒதுக்கியிருந்தது.

எனினும், ஆசியாவின் வல்லரசு நாடுகளான சீனாவும் இந்தியாவும் – மொத்த தேசிய உற்பத்தியில் 5 சத வீதத்தையே கடந்த ஆண்டு பாதுகாப்புக்காகச் செலவிட்டுள் ளன.

அதேவேளை பங்களாதேஷும், நேபாளமும், தமது மொத்த தேசிய உற்பத்தியில், 3 சதவீதத்தை பாதுகாப்புக்கு ஒதுக்கியிருந்தன. (த)

# மஹிந்தவின் பாதுகாப்புக்கு 105 பொலிஸ், 108 ராணுவம்

## ஹெலி ஒன்றும் இல்லையாம்

கொழும்பு, ஜூன் 23

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் பாதுகாப்புக்கு 105 பொலிஸ் உத்தியோகத்தர்கள், 108 இராணுவத்தினர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளபோதிலும் அந்த பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்று தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதியின் ஊடக இணைப்பாளர் ரொஹான் வெலிவிட்ட, மஹிந்தவின் பயன்பாட்டுக்கு ஹெலிகொப்டர் ஒன்று வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ரொஹான் வெலிவிட்டவினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதியின் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக ஹெலிகொப்டர் ஒன்று வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை. கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி அவர், கொழும்பிலிருந்து தங்காலைக்கு தனது உத்தியோகபூர்வ ஹெலிகொப்டரில் சென்றார். அதுவே அவர் இறுதியாக ஹெலிகொப்டரில் மேற்கொண்ட பயணமாகும். அன்று முதல் இன்று வரை இந்த அரசு அவருக்கு அதற்கான வாய்ப்பினை வழங்கவில்லை. அதேபோன்று, தனக்கு ஹெலிகொப்டர் வசதி வேண்டும் என அவர் இதுவரையில் கேட்கவும் இல்லை.

மஹிந்தவின் பாதுகாப்புக்காக 105 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் மூவர் அடங்குகின்றனர். அவர்களுக்குப் பொலிஸ் திணைக்களத்தால் உத்தியோகபூர்வ வாகனங்கள் மூன்று கிடைக்கப் பெற்றுள்ளன. இருப்பினும் அவர்களின் கடமைகளை மேற்கொள்வதற்காகக் காரியாலய வசதிகள் எவையும் வழங்கப்படவில்லை. குறைந்த வசதிகள் கொண்ட ஓரிடத்திலேயே அவர்களுக்கு தங்குமிட வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று வாகனங்களைத் தவிர, அந்த 105 பேருக்கும் வேறு எந்த வாகனங்களோ அல்லது மோட்டார் சைக்கிள்களோ வழங்கப்படவில்லை. ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த 17 வாகனங்களும் காரியாலயத் தொலைபேசிகளும் கூடப் பொலிஸ் திணைக்களத்தால் மீளப் பெறப்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்காகக் கிடைக்கப்பெற்ற தனிப்பட்ட ரீதியிலான வாகனங்களையும் வாடகைக்குப் பெறப்பட்ட வாகனங்களையுமே இவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், மஹிந்தவின் பாதுகாப்புக்காக 108 இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் உயர் நிலைப் பதிவி வகிக்கும் இருவரும் அடங்குகின்றனர். இருப்பினும், அவர்களுக்கு இராணுவத்திலிருந்து கிடைக்க வேண்டிய உத்தியோகபூர்வ வாகனங்களோ அல்லது காரியாலய வசதிகளோ இதுவரை கிடைக்கப்பெறவில்லை. அத்துடன், இந்த 108பேரின் போக்குவரத்துக்குக்கூட ஒரு வாகனம் கூட வழங்கப்படவில்லை. தங்குமிட வசதிகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் பயன்பாட்டுக்கென முக்கியஸ்தர்களுக்கான வாகனங்கள் மூன்றும் பாதுகாப்பு வாகனங்கள் மூன்றும் மாத்திரமே ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளபடி, மஹிந்தவின் போக்குவரத்துக்காக எந்தவொரு ஹெலிகொப்டரும் வழங்கப்படவில்லை. அது வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை –என்றுள்ளது. (த)

## புதிய தேர்தல்

உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இரண்டு வருடங்களில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி முடிக்க வேண்டும் என்று ஜனாதிபதியும், பிரதமரும் தெரிவித்துள்ளனர். அவர்கள் இதில் மேலதிக கால நீடிப்பு எதனையும் வழங்க மாட்டார்கள். எனவே நாம் இரண்டு வருடங்களுக்குள் இதனைச் செய்து முடிப்போம். தற்போது கடல் நீரை நன்னீராக்குவது தொடர்பிலான மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. இந்தத் திட்டம் இலங்கையில் முதன் முறையாக யாழ்ப்பாணத்திலேயே நடைபெறப் போகின்றது என்று அவர் கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் வெளியேற்றப்படும் கழிவு நீரை சுத்திகரித்து விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் திட்டமும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. விரைவில் இது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் நாம் பேசுகின்றோம். தற்போதுள்ள வடிவத்தில் 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதை அனுமதிக்க முடியாது. வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டதை வாபஸ் பெற வேண்டும். எங்களின் வாக்குளால், எங்களால் அமைக்கப்பட் இந்த அரசு எங்களின் கால்களை வாருவதை ஒரு போதும் ஏற்க முடியாது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கும் சிலர், கட்சியைப் பாதுகாப்பதாக நினைத்துக் கொண்டு சிறுபான்மையினருக்கு எதிரான 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு துணை போய்க் கொண்டிருக்கின்றனர். ஜே.வி.பியினர் தென்பகுதியில் இரண்டு தடவைகள் ஆயுதக் கிளர்சிகள் செய்தவர்கள். அவர்களை மீளவும் ஆயுதக் கிளர்ச்சிக்கு தூண்டி விடும் செயற்பாடுதான், தற்போதைய 20 ஆவது திருத்தச் சட்டம். இதனை நான் அமைச்சரவையில் ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளேன் என்று அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

ஜனாதிபதி மீது நம்பிக்கை இருக்கின்றது. எமக்குப் பாதிப்பான எதனையும் அவர் முன்னெடுக்க மாட்டார். தமிழ் தலைமைகளும் – முஸ்லிம் தலைமைகளும் கூட்டாக இணைந்து மாற்றத்தை இந்த நாட்டில் ஏற்படுத்தியது போல், 20 ஆவது திருத்தத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தி வெற்றி பெறுவோம் – என்றார். (ற–5, 101)

## நடேசன்

வரும் மனித உரிமைகள் சபை வளா கத்தில் விளக்க வுள்ளனர்.

ஜெனீவாவில் தற்போது 29ஆவது, மனித உரிமைகள் கூட்டத் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதன் பக்க நிகழ்வுகளில், இலங்கை தொடர்பான விவாதம் நடைபெற்று வருகின்றது. அதன் ஓரங்கமாக இடம்பெறும் கூட்டத்திலேயே, புலிகளின் சரணடைவும் அதன் பின்னரான படுகொலை மற்றும் காணாமற்போனமை தொடர்பிலும் பேசப்படவுள்ளது.

பசுமை தாயகம் மற்றும் அமெரிக்காவின் தமிழர் பாதுகாப்பு சபை ஆகியன இந்த கூட்டத்திற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளன.

போரின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் இலங்கை இராணுவத்தி னரிடம் சரணடைந்தனர். அவர்களில் பலர் பின்னர் காணாமற்போயினர். அல்லது போரில் கொல்லப் பட்டனர் என்று இலங்கை இராணுவத்தால் அறிவிக்கப்பட்டனர்.

வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்த, விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசன் மற்றும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் உள்ளிட்ட பல போராளிகள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. இது ஒரு போர்க் குற்றமாகவும் சொல்லப்படுகிறது.

இந்த நிலையில் அவர்களின் உறவினர்கள் ஐ.நாவில் நடக்கும் பக்க அமர்வில் அவர்களின் சரணடைவு குறித்து விளக்கவுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை வளாகத்தில் நடக்கும் இந்தப் பக்க அமர்வுகள் சபை நடவடிக்கைகளில் நேரடியான எந்தப் பங்கையும் வகிக்காதபோதும், சபையில் உள்ள நாடுகளின் பிரதிநிதிகளிடம் உண்மையைத் தெளிவுபடுத்துவதற்குப் பெரிதும் உதவும். அதன் மூலம் அவர்களின் இலங்கை தொடர்பான நிலைப்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ–5)

## 20 இன் பின்னணியில்

அமைந்துள்ளது.

குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன 6ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்த போது, அதற்கு உடன்பட மறுத்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர் தடை விதித்தார். அந்த முடிவுதான் காலப் போக்கில் போராட்டத்துக்கு வித்திட்டது.

அதேபோல்தான் சிறுபான்மையின மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிப்பதற்கு ஏதுவான வகையில் 20 உள்ளது. 20 இற்குள் இனவாதம் இருக்கிறது. மஹிந்தவின் பின்னால் இருந்தவர்கள் தற்போது சட்டையை மாற்றிக்கொண்டு மைத்திரிக்கு பின்னாலும் இருக்கின்றனர். இந்த இனவாத வலைக்குள் ஜனாதிபதி சிக்கக்கூடாது.

அதேவேளை, கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை ஜே.வி.பிதான் அம்பலப்படுத்தியது. மக்கள்பிரச்சினைபற்றிநாடாளுமன்றில் குரல் எழுப்பியது. எனவே, ஜே.வி.பி. போன்ற கட்சிகள் நாடாளுமன்றத்துக்கு வராமல் இருப்பதையும் சிலர் விரும்புகின்றனர். வாக்கு கிடைத்தும் சபைக்கு செல்ல முடியாவிட்டால் அது அசாதாரணமாகும். மக்கள் நிராகரித்தால் அதை ஏற்கமுடியும்.

எனவே, 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் உடன் திரும்பப் பெறப்பட வேண்டும். கட்சிகளுடன் மீள பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டு பல கட்சி ஜனநாயக முறைமையை உருவாக்கும் வகையிலும், ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் வகையிலும் புதிய திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் 20 ஐ தோற்கடிப்பதற்கு அனைத்து வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (உ–5)

## சீன–இலங்கை

கொமாண்டோ படைப்பிரிவு தலைமையகத்திலும், மூன்றாவது கட்டப் பயிற்சி ஜூலை 5ஆம்திகதி தொடக்கம், ஜூலை 13ஆம் திகதி வரை மாதுருஓயா சிறப்புப் படைப்பிரிவு பயிற்சிப் பாடசாலையிலும், நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டுப் போர்ப் பயிற்சியில், ஆயுதங்களைக் கையாளுதல், மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக் கல்வி, சூட்டுப் பயிற்சி, குறி பார்த்துச் சுடும் பயிற்சி, இடுக்குகளின் ஊடான சூட்டுப் பயிற்சி, உடற்காப்புப் பயிற்சி, பதுங்கித் தாக்குதல், வேவு நுட்பங்கள். சிறப்பு நடவடிக்கைக்குத் திட்டமிடல், தேடல் நுட்பங்கள், சூழ்நிலை பயிற்சி ஒத்திகை, காட்டுப் போர்முறை, அடிப்படை சண்டைப் பயிற்சி, வாகன பதுங்கித் தாக்குதல், விமான மற்றும் கட்டடப் பயிற்சிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

பட்டுப்பாதை கூட்டுப் பயிற்சியின் முதலாவது கட்டம், சீனாவில் கடந்த மார்ச் 29ஆம் திகதி தொடக்கம், ஏப்ரல் 17ஆம் திகதி வரை இடம்பெற்றது.

இதில் இலங்கை இராணுவத்தின் கொமாண்டோ மற்றும் சிறப்புப் படைப்பிரிவுகளைச் சேர்ந்த 42 பேர் பங்கேற்றிருந்தனர்.

இந்தநிலையில், நேற்று ஆரம்பமாகியுள்ள கூட்டுப் பயிற்சியில், சீன இராணுவத்தைச் சேர்ந்த லெப். கேணல் கியூய் கியாங் தலைமையில், 43 பேரும், 43 இலங்கை கொமாண்டோக்களும் பங்கேற்கின்றனர். இந்தக் கூட்டுப் பயிற்சி வரும் ஜூலை 13ஆம் திகதி நிறைவடையவுள்ளது. (த)

## 90ஆம் ஆண்டு

கடமையில் இருந்தனர் என்றும் அவர்களில் 264 பேரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 34 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் அவர்களில் 14 பேருக்கு நீதிமன்றத்தின் ஊடாகத் தண்டனை வழங்கப்பட்டது எனவும் 10 பேருக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டதுஎன்றும்பொலிஸ்மா அதிபரின் விசேட பிரதிநிதி தெரிவித்தார். (உ–5)

## 20 பற்றிய

– நாளை தெரிவிப்பார்.

20ஆவது திருத்தம் தொடர்பில், சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை அரச தரப்பு இன்று கொண்டு வரவுள்ளது. பிரேரணையைச் சமர்ப்பித்து அதன் மீதான விவாதத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் ஆரம்பித்து வைப்பார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் 20ஆவது திருத்தம் தொடர்பில் சபையில் விவாதம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் இன்று பிற்பகல் 1 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடவுள்ளது. ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்ததும் தேர்தல் முறை மாற்றம் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவுள்ளது. அன்றைய தினம் முழுவதும் மேற்படி விடயம் தொடர்பில் விவாதம் நடைபெறும். விவாதத்தில் அரசியல் கட்சிகள் தத்தமது நிலைப்பாடுகளை வெளியிடவுள்ளன. இதன்போது, சிறுபான்மை மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் திருத்தம் எவ்வாறு அமைய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டி யோசனைகளையும் முன்வைக்கப்படவுள்ளன.

அதன்பின்னர் அன்று மாலையே பதிலளித்து உரையாற்றவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் அரசின் நிலைப் பாட்டை தெளிவுபடுத்துவார். இது விடயத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன வென்பது பற்றியும் குறிப்பிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச -தனியார் ஒன்றிணைந்து பஸ் சேவை விரைவில் ஆரம்பம்

## போக்குவரத்து அமைச்சர் திட்டவட்டம்



கொழும்பு, ஜூன் 23
இலங்கை போக்குவரத்துச் சபையும் தனியார் பஸ் சேவையும் ஒன்றிணைந்த காலஅட்டவணை விரைவில் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படுமென உள்நாட்டுப் போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்திருக்கிறார்.

குருநாகல் மாவட்டத்தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்துடன் கடந்த வியாழக்கிழமை உள்நாட்டுப் போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இவ்வாறு தெரிவித்த அமைச்சர், நாடு முழுவதிலும் இந்த ஒன்றிணைந்த சேவையை வழங்குவதற்கான கால அட்டவணையைத் தயாரிக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு ஏற்கனவே தான் பணிப்புரை வழங்கியுள்ளதாக வும் கூறினார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் பஸ் சேவையினருக்கும் அடிக்கடி ஏற்படும் முறுகல் நிலையைத் தடுப்பதற்கு ஒருங்கிணைந்த கால அட்டவணை அவசியம் எனவும் நாட்டின் சில பிரதேசங்களில் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் இந்த முறை வெற்றியளித்துள்ளதாகவும் விரைவில் அந்த முறை நாடெங்கும் விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் மேலதிக செயலாளர் பீ.டீ.எல். தர்மபிரிய, குருநாகல் மாவட்டத் தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத் தலைவர் ரூபன் சில்வா உட்பட அச்சங்கத்தின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர். (த)

# இலங்கை-இந்தியா இணைப்புப் பாதை குறித்து பேசவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 23
இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் வகையில் பாக்கு நீரிணையூடாக வீதி அல்லது ரயில் சேவை குறித்து இலங்கையுடன் இந்தியா எந்தவொரு பேச்சையும் நடத்தவில்லை என அரசு தெரிவித்துள்ளது.

அண்மையில் இந்திய மத்திய அரசு இரு நாடுகளுக்கும் இடையி லான போக்குவரத்தை மேம்படுத்த ரயில் மற்றும் வீதி சேவைகளை முன்னெடுக்க உத்தேசித்துள்ளது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இருப்பினும் இது குறித்து இலங்கையுடன் எந்தவொரு பேச்சும் இடம்பெறவில்லை என வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் டி. பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் இலங்கைப் பய ணத்தின்போதும் இது குறித்து பேசப் படவில்லை என வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான், போன்ற அண்டை நாடுகளுக்கு போக்கு வரத்தை தொடங்கியதுபோல் இந்தியா-இலங்கை தொடர்பிலும் வீதி அமைக்க இந்திய மத்திய அரசு திட்டமிட்டு வருவதாக இந்திய மத்திய வீதிப் போக்குவரத்து மற்றும், நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்ததாக ஊட கங்களில் செய்தி வெளியாகியுள்ளன.

இதனையடுத்து கடல் பாலம் அல்லது கடலுக்கு அடியில் சுரங்கம் அமைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்தோடு இராமேஸ்வரத்தின் தனுஷ் கோடியிலிருந்து இலங்கை எல்லை வரை 23 கிலோமீற்றர் தூரமே உள்ளது எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார். (த)

# அதிக நாடுகளில் அகதியாக வாழும் ஒரே இனம் ஈழத் தமிழர்

## 54 நாடுகளில் வாழ்கின்றனர் என யுனிசெப் தகவல்

கொழும்பு, ஜூன் 23
உலகில் அதிக நாடுகளில் அகதிகளாக வாழும் ஒரே இனம் ஈழத் தமிழர்கள் என்று ஐ.நாவின் உப அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ளது. உலகிலுள்ள 54 நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்கின்றனர் என்றும் அவ்வ மைப்பு தெரிவித்துள்ளது.

போர், உள்நாட்டுப் பிரச்சினை, வன்முறை, இனக்கலவரம் காரணமாக உடமைகள், உறவுகள் மற்றும் உரிமைகளை இழந்து எவ்வித ஆதரவும் –வசதியும் இன்றி வாழும் மக்களே அகதிகள். இவர்கள் சொந்த நாட்டுக்கு உள்ளேயோ அல்லது நாடு கடந்தோ இடம்பெயரும்போது அகதிகளாக அடையாளப்படுத்தப் படுகின்றனர்.

உலகில் எல்லா நாடுகளிலும் அரசியல், பொருளாதாரம், உள்நாட்டுப் போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர். பசி, பட்டினி தாங்கமுடியாமல்,உயிருக்குப்பயந்து அகதிகளாக அருகிலுள்ள நாடுகளுக்கு இடம்பெயர்கின்றனர்.

ஆபிரிக்க கண்டத்தில்தான் முதன் முறையாக ஜூன் 20ஆம் திகதி உலக அகதிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் திகதியன்று ஐ.நா. பொதுச்சபையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, பல்வேறு காரணங்களால் இடம்பெயரும் மக்களுக்கு அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்துதான் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 20ஆம் திகதி சர்வதேச அகதிகள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அண்மையில் பங்களாதேஷ், மியான்மரில் நடந்த இனக் கலவரத்தால்பாதிக்கப்பட்டவர்கள்ஏனைய நாடுகளுக்கு அகதிகளாகக் குடியேற முயன்றபோது அவர்க ளுக்கு அடைக்கலம் கொடுக்க மறுக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 8 இலட்சம் அகதிகள் கட்டாயமாக நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இலங்கை, திபெத் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 4.5 இலட்சம் மக்கள் அகதிகளாக இந்தியா வந்துள்ளனர். தவிர, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்தும் இந்தியா உட்பட பல்வேறு ஆசிய நாடுகளில் இருந்தும் அகதிகள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு கூறியுள்ளது.

இவ்வுலகிலுள்ள 54 நாடுகளில் இலங்கைத்தமிழர்கள் அகதிகளாக வாழ்கின்றனர். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் சுமார் 4.5 இலட்சம் இலங்கை மக்கள் அகதிகளாக உள்ளனர். உலகின் அதிக நாடுகளில் அகதிகளாக வாழும் ஒரே இனம் இலங்கைத் தமிழர்கள் என்று ஐ.நாவின் உப அமைப்பான யுனிசெப் கூறியுள்ளது.

உலகளவில், கடந்த ஆண்டு மட்டும் சுமார் 8 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்களின் சொந்த நாடுகளை விட்டு வெளியேற வற்புறுத்தப் பட்டிருப்பதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது. இந்தியாவில் அமைந்துள்ள அகதிகள் முகாம்களில் இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இருக் கிறது. ஆனால், அவர்களின் உயர் கல்வி, பிரஜாவுரிமை போன்ற விட யங்களில் தேக்கநிலை உள்ளது.

இந்தியாவில் தமிழகம் உட்படப் பல்வேறு மாநிலங்களில் சுமார் ஒன்றரை இலட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக 113 முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியிலும் வசித்துவருகின்றனர்.

இலங்கைத் தமிழ் அகதிகளின் குழந்தைகள் உயர்நிலைக் கல்வி வரை மற்ற இந்தியர்களைப்போலவே அரச செலவில் இலவசமாகப் படித்தாலும், அதற்குமேல் உயர்கல்வியைத் தொடர அவர்களுக்குப் பொருளாதார ரீதியில் ஆதரவு கிடைக்காததால் சிரமங்கள் ஏற்படுகின்றன.

இது தவிர, இந்தியர்களைத் திருமணம் செய்துகொண்டு, குடும்பம் நடத்தி, குழந்தைகளுடன் இருப்பவர்களுக்கு இந்தியக் குடியுரிமை தரப்படாத நிலை பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது. அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டுமென்றால், உரிய பயண ஆவணம் கிடைப்பதிலும் பிரச்சினை ஏற்படுகிறது.

ஆனால், முகாம்களில் வசிக்கும் இலங்கைத்தமிழர்களுக்கு மானிய உதவித் தொகை மற்றும் ரேசன் உணவுப் பொருள்கள் போன்ற அத்தியாவசிய தேவைகளை தமி ழக அரசு அளித்துவருகிறது. இவ்வாறு இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் நிலை குறித்து சர்வதேச குடிப்பெயர்வு நிறுவனம் (ஐ.ஓ.எம்.) சார்பாக லண்டனில் வசிக்கும் இலங்கைத் தமிழ் வழக்கறிஞர் ஒருவர் ஆய்வு நடத்தி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

உலகளவில் 2014ஆம் ஆண்டு வரை சுமார் 9 கோடி மக்கள் அகதிக ளாகவும், நாடோடிகளாகவும் உயிர் வாழ்கின்றனர். இன்றைய காலகட்டத்தில் அதிகளவு அகதிகளை உரு வாக்கி வரும் நாடாக சிரியா உள்ளது. ஆப்கானிஸ்தான், சோமாலியா, ஈராக், சிரியா ஆகிய நாடுகளிலிருந்தே மொத்த அகதிகளில் 60 சதவீதம் பேர் இடம்பெயர்ந்து வருகின்றனர். மேலும், அதிகளவு அகதிகளை (85%) உள்வாங்கும் நாடுகளாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளே திகழ்கின்றன. இது 10 வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட 14 சதவீதம் அதிகமாகும். உலகில் அதிக அகதிகளைத் தோற்றுவிக்கும் நாடாக 32 வருடங்களாக ஆப்கானிஸ்தான் விளங்கிவருகிறது. இதில் 95 சதவிகித ஆப்கான் அகதிகள் ஈரானிலும், பாகிஸ் தானிலும் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இதற்கடுத்து 2ஆம் இடத்தில் சோமாலியாவும், 3ஆம் இடத்தில் ஈராக்கும், 4ஆம் இடத்தில் சிரியாவும் கடந்த 2013ஆம் ஆண்டில் இடம் பிடித்துள்ளன. அதேவேளை, 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் இன்னும் 3 கோடி மக்கள் சிரியா மற்றும் உள்நாட்டுக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்திருக்கலாம். இவர்களில் கணிசமானோர் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்திருக்கலாம் எனத்தகவல்கள் கூறுகின்றன.

ஒவ்வொரு முறை நாம் கண் சிமிட்டும் போதும்– அதாவது, 5 நொடிகளுக்கு ஒருமுறை ஓர் அகதி தற்போது உருவாகிவருவதாக ஐ.நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து, தங்கள் நா[illegible]டில் அடிப் படை வாழ்வாதார வசதி[illegible]ளுடன் வாழ வழியில்லாத கா[illegible]த்தால் தான், அங்குள்ள மக்கள் [illegible]ருகிலுள்ள பல்வேறு நாடுகளுக்[illegible] அகதிகளாக இடம்பெயர்கின்றன[illegible] அந்தந்த நாடுகளில் அதிக[illegible]ந்து வரும் அகதிகளைக் கட்டுப்ப[illegible]த, சம்பந்தப்பட்ட நாடுகளின் அர[illegible]ல் ரீதியான முரண்பாடுகளைக்க[illegible]ட, அந்தந்தத் தலைவர்கள் [illegible]றிணைந்து செயற்பட்டு, அத்த[illegible]ய மக்களுக்கு உதவிசெய்ய [illegible]ண்டும் என்று ஐ.நா. பொதுச் செ[illegible]ளா ளர் பான் கீ மூன் வேண்டு[illegible]ள் விடுத்துள்ளார். (த)

# தமிழக மீனவர்களை உடன் விடுவியுங்கள்

## தமிழக முதல்வர் கோரிக்கை

கொழும்பு,ஜூன் 23
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பில் தற்போது கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 31பேரையும் விடுவிக்குமாறு தெரிவித்தே தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் இந்தக் கோரிக்கையை இந்தியப் பிரதமர் மோடிக்கு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பிரதமர் மோடிக்கு நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாக்கு நீரிணையில் இந்திய மீனவர்கள் பாரம்பரியமான கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபடும் போது இலங்கைக் கடற்படை அதிகாரிகள் அவர்களைக் கைது செய்வதாகக் குற்றம் சுமத்திய[illegible] இந்த நட வடிக்கை தொடர்[illegible] பெற்று வருவதால் இது தமிழகத்தில் உள்ள மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது 31 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ,அவர்களின் 23படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் அதிகாலை காங்கேசந்துறைக் [illegible] [illegible] தமிழக மாநிலம்,நாகப்பட்டிணம் மற் றும் காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 26 மீனவர்கள் கடற்படை யினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி வரை வி ள க் க ம றி ய லி ல் வைக்குமாறு பருத்தித் துறை நீதி வான் நீதிமன்றத்தால் உத்தரவிடப் பட்டுள்ளது.

(த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

**யாழ். மாவட்ட தாச்சித் தொடர்**

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடந்தும் தாச்சித் தொடர் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் இருபாலை விக்னேஸ்வரா அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி மோதவுள்ளது.(ம-23)

**தங்கராசா ஞாபகார்த்த உதைபந்தாட்டத்தொடர்**

வித்தியானந்தாக் கல்லூரியின் மறைந்த அதிபர் தங்கராசாவின் நினைவாக குறித்த கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பு ஒன்றினால் உதைபந்தாட்டத் தொடர் ஒன்று குறித்த கல்லூரி மைதானத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் செல்வபுரம் சந்திரன் அணியை எதிர்த்து வளர்மதி அணி மோத வுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் வற்றாப்பளை செந்தமிழ் அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை அணி மோதவுள்ளது. (ம-23-102)

**கொலின்ஸ் வி.க.தொடர்**

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-109)



# நடுவரின் முடிவே இறுதி என்ற அடிப்படையில் சம்பியனானது யாழ். மத்தி





யாழ்ப்பாணம் ஜூன் 23

ஆட்டத்தின் இறுதிப்பகுதியில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டாலும் நடுவரின் தீர்ப்பின்படி யாழ். இந்துக் கல்லூரியை வீழ்த்தி மாகாணச் சம்பியன் ஆனது யாழ். மத்திய கல்லூரி.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.

பாடசாலை மட்டத்தில் இரு அணிகளும் பலம்பொருந்திய அணிகள் என்ற காரணத்தினால் ஆட்டம் ஆரம்பித்தது முதல் எதிர்பார்ப்புக்கள் எகிறின. எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றால் போலவே ஆட்டம் ஆரம்பித்தது முதல் அனல் பறந்தது. முதல் சுற்றின் முடிவில் யாழ். இந்துக் கல்லூரி அணி 12:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் சுற்றிலும் கணிசமான ஆதிக்கம் செலுத்திய யாழ். இந்து முதல் பாதியின் முடிவில் (இடைவேளை) 22:15 புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் இருத்தது.

இரண்டாவது பாதி எதிர்பார்த்தை விட போராட்டமாக அமைந்தது. முதல் பாதியில் கிடைத்த பின்னடைவுக்கு பழிதீர்க்கத் தவறவில்லை யாழ். மத்தி. கணிசமான ஆதிக்கம் செலுத்திய யாழ். மத்தி ஆட்ட நேர முடிவில் 45:43 என்ற புள்ளிகளின் அடிப்படையில் திரில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

ஆனால் ஆட்டம் முடிவுக்கு வருவதற்கு 2 செக்கன்களுக்கு முன்னர் நடுவர் ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதாகத் தெரிவித்ததாகவும் 2 செக்கன்களை மேலதிகமா[illegible] தந்திருந்தால் தமக்குச் சாதகமாக ஆட்டத்தை முடித்திருக்க வாய்ப்பிருந்ததாகவும் இந்துவின் பயிற்றுநரும் வீரர்களும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். வாக்குவாதம் அதிகரித்ததால் ஏற்பட்ட பதற்ற நிலையின் காரணமாக பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறவில்லை. (ம-23)

# தவறியது கிண்ணம்



யாழ்ப்பாணம் ஜூன் 23

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான நடத்தப்பட்ட ஹொக்கித் தொடரின் இறுதியாட்டத்தில் கொழும்பு பல்கலைக் கழகத்திடம் போராடித் தோற்றுள்ளது யாழ். பல்கலைக் கழகம்.

ஆட்டம் ஆரம்பித்து 12ஆவது நிமிடத்தில் கொழும்பு பல்கலைக் கழகம் முதல் கோலைப் பதிவுசெய்ய கொழும்பின் ஆதிக்கமும் யாழின் போராட்டமும் ஆரம்பமாகியது. பழிதீர்க்க பலமுறை முயன்றபோதிலும் எவையும் கைகூடவில்லை. முதல் பாதியின் முடிவில் கொழும்பு 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் கொழும்பின் ஆதிக்கம் தடைப்படுவதாகவோ அல்லது யாழின் சார்பாக கோலொன்று பதியப்படுவதாகவோ தெரியவில்லை. மாறாக கொழும்பின் சார்பாகவே மற்றொரு கோல் பதிவானது.

முடிவில் 2:0 என்ற கோல்களின் அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது கொழும்பு பல்கலைக்கழகம். கடந்த ஆண்டு நடைபெற்ற தொடரிலும் இறுதியாட்டம்வரை முன்னேறிய யாழ். பல்கலை மொறட்டுவ பல்கலைக் கழகத்திடம் தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சாந்தை, காளி அம்பாள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் த[illegible] அங்கத்துவக் கழகங்களுக்கி[illegible]யில் நடத்தும் தாச்சித்தொடர் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளி அம்பாள் அணியை எதிர்த்து அரியாலை காந்தி அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி காளி அம்பாள் அணி 11:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை அணி மோதிக் கொண்டது. இதில் கடும் போட்டிக்கு மத்தியில் பண்டத்தரிப்பு சாந்தை அணி 3:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## மாகாணமட்ட பெண்கள் கூடைப்பந்தாட்டத்தொடர் இராமநாதன் கல்லூரி மூன்றாம் இடம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் பெண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்றது.

இதில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதிக்கொண்டது. இதில் இராமநாதன் மகளிர்




கல்லூரி அணி 35:28 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ம-23)

## மாகாணமட்ட ஆண்கள் கூடைப்பந்தாட்டத்தொடர்

### மல்லாகம் மத்தி மூன்றாம் இடம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.



இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மல்லாகம் மத்தியகல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மல்லாகம் மத்திய கல்லூரி அணி 50:33 புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கைவிடப்பட்டது
## இந்தியா - சிம்பாப்வே தொடர்

இந்தியா – சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் கைவிடப்பட்டுள்ளது.
மூன்று ஒருநாள், இரண்டு ரி–20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக அடுத்த் மாதம் இந்திய அணி சிம்பாப்வே செல்லும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று இந்தத்தொடர் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வீரர்கள் தொடர்ச்சியாக ஆட்டங்களில் பங்கேற்று வருவதால் சோர்வடைந்துவிட்டனர். இவர்களுக்கு ஓய்வு தேவைப்படுவதால் குறித்த தொடர் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

# பதவி விலகுகிறார் 'கேப்டன் கூல்'?

இந்திய அணியின் முன்னேற்றத்துக்காக தலைமைப் பொறுப்பில் இருந்து விலகச் சொன்னால், பதவி விலகவும் தயாராக இருக்கிறேன். என்று தெரிவித்துள்ளார் இந்திய அணித் தலைவர் டோனி.
இந்தியா பங்களாதேஷ் அணியுடனான மூன்று ஒரு நாள் ஆட்டங்களைக்கொண்ட தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களிலும் படுதோல்வியடைந்துள்ளது. இதனால் முதல் தடவையாக பங்களாதேஷிடம் தொடரை இழந்துள்ளது. இந்தத் தோல்வியினையடுத்து தோல்வி தொடர்பாக டோனி தெரிவித்ததாவது இந்திய கிரிக்கெட்டின் மோசமான செயல்பாட்டுக்கு நான்தான் காரணம் என்றால் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். கிரிக்கெட்டை மிகவும் நேசிக்கிறேன். ஓய்வு பெறும் எண்ணம் இப்போதைக்கில்லை. எனது தலைமைத்துவத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எனது திறனில் சந்தேகம் கொண்டு தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுமாறு தெரிவித்தால் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன்.
தலைமைப்பொறுப்பு என்பது கூடுதல் சுமை. அதனை இன்று வரை திறமையாகவே கையாண்டுள்ளேன். வாய்ப்புக் கிடைத்தால் இனியும் எனது பணியைத் தொடருவேன். எமது மோசமான செயற்பாட்டுக்காக இந்திய மக்கள் எம்மை மன்னித்துக்கொள்ளுங்கள் என்றார்.
மேலும் அவர் தெரிவிக்கையில் துடுப்பாட்ட வரிசையின் சொதப்பலே தோல்விக்கு மிகமுக்கியமான காரணம். பங்களாதேஷிடம் நிறைய மாற்றம் தெரிகிறது. சகல துறைகளிலும் அந்த அணி முன்னேற்றம் கண்டுள்ளது. என்றார். (ம)








வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான உடல்நல வேலைத் திட்டம் நேற்று திங்கட் கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வின் சில பதிவுகள். (ம-23)

# யோகாவில் கலந்துகொண்ட முரளிதரன்

சர்வதேச யோகா தினத்தையொட்டி கொழும்பில் நேற்று நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் இலங்கை



அணியின் முன்னாள் வீரரான முத்தையா முரளிதரன் கலந்துகொண்டார்.
உலகம் முழுவதும் நேற்று யோகா தினம் கடைபிடிக்கப்பட்டது. இதன் ஒரு கட்டமாக கொழும்பிலும் யோகா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிகாலையிலே யோகா நிகழ்ச்சி நடைபெறும் பகுதிக்கு வந்த முன்னாள் இலங்கை அணியின் நட்சத்திர பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், ராணுவ அதிகாரிகள் மற்றும் ஆயிரக்கண்க்கான பொதுமக்களுடன் யோகாவில் கலந்துகொண்டார். (ம)



# மினி உலகக்கிண்ணத்தில் பங்களாதேஷ்

இந்தியாவுடனான ஒருநாள் தொடரைக் கைப்பற்றியதன் மூலம் பங்களாதேஷ் அணி மினி உலகக்கிண்ணம் என்று அழைக்கப்படும் சம்பியன்ஸ் லீக் தொடருக்கு தகுதி பெறும் வாய்ப்பினை எட்டியுள்ளது.
அடுத்து வரும் மினி உலகக்கிண்ணத் தொடர் 2017ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறுகிறது. தொடரை நடத்தும் நாடு மற்றும் தரவரிசையில் உள்ள முதல் 7 அணிகள் என்று மொத்தம் 8 அணிகள் மட்டுமே இந்த தொடருக்கு தகுதி பெறமுடியும். தற்போது பங்களாதேஷ் அணி 93 புள்ளிகளுடன் 7ஆவது இடம் பிடித்து மினி உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி பெறுவதற்கான புள்ளிகளை எட்டி விட்டது. இதனால் முன்னணி அணிகளான மேற்கிந்திய தீவுகள், பாகிஸ் தான் இவற்றில் ஒன்றுதகுதி வாய்ப்பை இழக்க நேரிடும் போலத் தெரிகிறது. (ம)

# ஹபீஸுக்கு சிக்கல்

பாகிஸ்தான் அணியின் முன்னணி சகலதுறை வீரரான ஹபீஸின் பந்துவீச்சு இலங்கை பாகிஸ்தான் தொடரிலும் சந்தேகத்துக்கு ஏற்ற வகையில் இருப்பதாக மீண்டும் முறையிடப்பட்டுள்ளது.
ஹபீஸின் பந்துவீச்சு சந்தேகமான வகையில் இருப்பதாக கடந்த ஆண்டு குற்றம் சாட்டப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் சென்னையில் நடந்த பரிசோதனையில் ஹபீஸ் சரியான முறையில் வீசி தொடர்ந்து பந்துவீச அனுமதிக்கப்பட்டார்.
இந்த நிலையில் முகமது ஹபீஸின் பந்துவீச்சு குறித்து மீண்டும் நடுவரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிராக நடந்த முதல் டெஸ்டில் பாகிஸ்தான் 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த டெஸ்டில்தான் ஹபீஸின் பந்துவீச்சு சந்தேகம் தரும் வகையில் இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஒரே ஆண்டுக்குள் ஹபீஸ் மீது இதே மாதிரியான புகார் 2ஆவது முறையாக முன்வைக்கப்படுவதால் அவருக்கு ஒரு ஆண்டுகால தடை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது. (ம)



# இங்கிலாந்து நியூஸிலாந்து ரி-20 ஆட்டம் இன்று

இங்கிலாந்து, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவதும் இறுதியுமான ஒரேயொரு ரி–20 ஆட்டம் இலங்கை நேரப்படி இரவு 11 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
ஒருநாள் ஆட்டத்தில் கிடைத்த தோல்விக்கு பதிலடிகொடுக்கும் வகையில் நியூஸிலாந்து தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் இங்கிலாந்தும் 5 புதுமுக வீரர்களை களமிறக்குகிறது. பொதுவாக புதுமுக வீரர் ஒருவரின் அறிமுக ஆட்டத்தில் அவரது செயற்பாடு அபாரமாக இருக்கும் என்பது புள்ளிவிபரம். இந்த நிலையில் ஐந்து புதுமுகங்களும் இணைந்து இங்கிலாந்தின் வெற்றியை உறுதிப்படுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்புக்கள் பரவலாகியுள்ளன. அதேநேரம் ரி–20 ஆட்டமென்றால் வேடிக்கைகளை வரிசையாக காட்டும் மக்கலத்தின் கறுப்புத் தொப்பிகளும் எளிதில் சரணடையமாட்டார்கள் என்றும் சொல்லிக்கொள்ளலாம். கிண்ணத்தைக் கைப்பற்றப் போவது யார்? விடிந்தால் தெரிந்துவிடும். (ம)



கீரிமலை கூவில் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் புதிய மைதானம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.
[illegible] விருந்தினர்களாக வலிவடக்கு பிரதேசசபை துணைத் தவிசாளர் ச.சஜீவனும் [illegible] கோவில் ஆதீனகர்த்தாவும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GATEWAY CICT




GATEWAY Language Centre

**Diploma in Web Designing**
* HTML
* CSS
* JavaScript
* PHP
* Mysql

**Certificate in Java Basics**

**New ICDL Base- 80 Hours**
* Computer Essentials - 7 & 8
* Online Essentials - IE 9.0 & Outlook 2010
* Word Processing - 2007/2010/2013
* Spreadsheets - 2007/2010/2013

**Computer Kids Programme (After School - grade1-5)**
* Key Stage 1 - Grade 1-3
- Computer Basics
- Painting Pictures
- Typing WordPad & Notepad Application
- Games
* Key Stage 2 - Grade 3-5
- Introduction to Computers
- Ms Word 2007
- Ms Excel 2007
- Ms PowerPoint2007

FAST TRACK PROGRAM

**Let's Experience and Promote Your Professional Skills through English**
* A skills integrated, learner centered participatory English Course for Adults

**English courses for Primary (Grade 5-7)**
* Creative Writing 1
* Creative Writing 2
* Speaking with Confidence
* Catch the Reading Bug 2
* Creative writing 3
* Speaking with confidence
* Creative Writing 3

**For more Details**
GATEWAY CICT
LANGUAGE & ICT CENTRE JAFFNA
No. 19, College Road, Neeraviady, Jaffna -021 567 3155/021 221 7771


## கட்டட மேற்பார்வையாளர்களுக்கான பதவி வெற்றிடம் விண்ணப்பம் கோரல் (Site Supervisors)

Hari Engineers & Contractors ஆகிய எமது நிறுவனத்தில் மேற்படி பதவிக்கான வெற்றிடம் உள்ளது. அப் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்படுகின்றது. எதிர்வரும் 29.06.2015 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு கல்வித் தகைமை சான்றிதழ்களும், அனுபவச் சான்றிதழ்களையும் எடுத்துவருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Contact No:
021 226 1400,
076 615 5385.

Hari Engineers & Contractors
Malaisanthi,
Alvai Main Road, Alvai.

## மற்றுமொரு கிண்ணம்

ஜெரி வெபர் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் கிண்ணம் வென்று அசத்தியுள்ளார்.

இறுதி ஆட்டத்தில் இத்தாலியின் செப்பியுடன் மோதிய பெடரர், முதல் செற்றினை சற்று போராடிக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றினை 6–4 என்ற அடிப்படையில் இலகுவாகக் கைப்பற்றிய பெடரர் 2–0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணத்தை கைப்பற்றி அசத்தினார்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா (மணற்தறை சாமி அம்மா) தர்மரெட்ணம்



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், மணல்த்தறையினை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா தர்மரெட்ணம் (மணல்த்தறை அம்மன் சாமி அம்மா) 20.06.2015 சனிக்கிழமை இறைசமாதி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் சுந்தரம் பிள்ளை - சீதேவிப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை தர்மரெட்ணம் அவர்களின் அன்புமிகு மனைவியும் தவயோகசாந்தினி(பூவா), ஜீவசாந்தினி(ஜீவா) காலஞ்சென்ற அரவிந்தநாதன்(சிவா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகரட்ணம் (கனடா)காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நித்தியானந்தம், மார்ஷல் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, பரமேஸ்வரி, பாக்கியம், பரமேஸ்வரன், நவரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் சிவகுமார், அசோகன், விக்கிரமன், விஜயன், சுரேஸ், கலா, பிரபாகர்(ரமேஸ்) ஆகியோரின் சிறியதாயாரும் கௌரி, ரஞ்சி, திலகா, பவா, மாலா, தயா, பத்மப்பிரியா ஆகியோரின் சிறிய மாமியாரும் கண்ணன்ரி சாமி அம்மாவின் பெறாமகளும் கிஷோர், கார்த்திகா, தர்மிகா, அபி, சனசாந், கஷ்னிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.06.2015) செவ்வாய்க் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

| | | |
|---|---|---|
| நித்தியானந்தம் | 416 412 0159 | கனடா |
| சிவகுமார் | 077 926 6380 | யாழ் |
| விக்கிரமன் | 077 103 6855 | கொழும்பு |
| ரமேஸ் | 077 791 7658 | யாழ் |

(61198)
(3.6.9)

28/5, மணற்தறை லேன்,
கந்தர்மடம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி கணபதிப்பிள்ளை இலட்சுமி

தோற்றம்
09.06.1958



மறைவு
04.07.2014

**எங்கள் குலவிளக்கு எம்மைவிட்டு பிரிந்து ஆண்டொன்று ஆனாலும் ஆறாது நம் துயரம்.**

இன்று 23.06.2015 அன்னாரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெற்று அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

குடும்பத்தினர்,
பெரியதம்பிரான் கோவிலடி, அராலி தெற்கு. (61268)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சரஸ்வதி சபாரட்ணம்



யாழ் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை அதிபர் சீ.சிவனேசன் அவர்களின் அன்பு மாமியார் திருமதி சரஸ்வதி சபாரட்ணம் அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை


## வாடகைக்கு

ஒரு அறை, குசினி, கோல், இணைந்த குளியலறை, வைமன் வீதிக்கு அருகில் நல்லூரில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. அரசாங்க உத்தியோகத்தர் குடும்பம் 2 அல்லது 3 பேர் உள்ளவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும். முற்பணம் 250,000/=
தொடர்பு: 071 3044050

விஸ்டம்
**விஸ்டம்**
தொழில் நுட்பக் கல்லூரி
இல.475 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் (கல்வளர் பண்ணை சிவன்கோவிலடி)

வடக்கின் தலைசிறந்த தொழில்நுட்ப வளவாளர்களை ஒருங்கிணைத்து விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரியில் நடாத்தப்படும்

**A/L 2015 தொழில் நுட்ப பிரிவு**
மாணவர்களிற்கான **விசேட செயலமர்வு**

26,27.06.2015 { பொறியியல் தொழில்நுட்பம் / உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
28.06.2015 - தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்

- எதிர்பார்க்கை வினாக்களும் விடைகளும்
- அலகுரீதியான குறிப்புக்களும் விளக்கங்களும்
- மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்
- இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மாதிரி வினாத்தாளுக்கான பூரண விளக்கங்களும் விடைகளும்
- எதிர்பார்க்கை செயன்முறைகள் தொடர்பான முழுமையான விளக்கங்கள்

காலை 8.30 ஆரம்பம்

முற்பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் தொடர்பு : 0772487774

**Laptop பிரியர்களே...**
மிகக்குறைந்த விலையில் Lenovo, Dell, Hp Laptop களை பெற்று கொள்ளலாம்.



Pro Core 2 due 1.8Ghz
Ram DDR II 2Gb
H.Disk 80Gb
DVD Combo
Rs.13500/-
Warranty 01 Month

Micro System Manipay 077 2487082 021 2256165

## வாடகைக்கு விடப்படும்



பைக்கோ (JCB) வாகனம் மணித்தியாலத்துக்கு 3000/=படியும், ஒப்பந்த அடிப்படையிலும் வாடகைக்கு விடப்படும்.

| | | |
|---|---|---|
| தொடர்பு: | உடுப்பிட்டி | : 077 551 3684 |
| | நீர்வேலி | : 077 557 9205 |
| | யாழ்ப்பாணம் | : 077 004 8767 |


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
17.10.1949



மறைவு
26.05.2015

### யோகம்மா வேலாயுதம்

கடந்த 26.05.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் வேலாயுதம் யோகம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.06.2015) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், எதிர்வரும் 25.06.2015 வியாழக்கிழமையன்று வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறவுள்ளதால் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாயின் இறுதி மரியாதையில் கலந்து, ஆறுதல் கூறியோர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

சந்தையடி,
வட்டக்கச்சி. குடும்பத்தினர்.




Rotary

## யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்

### சர்வதேச விதவைகள் தினத்தை முன்னிட்டு நடாத்தும் வாழ்வாதார உதவித்திட்ட நிகழ்வு

| | |
|---|---|
| காலம் | : 23.06.2015, செவ்வாய்க்கிழமை, பி.ப 3.00 மணி |
| இடம் | : சொர்ணாம்பிகை மண்டபம், தியாகி அறக்கொடை நிலையம், யாழ்ப்பாணம் |
| பிரதம விருந்தினர் | : றொட்டேரியன் கௌரி ராஜன் (மாவட்ட ஆளுநர் - 3220) |
| சிறப்பு விருந்தினர் | : ஸ்ரீ.ஏ.நடராஜன் (இந்திய துணைத் தூதுவர் - யாழ்ப்பாணம்) |
| | றொட்டேறியன் ஈ.சரவணபவன் நா.உ ( முன்னாள் தலைவர்) |
| | றொட்டேறியன் சூரி ராஜன் (முன்னாள் மாவட்ட ஆளுநர் - 3220) |
| | திரு. கே.ஏபிரகாம் ராகுலன் (பிராந்திய முகாமையாளர் - ஏ.டீ.ரி) |

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.